
# சந்நிதி

பல்சமயக் காலாண்டிதழ்

மார்கழி 98



பகவான் சத்திய சாயி
அவதார சிறப்பு மலர்

சிவகாமி அம்மாள்
பப்ளிகேஷன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவுஸ்திரேலியாவில் சாயி ஒளி

திரீஸ் என்ற அவுஸ்திரேலிய பெண் ஒரு சாயி அடியவர். 1995ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9ம் திகதி அவரது வழிபாட்டு அறையில் இருந்த மரத்துண்டு தானாகவே தீப்பிடித்தது. அப்போது தோன்றிய ஒளி பகவானின் வேண்டுகோளின் பேரில் மெழுகு இட்டு தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது விரிந்து செல்லும் ஒளியின் அடிமட்டம் எனப்படும் "திரி" விஞ்ஞானிகளுக்கே ஒரு விந்தை திரிஸ் தனது கணவருடன் சாயி ஒளியினை ஏந்தியவாறு பகவான் பாபாவின் ஆசிகளைப் பெறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Shrine
சந்நிதி
பல்சமய காலாண்டிதழ்

மலர் 1 இதழ் 4

மார்கழி 1998

ஆசிரியர்
வே. வரதசுந்தரம்



வெளியீட்டாளர்கள்
சிவகாமி
அம்மாள்
பப்ளிகேஷன்ஸ்

39, 36 ஆவது ஒழுங்கை
கொழும்பு-6
இலங்கை
தொலைபேசி: 596253

# ஆன்மீக நெஞ்சங்களே !

## பத்தர்காள் இங்கே வம்மின்

பக்தர்கள் இங்கே வம்மின் உங்கள் பாசம்தீரப் பணியின் என்பது மணிவாசகர் திருவார்த்தை.

வெறுமனே திட்டமிடல், மனித முயற்சி காரணமாக அனைத்தும் நிகழ்வதாக நாம் தப்புக் கணக்குப் போடுகிறோம்.

இறையருளின்றி யாரும் எதனையும் சாதிக்க முடியாது.

இறைவனின் சங்கல்பம் மனிதன் மூலம் நடைபெறுகிறது. ஆனால் மனிதனோ தனது சாதனையென்று இறுமாப்புடன் கொக்கரிக்கிறான்.

தன்னுளேயும், பிறரிடத்தும் இறைவன் உறைகிறான், என்ற பேருண்மையை உணரும் போது மனிதன் தன்னை உணர்வான்.

இறைவன் மனிதன் முன் குருடனாக, நோயாளியாக, முதியவனாக, அனாதைக் குழந்தையாக, அகதியாக, குற்றவாளியாக, பைத்தியகாரனாக, சீவராசிகளாகத் தோன்றுகிறான்.

இவ் வடிவங்களைக் கடந்து இறைவனைக் காணவும், நேசிக்கவும் அவர்களுக்கு சேவை செய்யவும் நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

அப்போது விருப்பு வெறுப்பற்ற அருளுள்ளம் விரியும்.

இவ்வாறு பகவான் சத்திய சாயி பாபா அடிக்கடி அருளுரை வழங்குவார்.

"இங்கே வம்மின் உங்கள் பாசம் தீரப்பணிமின்" என்று மணிவாசகப் பெருமான் அழைக்கிறார்.

பிரார்த்தனையால் இறை நம்பிக்கையும், இறை நம்பிக்கையால் யாரிடத்தும் அருளன்பும், அருளன்பினால் பலன்கருதாப் பணியும் மலரும்.

அத்தகைய இறையன்பும், இறைவழிபாடும் பற்றற்ற மனப்பக்குவ நிலைக்கு எம்மை இட்டுச் செல்லும் என்பதை 'பாசம் தீரப்பணிமின்" என்று மணிவாசகப் பெருமான் பாடுகிறார்.

*முத்தனை முதல் சோதியை முக்கண்*
*அப்பனை முதல் வித்தினைச்*
*சித்தனைச் சிவலோகனைத் திரு*
*நாமம் பாடித் திரிதரும்*
*பத்தர்காள் இங்கே வம்மின் நீர் உங்கள்*
*பாசம் தீரப் பணிமினோ !*
*சித்தம் ஆர்தரும் சேவடிக்கண் நம்*
*சென்னி மன்னித் திகழுமே !*

*- வே. வரதசுந்தரம்*
*ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன்ஸின் புரவலர் திருமதி பாலாம்பிகை சிவசுப்பிரமணியம்

# அவர்களின் ஆசிச் செய்தி.



தனது உற்றார் உறவினருக்கு மட்டுமன்றி தன்வாழ்வில் தான் சந்தித்த அத்தனை பேருக்கும் சேவை ஆற்றியவர் சிவகாமி அம்மா. திருகோணமலை பத்திரகாளி அம்பாளின் பக்தையாக தவவாழ்வு வாழ்ந்த அருளுள்ளம் படைத்தவர் அவர்.

அன்னாரின் நினைவாக உருவான சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன்ஸ் ஆரம்பித்து ஓராண்டு நிறைவு காண இறையருள் கைகூடியுள்ளது. பகவான் சத்திய சாயிபாபா போதிக்கும் உலகளாவிய அன்பு நெறி எமது இரு சஞ்சிகைகளான சந்நிதி, Shrine ஆகியவற்றின் குறிக்கோள்.

எமது வெளியீடுகளுக்கு ஆதரவு நல்கும் வாசகப் பெருமக்களுக்கு எமது நன்றி.



# சந்நிதி தரிசித்தேன்

வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்
*முது நிலை விரிவுரையாளர்,*
*(சப்ர கமுவ பல்கலைக்கழகம்), பரம்பரை அறங்காவலர்,*
*நயினை நாக பூஷணி அம்மன் தேவஸ்தானம்.*

பகவான் சத்திய சாயி பாபாவின் திருவுருவப்படம், ஆஞ்சநேயர் சிவலிங்கத்தைத் தொட்டு நிற்பது இராமபிரான் திருவுருவோடு இணைந்ததாக சந்நிதி மலர்கள் அமைந்தது மகிழ்வு தந்தன.

தெய்வநம்பிக்கை தரும் சிந்தனைக் கட்டுரைகள் படங்கள் என்பன கருத்துக் கருவூலங்களாய் மிளிர்கின்றன. திருகோணமலை பத்திரகாளி அம்பாள் சிறப்பு மலரிலே எமது குலதெய்வம் நயினைநாக பூஷணி அம்பாளும் இடம்பெற்றிருப்பது தெய்வீக அதிசயமே.

அம்பாள் "அதிசயமான வடிவுடையாள்" என்பது அபிராமி அந்தாதி வரிகள். உண்மையில் எமது திருநாட்டில் இன்று சமயவுணர்வு பரப்பும் சிறந்த சஞ்சிகை "சந்நிதி" என்றே நான் கருதுகிறேன்.

கவர்ச்சியுடனும், கருத்துச் செழுமையுடனும், மாணவர்களின் ஆக்கங்களுடனும், அவரவர் படங்களுடனும் வெளிவரும் அழகு கண்ணுக்கும் கருத்துக்கும், உணர்வுக்கும் மகிழ்வு தருகிறது. அறிவுக் கருவூலமாகப் பரிணமித்து, ஆய்வு நூலாகவும் விசாலித்துக் கிளை பரப்ப எல்லாம் வல்ல நயினை நாக பூஷணி அம்பாளின் பரிபூரண திருவருளை இறைஞ்சி எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

*சுபம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23ம் நாள் நவம்பர் மாதம் ஓர் புனித நாள் அன்று தான் நம் பகவான் சத்திய சாயி பாபா அவதரித்த நாள் 23–11–1926. இந்த நன்னாளில் (பிறிதொருவருடத்தில்) பங்களூருக்கு அருகிலுள்ள ஜல காலி என்னும் இடத்தில் ஒரு பாலன் பிறந்தான். அவனின் பிறப்பை பற்றியது தான் இந்தச் சிறுகதை அவன் நாமம் கிருஷ்ண கிசோர். குட்டிக் 'கிருஷ்ணன்"

சக்கரவர்த்தி அவர்கள் வங்காள தேசத்திலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர். இவரது குடும்பத்தினரும், அவர்களின் முதாதையினரும் பழமை வாய்ந்த ஓர் ஆத்மீக இயக்கத்தின் கொள்கைகளைப் பழுதறக் கடைப்பிடித்து, அதன்படி ஒழுகினர். காலம் காலமாக இந்த இயக்கத்தின் தலைமைப் பதவியை சக்கரவர்த்தி குடும்பத்தினரே வகித்து வந்தனர்.

சக்கரவர்த்திக்கு 17 வயது நடக்கும் பொழுது தங்தையைப் பறிகொடுத்தார். அவர் இறக்கும் பொழுது தந்தையே ஸ்தாபனத்தின் தலைவராக இருந்தார். தந்தை வகித்த பதவியை தனயனை ஏற்கும்படி வேண்டப்பட்டது. வயது, கல்வி, தகுதி, மதிப்பு மற்றும் போதிய அனுபவமின்மையால், பொறுப்பு மிகுந்த பாரிய பதவியைச் சக்கரவர்த்தி ஏற்க மறுத்து விட்டார்.

சக்கரவர்த்தி கல்கத்தா சென்று அங்கு புகழ் பெற்ற ஒரு பத்திரிகையின் காரியாலயத்தில் வேலைக்கு அமர்ந்தார். ஓய்வு நேரத்தில் படித்து முதுகலைமானிப் பரீட்சைக்கு தேர்வு எழுதினார். பட்டமும் பெற்றார். அப்பொழுது இரண்டாம் மகாயுத்தம் மூண்டது. இவருக்கு இந்தியா விமானப்படையில் சேரும் வாய்ப்புக் கிட்டிற்று. சேர்ந்து ஒரு சில மாதங்களில் விமானப்படையினர் நடத்திய விசேஷத் தேர்வில் திறம்பட எழுதி விமான ஓட்டியாகத் தெரிவு செய்யப்பட்டார். இவரின் ஆற்றலின் திறமையாலும், அந்தஸ்திலுள்ள உயர்ந்த அதிகாரிகளின் நல்லெண்ணத்தைப் பெற்றதாலும் வெகு விரைவில் ஒரு ஆகாயப்படை அணிக்குத் தலைவராக (Squadron Leader) உயர்வுப்பெற்றார். இயற்கையாகவே எதற்கும் பயப்படாத உள்ளம் படைத்த சக்கரவர்த்தி எந்தக் கடினமான அபாயகரமான வேலைகளிலும் பங்கு கொள்ளப்பின் நிற்கமாட்டார். விமானம் பறக்கும் பொழுது அனேக ஆயிரமடி உயரத்திலிருந்து "பரசூட்" (Parachute)மூலம் கீழே பாய்வதிலும் திறமை பெற்று முதல்வராக தேர்ந்து எடுக்கப்பட்டார். பயிற்சியை முன்னிட்டு பல முறை இங்கிலாந்து சென்று வந்தார். திறமை அடிப்படையில் இந்திய விமானப்படை பயிற்சி ஸ்தாபனத்திற்குத் தலைவராக உயர்த்தப்பட்டார். சுருங்கச் சொல்லின் இந்திய விமானப்படை வட்டாரத்தில் இவர் பெரும் கீர்த்தி வாய்ந்த அதிகாரியாக கணிக்கப்பட்டார்.

அதிர்ஸ்டமும், துரதிஸ்டமும் எங்கள் உடன் பிறப்புக்கள் அல்லவா? சக்கரவர்த்தியின் குடும்பத்தினரையும் துரதிஸ்டம் தீண்டத் தவறவில்லை.

இவரின் வேகமான முன்னேற்றத்தால் சக ஊழியர்களின் பொறாமையைச் சம்பாதித்தார். போதாத காலம், அதிகாரப் பெருமையினால் சற்று தலைக்கனமும் இவருக்கு ஏற்பட்டது. முடிவு இவர் யம்மு காஷ்மீரிலுள்ள ஒரு சிறிய தளத்திற்குத் தலைவராக மாற்றப்பட்டார். இந்த மாறுதல் இவரின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்திற்று.

# குழந்தைப் பாக்கியம் இழந்த குடும்பத்துக்கு மகப்பேறு அருளிய மகான்

யம்மு காஷ்மீரில் இவருக்கு ஒதுக்கப்பட்ட வாசஸ்தலம் இவரின் உயர்ந்த அந்தஸ்திற்கு உகந்ததாக அமையவில்லை. மிகவும் குளிர்ந்த தேசம். மழையும் புயலும் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். வீட்டின் கூரை பழுதடைந்திருந்ததால் அறைகள் சதா ஒழுகிக்கொண்டே இருந்தன. அறைகளை சூடேற்றும் சாதனங்களும் சீராக இயங்கவில்லை. இவற்றுடன் மனைவியும் கற்பம் தரித்தாள். தலைப்பிரசவம். மனைவி, கவலையற்றிருக்க வேண்டிய நேரம். அன்றாடம் வீட்டில் அனுபவிக்கும் பல வசதியீனங்களினால் பாதிக்கப்பட்டு மனைவி மனோ தைரியத்தையும் இழந்தாள். அவளின் உடல் நலம் மிகவும் மோசமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்குத் தள்ளப்பட்டு குழந்தையும் இறந்து பிறந்தது. அத்துடன் மனைவியின் கர்ப்பப்பையும் பாதிப்படைந்தது. சொற்ப காலத்தில் அது ஒரு தொற்று நோயாக வெளிப்பட்டது. காலக்கிரமத்தில் கணவனையும் இந்த நோய் விட்டு வைக்கவில்லை.

நோயைத் தீர்க்கப் பிரசித்தி பெற்ற பல வைத்திய கலாநிதிகளின் ஆலோசனைகளை நாடினர். அவர்கள் அனைவரும் இந்த வியாதி மாற்ற முடியாதது அத்துடன் இருவரும் குழந்தை பெறும் பாக்கியத்தையும் முற்றாக இழந்து விட்டீர்கள் என்று ஏகமனதாக தீர்ப்பு வழங்கினர்.

பிள்ளைப் பாக்கியமற்று, ஆரோக்கியம் சிதைபட்டு, தொழிலில் முன்னேற்றம் தடைப்பட்டு வசிக்கும் இல்லத்திலும் வாழமுடியாத பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். வேறு ஒருவராயின் இந்தக் கஷ்டங்களிலிருந்து விடுபட தவறான வழிகளை பின் பற்றி தங்கள் வாழ்க்கையை நரகமாக்கியிருப்பர். ஆனால் இவர்களோ இவர்கள் பெற்றோர் செய்த புண்ணிய பலன்களினாலோ என்னவோ இந்தக் கவலைகளிலிருந்து விடுபட ஆத்மீகப் பாதையைப் பின்பற்றினர்.

ஸ்ரீ சீரடிபாபாவின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூல்கள் இவர்கள் கைக்குக் கிடைத்தன அந்த நூல்களைத் திரும்பத்திரும்ப படித்தனர். இருவரும் சீரடி பாபாவிடம் சரணடைந்தனர். அவர்கள் மனமும் சற்று அமைதியடைந்தது. இவர்களின் தூய அன்பினால் கவரப்பட்ட சாயி நாதர். இவர்களுக்கு அருள் பாலிக்கத் தொடங்கினார்.

எதிர்பாராத விதத்தில் சக்கரவர்த்தி பங்களூருக்கு அருகாமையிலுள்ள ஜலகா என்ற தளத்திற்கு மாற்றப்பட்டார். அங்கு வசித்த சக வங்காளிகின் சினேகிதம் இவருக்குக் கிட்டிற்று. அவர்களுள் பேராசிரியர் பனார்ஜியும் ஒருவர்.

இவர்கள் பங்களூருக்கு அருகாமையில் வசித்ததினால் பகவான் சத்தியசாயி பாபாவைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டார்கள். பகவான் சத்தியசாயி பாபா சீரடியின் மறு அவதாரமென்றும். கேள்விப்பட்டார்கள். பகவானைப் போய் நேராக சந்திப்பதற்கு மிகவும் ஆர்வம் அடைந்தனர். தங்கள் நண்பன் பேராசிரியரையும் தங்களுடன் வரும்படி அழைத்தார்கள்.

பேராசிரியர் "நான் பாபாவைப்பற்றி பல விதமாகக் கேள்விப்பட்டுள்ளேன். ஆகையால் நான் அவரைச் சந்திக்க விரும்பவில்லை" என்று பகர்ந்தார். சக்கரவர்த்தியோ அவரை விடுவதாகவில்லை. விடாப்பிடியாக நின்று ஓய்வு நாளில் சக்கரவர்த்தியும் பேராசிரியர் பனார்ஜியும் இன்னும் ஒரு விஞ்ஞான பட்டதாரியும் வைட்பீல்ட் சென்றனர்.

ஆச்சிரமவாசலையடைந்ததும் ஒரு பையன் "டாக்டர் பனார்ஜி உங்கள் கூட்டத்தினருக்கு 9ம் நம்பர் அறையை பாபா ஒதுக்கி வைத்துள்ளார் திறப்பு இதோ உள்ளது பெற்றுக் கொள்ளவும்" என்றான்.

சக்கரவர்த்திக்கு இது ஒரு பெரும் வியப்பாக இருந்தது. தாங்கள் அன்று வைட்பீல்ட் போவதை பற்றி அவர்கள் எவருக்கும் அறிவிக்கவில்லை. டாக்டர் பனார்ஜியோ ஒன்றும் நடவாதது போல் அமைதியாக இருந்தார்.

தங்கள் பொருட்களை எல்லாம் அவர்களின் அறையில் வைத்து விட்டு பாபாவைச் சந்திக்கச் சென்றார்கள். பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் பாபாவின் தரிசனத்திற்கு காத்திருந்தனர்.


செ. நடேசபிள்ளை

பாபா மேல் மாடியில் வந்து நின்றார்; சக்கரவர்த்தி பாபாவை பார்த்ததும் தான் ஒரு காலத்தில் இவருடன் மிகவும் அன்னியோன்யமாகப் பழகினவராகவும், பிறகு அவரின் தொடர்பு அற்று அவரை இன்று தான் சந்திப்பதாக தோன்றிற்று. ஏதோ தான் தொலைத்த விலை மதிப்புள்ள பொருளைத் திரும்பவும் பெற்றவரடையும் குதூகலத்தை அடைந்தார். கண்ணில் நீர் சுரந்தது.

அவர்கள் சென்ற அன்றே அவர்கள் மூவருக்கும் பாபா பேட்டி அளித்தார். டாக்டர் பனார்ஜியை கட்டி அணைத்து "கடைசியாக என்னிடம் வந்து விட்டாய்" என்று கூறி அவருக்கு ஒரு அழகிய பதக்கத்தை கையை அசைத்து காற்றிலிருந்து உண்டாக்கிக் கொடுத்தார். மூன்று பேருடனும் ஆத்மீகத்தைப் பற்றி 45 நிமிடங்கள் கதைத்தார். அதன்பின் சக்கரவர்த்தியின் கைகளைச் கோர்த்து ஒரு கிண்ணம் போல வடிவம் அமைத்தார். பின் தன் கையை மேலே உயர்த்த அசைத்ததும் பாபாவின் விரல்கள் ஊடாக விபூதி சக்கரவர்த்தியின் உள்ளங் கையில் நிறைய சொரிந்தது.

அவ்வளவு விபூதியையும் கீழே சிதற விடாமல் விழுங்கும்படி கட்டளை இட்டார் சக்கரவர்த்தியும் பாபாவின் கட்டளைக்குப் பணிந்தார். தான் அனுபவிக்கும் இன்னல்களை எல்லாம் பாபாவிற்குச் சொல்ல வேண்டுமென்று விரும்பினார். ஆனால் அந்த முயற்சி பலிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் காலை மூவரையும் இன்னும் ஒரு சந்திப்பிற்கு அழைத்தார் இரண்டாம் முறையும் விபூதி வரவழைத்து சக்கரவர்த்தியை உண்ணும்படி பணித்தார். சக்கரவர்த்தியும் பாபா பணித்தபடி மிகவும் விருப்பமுடன் உண்டார். "இவை சுவையும் மணமும் நிறைந்ததாக இருக்கிறது" என்று மிகவும் பக்தியுடன் பாபாவிடம் தெரிவித்து மூவரும் பாபாவிடம் விடைபெற்று வெகு உற்சாகத்துடன் பங்களூர் நோக்கிப் புறப்பட்டனர்.

அடுத்தநாள் விடிய சக்கரவர்த்தி விழித்தெழுந்தார் எழுந்ததும் அவரை பீடித்திருந்த தொற்று நோய் அவரை விட்டு அகன்றதை உணர்ந்தார். மனைவியிடம் சொல்வதற்கு வாயெடுத்ததும், அவளும் தான் தொற்று நோயிலிருந்து பூரணமாக விடுபட்ட சந்தோஷமான செய்தியை வெகு ஆனந்தத்துடன் கணவனிடம் கூறினாள். இருவரும் பரவச நிலை எய்தினார். அவர்கள் கண்களில் இருந்து ஆனந்தக்

அடுத்தநாள் விடிய சக்கரவர்த்தி விழித்தெழுந்தார். எழுந்ததும் அவரைப் பீடித்திருந்த தொற்று நோய் அவரை விட்டு அகன்றதை உணர்ந்தார். மனைவியிடம் சொல்வதற்கு வாயெடுத்தார்.

அவளும் தான் தொற்று நோயிலிருந்து விடுபட்ட சந்தோஷமான செய்தியை வெகு ஆனந்தத்துடன் கணவனிடம் கூறினாள்.

இருவரும் பரவச நிலை எய்தினர் அவர்கள் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் அருவி போலப் பாயத் தொடங்கியது.

கண்ணீர் அருவி போலப் பாயத் தொடங்கிற்று. இருவரும் பூரணமாக பாபாவிடம் சரணடைந்து அவரின் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தனர்.

அடுத்த மாதம் சக்கரவர்த்தியும் டாக்டர் பனார்ஜீயும் தங்கள் குடும்பத்துடன் பாபாவைத் தரிசிக்க புட்டப்பர்த்திக்குச் சென்றனர். இவர்களுக்குப் பேட்டி அளிக்கும் போது பாபா சக்கரவர்த்தியின் மனைவியை நோக்கி "இந்த வருடம் உனக்கு ஓர் ஆண் மகன் பிறக்கும் என்றார் இதை பாபா சொன்னதும் சக்கரவர்த்தி சிரித்தார். சிரிப்பதற்கு காரணத்தைக் கேட்டார் பகவான் பாபா. சக்கரவர்த்தி பாபாவை பக்தியுடன் வணங்கி பாபா 4 பிரசித்தி பெற்ற வைத்திய கலாநிதிகள் என்னையும் என் மனைவியையும் வெகு நுணுக்கமாக நீண்ட சோதனைக்கு உட்படுத்தி எங்களுக்கு இனிமேல் பிள்ளைப்பாக்கியம் உண்டாவதற்கான தகுதியை இருவரும் பூரணமாக இழந்து விட்டதாக அறிவித்தார்கள்.

ஆனால் பாபாவோ எங்களுக்கு குழந்தை கிடைக்குமென்று சொல்கிறீர்கள் என்றார்.

பகவான் சக்கரவர்த்தியின் கண்களை உற்று நோக்கி அவரின் கைகளினுள் குறிகாட்டும் இரு விரல்களையும் ஒன்றோடொன்று குறுக்காக வெட்டும் பாவனையில் வைத்து "சாமி சங்கற்பம் செய்தால் அது தவறாது நடந்தே தீரும். இந்த வருடம் நவம்பர் மாதம் ஓர் உன்னத ஆத்மா உங்களிடம் வருகிறது நானே நேரே வந்து குழந்தைக்கு நாமகரணம் செய்து வைப்பேன்" என்று பகர்ந்தார். ஆத்மீகக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த சக்கரவர்த்தி தான். ஒரு தெய்வீக புருஷர் முன் நிற்பதாக உணர்ந்தார். சக்கரவர்த்தியின் மனைவிக்கு இராமரின் உருவம் பொருந்திய ஒரு பதக்கத்தையும் கையை அசைத்து எடுத்துக் கொடுத்தார். சங்கரவர்தியின் மனைவி கிருஷ்ணபக்தை. குட்டிக் கிருஷ்ணனில் கொள்ளை ஆசை. தன் கணவனிடம் இந்தக் குறையை அடிக்கடி எடுத்துச் சொல்வாள். சக்கரவர்த்தியோ தனக்கு ஒரு நற்பண்பு நிறைந்த மகன் – பாபாவின் சொற்களால் "ஒரு உன்னத சீவன்" வருவதை நினைத்து, நினைத்து புளகாங்கிதம் அடைவார்.

இந்த சந்தோஷகரமான செய்தியை வைத்திய கலாநிதிகளுக்கும் தெரிவித்தார். அவர்களோ இதைக் கேட்டு எள்ளி நகையாடினர். "சாதுக்கள், சுவாமிகளும் மலடிகளைப் பிள்ளை பிறக்க வைப்பாராகில் விஞ்ஞான ரீதியில் வைத்தியம் தேவைப்படாது" என்றார்கள்.

ஒரு யூன் மாதம் ஒரு நாள் சக்கரவர்த்தியின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு டாக்டர் பிரதம தாதியுடன் சக்கரவர்த்தி இல்லம் வந்து அவரின் மனைவியை மிகவும் நுணுக்கமாகச் சோதனை இட்டார். டாக்டர் கூறியதாவது "மன்னிக்கவும் உங்கள் மனைவி கருவடையவில்லை. எல்லாம் வாய்வின் கோளாறு".பிரதம தாதியும் டாக்டரின் தீர்ப்பை ஆமோதித்தார்.

சக்கரவர்த்தி தம்பதிகள் இந்தச் செய்திகளினால் கலவரமடைந்தார்கள். பாபா சொற்படி "இன்னும் ஐந்தே மாதங்களில் குழந்தை பிறக்க வேண்டும். இப்போ கருவுண்டாகாமல் இருந்தால் குழந்தை எவ்வாறு நவம்பர் மாதம் பிறக்கும்? பாபாவின் மேல் அவர்களுக்கு ஐயம் உண்டாயிற்று.

இது நடந்த ஒரு சில நாட்களில் பாபா டாக்டர் பனார்ஜின் வீட்டிற்கு விஜயம் செய்தார். சக்கரவர்த்தி குடும்பத்தினர் பாபாவின் தரிசனத்திற்கு அங்கு வந்து காத்திருந்தார்கள் என்று சொல்லத் தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபா வந்ததும் அவரின் காலடியில் போய் அமர்ந்தார்கள். அவர்கள் வாய் திறக்குமுன் பாபா "டாக்டர்கள் கூறியவைகளை அப்படியே கூறி "நீங்கள் கிலேசமடைய வேண்டாம். உங்கள் மகன் 23ம் திகதி நவம்பர் மாதம் உதிப்பான்" என்றார். சக்கரவர்த்தி குடும்பத்தினர் இதைக் கேட்டதும் தாங்க முடியாத பேரானந்த நிலையில் மிதந்தனர். பாபாவின் பிறந்த புனித நாளில் அல்லவா தங்கள் குமாரன் உதிக்கப்போகிறான்.



பாபா சக்கரவர்த்தியின் மனைவியை நோக்கி "நான் சிருஷ்டித்துக் கொடுத்த பதக்கத்தைப்பற்றி சதா குறை கூறிக் கொண்டே இருக்கிறாய். இதோ உன்னுடைய கிருஷ்ண பரமாத்மா. இதை ஏற்றுக் கொள்" என்று சொல்லி ஒரு பதக்கத்தை அவளுக்கு அளித்தார். பாபா கொடுத்த பதக்கத்தில் ஒரு பக்கம் கிருஷ்ணரும் மறுபக்கத்தில் சீரடிபாபாவின் உருவமும் அமைந்து இருந்தன.

அன்றிரவே ·க்கரவர்த்தியின் மனைவி தன் வயிற்றில் ()ழந்தை அசையும் உணர்ச்சியைப்பெற்றார். இதனால் அவர்களுக்கு குழந்தை உண்டாக்கியிருப்பது உறுதியாயிற்று.

சந்தேகப் பிராணிகளாகிய டாக்டர்கள் திரும்பவும் அழைக்கப்பட்டனர். சக்கரவர்த்தியின் மனைவியைச் சோதனை செய்தனர். இந்த முறை சோதனையில் குழந்தை உற்பத்தியானதை உறுதி செய்து தங்கள் பிழைக்கு மன்னிப்புக் கோரினர்.

நவம்பர் 23ம் திகதி முன்பே சக்கரவர்த்தியின் மனைவி விமானப்படை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 23ம் திகதி நவம்பர் மாதம் வந்தது. அன்று குழந்தை பிறக்கும் அறிகுறி ஒன்றும் தோன்றவில்லை. அவளைச் சோதித்த டாக்டர் பிரசவத்திற்கு இன்னும் சில நாட்கள் செல்லும் என்று கூறிவிட்டார்.

குழந்தையை ஆவலோடு எதிர்பார்த்திருந்த தாய்க்குப் பெரிய ஏமாற்றமும் கவலையும் ஏற்பட்டது. பாபா பிறந்த அந்நாளில் அல்லவா குழந்தை பிறக்கும் என்று அசையாத நம்பிக்கை வைத்திருந்தாள்? பிற்பகலும் போய் இரவும் வந்தது. இரவு வேலையைப் பொறுப்பேற்கும் தாதியும் நோயாளிகளைப் பொறுப்பு எடுக்கத் தொடங்கினாள்.

மனம்தளர்ந்தது கவலை தோய்ந்த முகத்துடனிருக்கும் சக்கரவர்த்தியின் மனைவியைப் பார்த்து "நீர் எதற்காக உற்சாக மற்று, உலகமே இருண்டு விட்ட மாதிரிக் காட்சி அளிக்கிறீர்" என்றாள்.

"இன்று ஒரு தெய்வீகப் புருஷர் பிறந்த தினம். இந்த நன்னாளில் எனக்கும் ஒரு ஆண்மகன் கிடைக்குமென்று அவரே ஆசீர்வதித்துள்ளார். ஆனால் டாக்டர்கள் பிள்ளைப்பேறு இன்னும் சில நாட்கள் ஆகும் என்று சொல்லுகிறார்கள். தாதி அந்த தெய்வீகப் புருஷர் சத்தியசாயி பாபா என்று அறிந்ததும் "அந்த மகான் அவ்வாறு கூறியிருந்தால் எதுவித சந்தேகமின்றி குழந்தை இன்றே பிறக்கும். இன்று நாள் முடிய எவ்வளவோ நாழிகையாக இருக்கிறது" என்று கூறி நோயாளியைப் பிரசவ அறைக்கு அழைத்து சென்று வேண்டிய ஒழுங்குகளைச் செய்தாள். "நீங்கள் பாபாவின் பக்தையா?" என்ற கேள்விக்கு தாதி வேறு மதத்தைச் சேர்ந்தவள் ஆனால் பாபாவைப் பற்றி நன்கு கேள்விப்பட்டுள்ளேன். அவர் கடவுளின் தூதுவர். அவர் சொல்வது நடந்தே தீரும் என்றாள்.

அன்று பின்னிரவின் போது எதுவித வருத்தமுமில்லாமல் சக்கரவர்த்தியின் மனைவி அழகே உருவெடுத்த ஓர் ஆண் மகனைப் பெற்றெடுத்தாள்.

உரிய நேரத்தில் பாபாதான் கூறியபடி சக்கரவர்த்தி இல்லம் சென்று குழந்தையை ஆசீர்வதித்து "கிருஷ்ண கிசோர்" என்ற நாமத்தைச் சூட்டினார்.

சக்கரவர்த்தி ஓய்வு எடுக்கும் காலம் கிட்டியதும், தான் பாபாவிற்கு சேவை செய்வதே தன் தலையாய கடமை என்று எண்ணி அவரிடம் சென்று தனக்கு ஒரு வேலை தரும்படி மன்றாடினார் பாபாவோ "பெரிய ஆசாமிக்கு இங்கே என்ன வேலையிருக்கப் போகிறது" என்று விகடமாகப் பதில் அளித்தார்.

சக்கரவர்த்தியினரின் குடும்பத்தாரின் தூய அன்பை மதித்து பயன்கருதாத சேவை செய்யும் மனப்பான்மையை மதித்து அவரை சத்திய சாயி பாபா கல்லூரி மாணவர் இல்லத்திற்கு மேற்பார்வையாளராக அமர்த்தினார்.

அவரின் அன்பு மைந்தனும் அதே கல்லூரியில் கல்வி கற்று வருகிறான். அதிர்ஷ்டமும் தெய்வீக அன்பும் நிறைந்த இந்த பண்பாளர்கள் பாபாவின் தெய்வீக நிழலிலேயே ஆனந்தமாக வாழ்வை நடத்துகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இமயமலையின் சாரலிலே இயற்கை எழில் சூழலிலே*
*அமையும் தவத்தின் இருப்பிடமாய் அருமைச் சாலை ரிஷிகேசம்*
*தமமும் ரசமும் தீர்ந்த நிலைச் சத்துவத்தின் நல்லிருக்கை*
*நமரெல்லோரும் நாடுவதாம் நல்லானந்த குடீரந்தான்*

*மு. வரதராசன்.*



சுவாமி சிவானந்தர்

ஒரு வார காலம் திருக்கோணமலையில் ஆன்மீக வெள்ளம் புரண்டோடியது. தெய்வீக கானமழையில் மட்டுமல்ல அருள் மொழிகளின் உணர்வலைகளிலும் மக்கள் தம்மை மறந்து பேரானந்தத்தில் மூழ்கிக் கிடந்தார்கள். சுவாமி நித்யானந்தா எங்கெல்லாம் சென்றாரோ அங்கெல்லாம் ராணி தேனீயை நோக்கி மற்றைய தேனீக்கள் படையெடுத்துச் சென்று சூழ்ந்து கொண்ட காட்சியை பிரத்தட்ஷண்யமாக காணக் கூடியதாகவிருந்தது.

இவ்வளவு தூரம் மக்களைக் கவர்ந்த இந்த நித்யானந்தர் யார்? யாருமல்ல, நம் மண்ணில் பிறந்த உறவினர், இலங்கை மாதா ஈன்றெடுத்த தவசீலர்களில் ஒருவர். இருபதாம் நூற்றாண்டில் சதாசாரம், தர்மம் இவைகளைப் போதிப்பதற்கு வந்த அவதாரமூர்த்தி, இமாலய ஜோதி, ரிஷகேசத்தில் கங்கா மாதாவின் அரவணைப்பில் அமைந்திருக்கும் திவ்ய ஜீவன சங்கத்தின் (னுஐஏஐசூநு டுஐகுநு ஞடீஊஐநுகூலு) ஸ்தாபகர், ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி மகராஜின் வழித்தோன்றல் சுவாமி சிதானந்த சரஸ்வதி மகராஜியிடம் சன்யாச தீட்சை பெற்றுத் திவ்ய ஜீவன சங்கத்துடன் ஒன்றிணைந்து செயல்ப்பட்டுக் கொண்டிருக்கின்ற சீடன் தான் இந்த சுவாமி நித்தியானந்தர்.

## இமயமலைக் குடிலில் இனிய தவமியற்றும் மட்டக்களப்புத் துறவி

நித்யானந்தரின் பூர்வீகம் யாது?, எப்படி இமாலயத்தில் சங்கமமானார், சிவபூமியாகிய கிழக்கிலங்கையில், சித்தானைக்குட்டி போன்ற சித்தர்களும், விபுலானந்தர் போன்ற முக்தர்களும், மற்றும் தெய்வீக புருஷர்களும், சமயப்பணியாளர்களும் நிறைந்த மட்டக்களப்பு, அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஆலயடி வேம்பு கிராமத்தில் இறையன்பர்களான திரு. கணபதிப்பிள்ளைக்கும் சின்னப்பிள்ளைக்கும் சிரேஷ்ட புத்திரனாக 24 08 1948 ல் அவதரித்தவர் சுவாமி நித்யானந்தர். அவருக்குப் பெற்றோர்களிட்ட பூர்வீகப் பெயர் முருகப்பன். இராமக்கிருஷ்ணமிஷன் பாடசாலையிலும், தம்புலுவில் மகாவித்தியாலயத்திலும் கல்வி கற்று, வவுனியா விவசாயப் பயிற்சிப் பாடசாலையிலும் பயிற்சிபெற்று, உலகியல் கல்வியின் விளைவாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் அமர்த்தப்பட்டார்.

சிறுவதிலேயே ஞானிகளுக்குரிய மனஒருமைப்பாட்டை அவரிடம் காணக்கூடியதாகவிருந்தது. அவரின் செயல்திறன் கல்வியிலும் குடும்பத்திற்கு உதவி செய்வதிலும் இருந்தாலும், குறிஏகாந்தத்தையே நாடியது. விவசாயப் பயிற்சிப்பாடசாலையில் இருந்த அவர்களின் நண்பர்கள் மூலம் அறிந்த செய்திகளிலிருந்து, முருகப்பன் எப்போதும் தனிமையில் ஒரு மூலையில் தேவாரம், திருவாசகம், திருக்குறள் மற்றும் ஞானநூல்களோடுதான் உறவாடிக்கொண்டிருப்பாராம் மற்றவர்கள் தூங்கும் போது அவர் தியானத்திலீடுபட்டிருப்பாராம் அவரை நண்பர்கள் கிண்டல் செய்தாலும், அவரும் பகிடிக்கதைகள் சொல்லி நண்பர்களை மடக்கி விடுவாராம். தவம் செய்வார் தன்கருமஞ் செய்வார் என்பதற்கிணங்க வாழ்ந்தாராம்.



நாகராஜா கணபதிப்பிள்ளை

உலகியலில் ஒட்டிக்கொண்டிருந்த ஆர். டி. ஓ முருகப்பனுக்குப் பெண்கொடுக்கப் பலர் முன்வந்தனர். பந்த பாசங்களைத் துறக்க துடித்துக் கொண்டிருந்த முருகப்பனுக்கு, திருமணப் பேச்சு வார்த்தைகள், யாரோ தலையில் சம்மட்டியால் அடிப்பது போன்றிருந்ததாம். வாழ்வதற்காக துடித்துக் கொண்டிருக்கின்ற பெண்களை அவர் ஏமாற்ற விரும்பவில்லை. பெற்றோர்களை எப்படியோ சமாதானப்படுத்த முயற்சித்த முருகப்பனுக்கு, இறைவன் மனஉறுதியைக் கொடுத்து ஆட்கொண்டார்.

### துறவறத்தை நோக்கி

பெரும்பான்மையாக உத்தியோகம் என்றாலேயே ஊழல் என்ற நிலைப்பாடுதான் கலியுக வாழ்வு. நேர்மையாக வாழ்வதாக இருந்தால் ஞான வாள் ஒன்றுதான் உதவிசெய்யும் மன உறுதியில்லாதவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான வாழ்வும் ஏமாற்றிவிடும். முருகப்பன் இந்த இரகசியத்தினை நன்கு அறிந்திருந்தார். ஆர். டி. ஓ உத்தியோகத்தையும், திருமணபந்தத்தினையும், அம்மை அப்பன், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் எல்லோரின் பந்தங்களையும் ஞான வாளினால் வெட்டிவிட்டு கரையேறினார். இவரின் வாழ்வு சங்கரரின் வாழ்வைத்தான் ஞாபகப்படுத்துகின்றது.

## சந்நியாசமும் சேவையும்

1978ம் ஆண்டு பெற்றோர்களிடமிருந்து மானசீகமாகவே விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார். யாழ்ப்பாணம் மௌன ஆச்சிரமத்தினரும் மற்றும் இறையன்பர்களும் கருணைக்கடலாம் சுவாமி சிவானந்தர் ஸ்தாபித்த இமாலய தெய்வீக வாழ்க்கைச் சங்கத்திற்கு வழியனுப்பி வைத்தனர். முருகப்பனுக்கு உரியஇடம் அதுவேயென எப்பவோ முடிவு செய்யப்பட்ட விடயமது. முருகப்பனை ஆட்கொண்டவர் சுவாமி சிவானந்தரின் வழித்தோன்றலும், திவ்ய ஜீவன சங்கத்தின் தலைவருமான ஸ்ரீ சுவாமி சிதானந்த சரஸ்வதி மகராஜ் அவர்களே. முருகப்பனின் பூர்வீக நாமம் மறைந்துசைதன்யாவானார். சிதானந்தரினதும் மன்றத்தின் தொண்டுகளையும் சலிப்பின்றிச் செய்தார். வாரிவழங்கும் வள்ளலும், கருணையின் இருப்பிடமுமான சுவாமி சிதானந்த சரஸ்வதி மகராஜ் சைதன்ய முருகப்பனுக்கு பூரணசந்நியாசதீட்சையை அருளினார். பூர்வீக நாமங்கள் எல்லாவற்றையும் இழந்த சைதன்யர், ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்த சரஸ்வதியானார். சன்னியாசியாகி, காவியுடையணிந்து, இமாலயத்தில் சங்கமமாகிய நித்தியானந்தரை, இமாலய திவ்ய ஜீவன சங்கம் வழி நடத்துகின்றது. சங்கத்தின் பணிகள் ஒவ்வொன்றிலும் பங்குபற்றி, பக்திஞான, தியானயோகத்தோடு, முழுமூச்சாக கர்மயோகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். சுவாமி சிவானந்தரினதும், சித்தானந்தரினதும், கிருஷ்ணானந்தரினதும், மற்றும் அனுபூதிமான்களுடைய நூல்களை அச்சிட்டு வெளியிடும் சிவானந்த பிரசுராலயத்திலேயே அவரது முழுக்கவனமும் ஈர்க்கப்பட்டுள்ளது. புருவ் பார்ப்பதில் அவருக்கு நிகர் அவரே. தற்போது கொம்பியூட்டர் பிரசுரிப்பு வேலைகளிலும் வல்லுனராக கர்மம் செய்கின்றார். உலகினைத் தெய்வீக மயமாக்கிக் கொண்டு பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற திவ்ய ஜீவன சங்க ஜோதியில் அணையாத ஒரு திரியாகவேயிருந்து செயல்படுகின்றார்.

கர்மயோகம் மட்டுமா அங்கு அவர் செய்தார். அவரது ஒவ்வொரு நிமிட ஓய்வு நேரமும் சாதனையிலேயே இருந்தது. ஆச்சிரமத்தில் எங்கெங்கு



ரிஷிகேஷில் சுவாமி நித்தியானந்தாவுடன் செல்வி. இலக்ஷனியா விமலேந்திரன் (இலங்கை)

சற்சங்கம் நடைபெற்றுக் கொண்டிருக்குமோ அங்கு அவர் சேவையிலும் சற்சங்கத்திலுமிருப்பர். உலக சாந்திக்காக சுவாமி சிவானந்தர் 03. 12. 1943 ல் ஆனந்தக்குடிரில் ஆரம்பித்த, அவருக்க மிகவும் பிடித்தமான ஹரே ராமா ஹரே கிருஷ்ணா "மகா மந்திரம் இரவு பகலாக இடைவிடாது ஜபிக்கப்பட்டு வருகின்றது. இந்நிகழ்ச்சியினை முன்னின்று நடத்தும் பணியில் சுவாமி நித்யானந்தாவும் ஒருவராகத் திகழ்கின்றார். இந்த நாம ஜெபத்தின் விளைவாக ஏற்படும் அதி சக்தி வாய்ந்த ஆத்மீக அதிர்வலைகள் கண்ணுக்குத் தெரியாமல் உலகில் நடைபெறும் துன்பங்களைப் போக்கி வருகின்றது. என்னையறியாமலேயே இதில் பங்குபற்றுவதற்காக என் கால்கள் ஆனந்தக் குடிரை நோக்கிச் செல்வதை என்னால் எப்படிச் சொல்லவதென்றே புரியவில்லை.

## சுவாமிகளின் இலங்கை விஜயம்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானில் நனி சிறந்தனவே. ஈழம் செய்த பாக்கியம் சுவாமிகள் பூரண சந்நியாசியாகிய பிற்பாடு இரண்டாவது தடவையாக 10 01 1998 நம் நாட்டிற்கு வருகை தந்தார். திரு. மு. ஏ. சோமசுந்தரம், திவ்ய ஜீவன சங்க உறுப்பினரும் திருக்கோணமலை சிவானந்த தபோவன பாதுகாவலருமான திருமதி. செல்வம் கல்யாணசுந்தரம், மற்றும் இறையன்பர்களினதும், மட்டக்களப்பு அக்கரைப்பற்று வாழ் மக்களினதும் அழைப்பின் பேரில் வருகை தந்த சுவாமிஜி, 10ம் திகதி மாலையில் திருமதி. கல்யாணசுந்தரம் அவர்களது இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு, 11ம் திகதி கதிர்காமம் சென்று வழிபாடு செய்து விட்டு, பிறந்த பொன்னாடாகிய அக்கரைப்பற்று சென்றார். இரண்டரை மாதங்களுக்கு மேலாகவே மட்டக்களப்புப் பகுதிகளுக்குச் சென்று பஜனையும் அருளுரைகளும் ஆற்றி, ஆத்மீக உணர்வினை செறியச் செய்தார். அவர் சென்றவிடமெல்லாம் மக்களின் வாழ்க்கை முறையில் ஒரு மாற்றமேற்பட்டுள்ளதைப் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளதென அறிகின்றோம். சுவாமிகள் சொல்லிக் கொடுத்த "ஓம் நமச்சிவாய என்ற மந்திரம் எல்லாக் கிராமங்களிலும் காலையும் மாலையும் மக்கள் ஓதிக்கொண்டேயிருக்கின்றார்கள்.

சுவாமிஜி தான் பிறந்த இடமாகிய ஆலையடி வேம்புக்கிராமத்தில் பூரண சுகத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற தனது வயோதிபப் பெற்றோர்களை இறைவனின் திருவுளப்படி தரிசித்தார். ஈன்ற பொழுதில் பெருதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்டதாய். என்ற சொல்லுக்கிணங்க, தங்கள் மகன் தெய்வீக புருஷனாகி உலக நன்மைக்காக இறை சேவை செய்கின்றானென்றால் அவர்களின் உள்ளம் பூரிப்படையாமல் இருக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாபா பதிக்கும் சுவடுகள்

காருண்ய சீலா! தீனதயாளா!
புட்டபத்தி வாசா! சாயி ஈசா!





சத்திய சாயி ஈசன் பதிக்கும்
சுவடுகள் கண்டு, கேட்டு, உணர்ந்து
மெய் விதிர் விதிர்த்துக் கண்ணீர்
மல்கி நெஞ்சம் குழைகிறது.

வே. வரதசுந்தரம்

## மாங்கல்யம் காத்த மகிமை

குப்பம் கிராமத்தில் பகவானின் அடியவர் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. குடும்பத் தலைவர் சுகவீனமுற்றார். இரத்தம் இரத்தமாக வாந்தி எடுத்தார். பல மருத்துவர்களிடம் காட்டி வைத்தியம் செய்தும் அவர் குணமடையவில்லை. அவர் உயிர் தப்புவார் என்ற நம்பிக்கை அற்ற நிலையில் குடும்ப அங்கத்தவர்கள் செய்வதறியாது திணறினார்கள்.

பகவானின் அருட் கருணையில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்த குடும்பத் தலைவன், தன்னை சாயி பகவானிடம் அழைத்துச் செல்லும்படி தனது மனைவி குழந்தைகளிடம் கூறினார்.

"சுவாமியின் தரிசனத்தின் பின்னர், எதுவரினும் வரட்டும்" என்ற உறுதியுடன் இருந்தார் குடும்பத்தலைவர்.

அழைத்துச் செல்லும் வேளையில், வழியில் அவர் மயக்கமுற்று மரணத்துடன் போராடிக்கொண்டிருந்தார். பகவான் முன்னால் அவரைக் கொண்டு சென்றதும், அவருடைய மனைவியார் பகவானின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்.

"சுவாமி எனக்கு மாங்கல்யப் பிச்சை, பதிபிச்சை தாருங்கள்" என்று கண்கலங்க அழுது நின்றார்.

தனது பாதங்களை இறுகப் பற்றிக் கொண்ட மனைவியை எழுந்து நிற்குமாறு கூறி விட்டு குடும்பத் தலைவனை ஓர் அறைக்குள் எடுத்துச் செல்லுமாறு பணித்தார். குடும்பத் தலைவனின் மகனுடன் அறைக்குள் சென்றார்.

இதன் பின் நிகழ்ந்ததை பின்னர் மகன் கூறினான்.

பாபா தனது கையில் இருந்து விபூதியை வரவழைத்துத் தண்ணீருடன் கலந்து அதனை மயங்கிக் கிடந்தவரின் வாய்க்குள்ளே ஊற்றினார். வீபூதியினை மேனி முழுதும் பூசினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மனிதர் தூக்கத்தில் இருந்து எழுந்தவர் போல் கண்விழித்தார். குடும்பத் தலைவனை உயிர்ப்பித்து மனைவி குழந்தைகளுக்கு உறுதுணை வழங்கினார்.

"பக்த ரட்சகர்" அல்லவா பகவான்! என்னே சாயி ஈசனின் அருட்கருணை.

## தையல் வல்ல தையல்

அவுஸ்திரேலியாவில் திரீஸ் என்ற பெண்மணி தனது குடும்பத்துடன் சுவாமியின் வீடியோ படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சுவாமி அணியும் அங்கியின் அளவு அந்தப் பெண்மணிக்கு மட்டுமே தென்பட்டது. மற்றையோரின் கண்களுக்குத் தென்படவே இல்லை.

தையல் நுணுக்கங்களை நன்கு தெரிந்த நிபுணர் அந்தத் தையல் அளவுகளைக் குறித்து வைத்து சுவாமிக்கு அங்கியொன்று தைத்துக் கொண்டார்.

அடுத்த நாள் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பஜனுக்கு எடுத்துச் சென்றார். அங்கிருந்த மேடையில் வைத்து விட்டு பஜனையில் ஈடுபட்டார்.

பகவானுக்குத் தான் தைத்த ஆடை பிடித்துக் கொண்டால், தனக்கு ஏதோ ரீதியில் அதனை அறியத்தருமாறு இரந்து வேண்டியபடி பஜனில் ஈடுபட்டார்.

என்ன அற்புதம்! அந்த அங்கி முழுவதும் விபூதி சாத்தப்பட்டிருந்தது. பகவானின் ஆசிர்வாதம் கிடைத்துவிட்டதே என்ற பூரிப்பில் அவர் திளைத்தார்.

பகவானைத் தரிசிக்க இந்தியா சென்றபோது இந்த அங்கியையும் தன்னுடன் எடுத்துச் சென்றார். நேர்காணல் அறையில் அந்த அங்கியினை பகவானிடம் பயபக்தியுடன் ஆசீர்வாதிக்குமாறு நீட்டினார்.

அலர்ந்த முகத்துடன் பாபா கூறிய வார்த்தைகளைக் கேட்டு அந்தப் பெண்மணி திரீசா மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தார்; தனக்குக் கிட்டிய பேறு கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். அப்படி அவர் கூறியதுதான் என்ன?

"திரீசா நீ தைத்த அங்கி எனக்குப் பொருத்தமானது இனிமேல் எனது ஆடைகளை நீயே தைப்பாய்" -இப்படி பகவான் வாய் மலர்ந்தார்.

## கொலைஞனுக்கும் கருணை

ஒரு கொடூரமான கொலையைச் செய்த கொலையாளி கல்ப கிரி, மரணதண்டனையில் இருந்து தப்பும் நோக்குடன் இமயமலைச் சாரலை நோக்கிப் பயணமானான். அங்கு பல சாதுக்களை, துறவிகளைச் சந்தித்து ஆன்மீகப் பயிற்சிகளில் ஈடுபட்டு துறவி உடை புனைந்தான். சமய இலக்கியங்களைப் படித்து கர்மயோகம், ஞானயோகம் ஆகியவை பற்றி பல விளக்கங்களை எடுத்து விபரிக்கும் ஆற்றலைப் பெற்றான்.

அவன் பல ஆண்டுகளின் பின்னர் துறவி வடிவத்தில் பல கோயில்களுக்கு யாத்திரை செய்து இறுதியில் பங்களூர் வந்து சேர்ந்தான் பகவான் சாயி பாபாவைத் தரிசனம் செய்யப் போனான்.

அனைத்தும் அறியும் பகவானின், திருவிழிகள் கல்பகிரியின் முன்னைய வாழ்க்கையை அறிந்து கொண்டன.

"தான் செய்த குற்றத்துக்காக தண்டனையில் இருந்து தப்பி ஓடுவது தவறு தண்டனையை ஏன் ஏனைய பிறவிகளுக்கு ஒத்திப் போட வேண்டும்? ஒரு கருமத்தின் விளைவில் இருந்து தப்பும் நோக்கில் காவி உடை அணிவது தகாது."

பாபா இப்படிக் கூறினார். பாபாவின் அறிவுரைக்குச் செவிமடுத்த கல்பகிரி, காவியுடையைக் களைந்தான். வெள்ளாடை அணிந்தான். பொலிசாரிடம் சரணடைந்து, சட்டம் வழங்கும் தீர்ப்பினை ஏற்கச் சித்தமானான். இதைக் கண்ட பாபா கல்பகிரிக்குப் பின்வரும் உறுதியுரை வழங்கினார் :-

"உனக்குத் தூக்குத் தண்டனை கிடைக்காது. சிறையில் இருந்து நீ திரும்பும் போது தூக்குக் கயிறு தொங்க வேண்டிய உந்தன் கழுத்திலே எனது கையாலே செபமாலை சூடுவேன் கவலைப்படாதே கல்பகிரி"

சரணடைந்த கொலையாளி கல்பகிரிக்கு விசாரணையின் பின்னர் நீதிமன்றம் ஆயுட்காலத் தண்டனை வழங்கியது. தண்டனையை அனுபவித்து மீண்ட போது கல்பகிரியின் கழுத்தில் பாபா செபமாலை ஒன்றினை ஆரமாய் அணிவித்தார்.

பகவான் பொழியும் அருட் கருணை பாரீர்.

*பற்றுக்கோடின்றிப் பரிதவிப்பார்க்குப்*
*பறந்தோடிச் சென்று அருள்புரிவாய்*
*பகவானே சத்திய சாயி*
*நுமக்கு யாம் சரணம் !*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத பத்திரிநாத் பயணம்

மே மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணி உத்தரகாசியில் "தபோவன குடி" யில் ஏழு நாட்கள் அனுஷ்டித்த ஆச்சிரம வாழ்க்கையின் பக்தி நிறைந்த அமைதியான நினைவுகளுடன் பத்திரிநாத்தை நோக்கிப் புறப்பட்டோம்.

ஏற்கனவே சில இடையூறுகளைத் தந்த நாங்கள் பயணம் செய்த 'ராவ் ட்ரவல்ஸ்'' பஸ் வண்டியில் இனியும் இடையூறுகள் வரக்கூடாது என்ற எங்கள் பிராத்தனையுடன் 'ஹனுமான் சாலீஸாவை'' வாய் விட்டு பாடிக் கொண்டு புறப்பட்டபோது.... 30 நிமிடங்கள் கூட சென்றிருக்காது. எங்கள் வண்டி வேகத்தைக் குறைத்துக் கொண்டது. எமக்குள் ஒரு பயம் ஏற்பட்டு விட்டது. மிக நீண்ட தொலைவிலான இடத்தில் இருக்கிறோம். இன்னும் எத்தனையோ ஆயிரம் அடிகள் உயரம் போய் திரும்பவும் வேண்டும். கடவுள் எம்மை இப்படிச் சோதிக்கிறாரே! 'டெஹ்ரி' என்ற இடத்தில் வாகனம் நின்றுவிட்டது.

எங்களுடன் வந்தவர்கள் சிலர் மேலும் பயணத்தைத் தொடர வேண்டாம். உயிரைப் பணயம் வைத்துப் போக வேண்டுமோ எனக் கேட்க ஆரம்பித்தனர். சிலருக்குத் தொடர்ந்து வந்த பயணம் இடையில் தடைப்படக் கூடாது, தொடர்ந்து போகவே வேண்டும் என்ற ஆவல். எங்கள் தலைவர் திரு. ஈஸ்வரன் அவர்களின் முகத்தைப் பார்க்க வேண்டுமே ! சொல்லொனா வேதனை ரேகைகள் அங்கே காட்சி தந்து உங்கள் விருப்பப்படியே நடக்கட்டும் என்ற நிலையில் இருந்தார்.



வசந்தா விமலேந்திரன்

ஆண்டவன் சித்தப்படி நடக்கட்டும் என நினைத்த போது....

இயந்திரம் பழுது பார்ப்போர் சிலர் வந்து எங்கள் வண்டியைப் பார்வையிட்டனர். மிகவும் உக்கிய நிலையிலிருந்த சில பாகங்களை அகற்றி விட்டு, புதிய பாகங்களைப் பொருத்தி இனி நீங்கள் தைரியமாக பத்ரிநாத் புறப்படலாம் என கூறியதையடுத்து எங்கள் வீர மாருதி எங்களை கொண்டு செல்வார் என்ற நம்பிக்கையில் பயணத்தை தொடர்ந்தோம்.

பயணம் தொடர்ந்தது. பத்ரிநாத் பாதையில் வண்டி சென்று கொண்டிருந்தது. பத்திரி நாத்துக்கு செல்ல முன்பு "ஜோசிமத்" என்ற இடத்தில் இரவு தங்கி விடிய புறப்படுவது என்பது எங்கள் திட்டம். எங்கள் வாகனம் வழியில் பிரச்சனை தந்ததால் ஜோசிமத்தைநாம் சென்றடைந்தபோது மணி 10க்கு மேல் இருக்கும். எல்லோருமே மிகவும் களைத்துப் போய்விட்டோம். வழியில் பகல் சாப்பிட முடியாத நிலை ஏற்படலாம் என்று எண்ணியதாலோ என்னவோ ஈஸ்வரன் அவர்கள். திரு. ஸ்ரீதர்சிங், திரு. விமலேந்திரன் ஆகியோர் மூலமாக நிறைய பழங்களும், பிஸ்கட்டுகளும் வெள்ளரிக்காய்களும் வாங்கியிருந்தார். எங்கள் பசியைப் போக்கிய அந்த பெருந்தகையின் முன்னேற்பாட்டை நாம் நன்றியுடன் நினைவுகூர வேண்டும்.

இல்லாவிட்டால் பசி ஒரு பக்கம், களைப்பு ஒரு பக்கம். எல்லாவற்றிக்கும் மேலாக குறுகிய பாதையில் வீடுகளோ, கடைகளோ இல்லாத மனித நடமாட்டமுமில்லாத பாதையில் போய்க் கொண்டிருந்தோம். பஸ் திடீரென நின்று விட்டால்_ என்ற பயம்_ வேறு !ஆனால் எதற்கும் "ஈஸ்வரனின்" வழிகாட்டல் இருக்கிறதே என்ற நிம்மதி.

ஒரு வழியாக ஜோசிமத் வந்தடைந்த நாங்கள் இரவுச் சாப்பாட்டை 'ஜோசிமத்' ஹோட்டலில் 'வயிறார' முடித்துக் கொண்டு எங்கள் அறைகளில் தஞ்சமடைந்தோம். மறுநாள் விடிய பத்திரிநாத் புறப்பட்டோம். நாங்கள் நின்ற இடத்திலிருந்து 'பாண்டுகேஷ்வர்' என்ற இடம் வரை சென்று அங்கிருந்து பத்திரிநாத் போக வேண்டும். அது குறுக்கலான ஒரு வழிப்பாதை. குறிப்பிட்ட நேரத்துக்கு தான் 'கேட்' திறப்பார்களாம். பத்ரிநாத்திலிருந்து வரும் வாகனங்களை சிறிது நேரம் வர விடுகிறார்கள். பிறகு அந்த கேட்' ஐ மூடி பாண்டு கேஷ்வரிலிருந்து பத்ரிநாத் போகும் வாகனங்களை விடுகிறார்கள். மேலிருந்து வாகனங்கள் வரும்போது எதிர்ப்பக்கம் எந்த வாகனமும் வர முடியாது. நகரவும் முடியாது பாதையோ மிகவும் குறுகியது.

ஜோசிமத் கடல் மட்டத்திலிருந்து 6000 அடி உயரம். அங்கிருந்து பத்ரிநாத் செல்லும் பாதையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலம் குறைந்த ஒரு வழிப்பாதை. அதுமட்டுமா 4000 அடி உயரத்தை கடக்க வேண்டும். வளைந்து வளைந்து பாதை செல்கிறது. மலை உயர உயர ஏறிப் போகிறது. ஒரு பக்கம் மலையின் உயரத்தைப் பார்க்கிறோம். மறுபக்கம் படுபாதாளமாகத் தெரிகிறது. அந்தப் பாதாளத்தில் கண்ணுக்கு தெரியாத அளவில் நதியும் ஓடுகிறது. மேலே இருந்து பார்க்கையில் பயங்கரமாக இருந்தது.

ஒவ்வொரு மலையைத் தாண்டும் போதும், இரண்டு மலைகளுக்கு இடையில் பாலம் அமைத்துள்ளார்கள். அந்த பாலத்தினூடாக வண்டிகள் போக வேண்டும். ஆனால் ஒரு வாகனம் தான் செல்ல முடியும். அடுத்த வாகனம் காத்து நிற்க வேண்டும். இரண்டு மூன்று வாகனங்கள் சேர்ந்தாற்போல சென்றால் பாலம் உடையும் அபாயமும் ஏற்படலாமாம். உடைந்தால் நிச்சயம் எலும்புகூட மிஞ்சாத நிலமைதான்.

எம்மிற் சிலர் அதைப் பார்க்காமல் நிம்மதியாக நித்திரையில் மூழ்கியிருந்தனர். சிலருக்கு சடுதியான ஒரு பயங்கர கற்பனை. இந்த இடத்தில் பஸ் நின்று விட்டால் என்ன நடக்கும்? நிச்சயமாக விளைவை எண்ணிப் பார்க்க முடியாது. படுபயங்கரம். நாங்கள் ஆஞ்சநேயரை நம்பியல்லவா புறப்பட்டுள்ளோம். கைவிடுவாரா என்ன? பகல் 11 1/2 அளவில் பத்ரிநாதத்தை அடைந்தோம். கோவிலுக்கு சற்று தூரத்தில் எல்லா வண்டிகளும் நிறுத்தப்பட்டிருந்தன. நாமும் வண்டியிலிருந்து இறங்கி கோவிலை நோக்கி நடந்தோம்.

பத்ரி நாத் சென்றால் கட்டாயம் குளிக்க வேண்டும் என்று கூறியிருந்தார் எங்கள் ஈஸ்வரன் ஐயா. எனக்கோ கடும் இருமல். இளைப்பு வேறு. என்னால் குளிக்க முடியாதே என்று எனக்குள் உள்ளூர ஒரு வருத்தம். வெந்நீர் ஊற்றுப்பக்கம் சென்ற நாம் அப்படியே அசந்து போய் விட்டோம்.

அந்த வெந்நீர் ஊற்றுக்கு 'தப்த குண்ட' மென்று பெயராம். ஆண்டவன் அருளை அங்கே கண்டபோது மெய்சிலிர்த்து விட்டது. உள்ளம்உருகுதையா இறைவா உன்னருளை கண்ணாரக் காண்கையிலே...!

அந்த தப்த குண்ட குளத்தை இரண்டாகப் பிரித்து ஆண்களுக்கும், பெண்களுக்குமென்று அழகாகக் கட்டியிருக்கிறார்கள். வந்தவர்கள் எல்லோருமே அந்தக் குளத்தில் இறங்கி ஏறியபோது ஒரே ஒரு ஆத்மா மட்டும் இறைவா என்னை மட்டும் நீ குளிக்க விடவில்லையே என்று ஏங்கியது ஆண்டவனுக்கே அது பொறுக்கவில்லை போலும்.

இறைவன் எப்போதும் எம் எதிரே நேரடியாக வரமாட்டான். வேறு யார் மூலமாவது எமக்கு உதவுவான் என கேள்விப்பட்டுள்ளேன். பத்ரிநாத்தில் அதை உணர்ந்தேன். என்னுடன் வந்த சகோதரிகள், வசந்தா– நீங்கள் கட்டாயம் குளிக்க வேண்டும். உங்கள் வருத்தமெல்லாம் மாறிவிடும்" என்று கூற கௌரி மகேந்திரன் வந்து என் கையை பிடித்து இழுத்துப் போய் அந்த குளத்தில் இறக்கியே விட்டார். ஆண்டவன் கௌரி உருவில் வந்து என்னை குளிக்க வைத்ததை எண்ணினால் இன்றும் என்கண்கள் பனித்து விடுகின்றன.

அந்த வெந்நீர் குளம் மிகச் சூடானது. நீர் பொங்கிப் பீறிட்டு வரும் இடத்தில் ஆவி பறக்கிறதை காண முடியும். ஒரு பக்கம் நீர் வருகிறது. மறுபக்கம்



வெளியேறிக் கொண்டிருக்கிறது. இந்த கோவில், குளத்துக்கு அருகிலேயே 'அலகந்தா' என்ற நதி ஓடிக்கொண்டிருக்கிறது. பத்தாயிரம் அடிகளுக்கு மேலே இருக்கும் பத்ரிநாத்தில் 24 மணித்தியாலமும் வெட வெடக்கும் குளிர். சூரிய கதிர்கள் ஆக்ரமித்தாலும் உடல் சில்லிட்டு போகிறது குளிரில். சுற்றி வர பனி மலைகள். ஆனால் அங்குள்ள இந்த வெந்நீர் தப்த குண்டம் ஒரு அதிசயம்தான். மூன்று தரம் பத்ரி நாதனை நினைத்து மூழ்கி எழுந்த நான், ஆண்டவன் இருகிறான் என்பதை உணர்ந்து கொண்டேன்.

பத்ரிநாத் வருபவர்கள் தப்த குண்டலத்தில் குளித்து, பிரம்ம கபாலம் என்ற இடத்தில் 'பித்ரு கர்மா' செய்யலாமாம். பித்ரு பிண்ட தானம் பத்ரிநாத்தில் செய்வது என்பது யாவருக்கும் கிடைக்காத அரிய வாய்ப்பாம். மற்ற இடங்களில் கொடுப்பதைவிட, இது ஆயிரம் மடங்கு பலன் தருமாம். நாம் அங்கு போகிறோம் என்றால் எமது மூதாதையரின் ஆவிகள் அங்கு முன்னதாகவே வந்து காத்துக் கொண்டிருப்பதாக அங்கு சொன்னார்கள். எங்கள் நெருங்கிய உறவினர்க்கு மட்டுமல்ல. நண்பர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியானே

வேடுவர் மடந்தை காடுபடு கொம்புத்
தேனொடு பிசைந்த தினைமாவை
தேடிமுள் நிறைந்த கானிடை நடந்து
சேவடி சிவந்த பெருமானே !
ஆடிவரு தொண்டை மான்நதி மருங்கில்
ஆயிரம் அறங்கள் வளர்கோயில்
ஆடுமெழில் கொஞ்சு காவடி யுகந்த
ஆறுமுகனே ! சந்நிதி யானே !



சோ. பத்மநாதன்
அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை

செய்யலாம் என அங்கு கூறுப்பட்டது. பத்ரிநாரயாணனின் நைவேத்தியத்தை எடுத்தே அங்கு பிண்டம் வைக்கிறார்கள்.

என் கணவருடன் எங்களுடன் வந்த பலர் இந்தக் கருமத்தைச் செய்து, திருப்தியடைந்தனர். இவர்கள்வேட்டியணிந்து மேலே ச.ட்டையணியாமல் பித்ரு காரியம் செய்த போதும், அதை செய்து வைப்போர் குளிருக்காக தலையிலிருந்து கால் வரை பனிப் போர்வையால் மூடிக் கொண்டு செய்தது எம்மை வியக்க வைத்தது.

இதை முடித்து கொண்டு நாம் பத்ரி நாராயணர் ஆலயத்துக்குள் 'கியூ'வில் நின்று உள்ளே சென்றோம். மூலஸ்தானம் சிறிது இருட்டாக உள்ளது. நாம் அந்த இடத்துக்குச் சென்றபோது ஆண்டவன் அருளால் பிரகாசமான விளக்கு எரிந்து நாராயணர் எமக்கு அழகாகக் காட்சி தந்தார் கூர்ந்து பார்த்தால் முகம் மட்டும் தெரிகிறது. நவரத்தினங்களால் ஆன முடியும், —ல முழுவதும் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஏனைய இடங்களைப் போல விபூதி, சந்தனம் இங்கெல்லாம் தருவதில்லை. உலர்ந்த திராட்சை, கடலை, கற்கண்டு சிறு வெண் உருண்டைகள் போன்றவை பிரசாதமாகத் தருகிறார்கள். அம்மன் சந்நிதியில் குங்குமம் கிடைக்கிறது.

அங்கிருந்த ஒருவர் ஆங்கிலத்தில் எமக்கு சொல்கிறார். "இங்கு பித்ரு பிண்டதானம் செய்து, திதி கொடுப்பது மிகவும் விஷேடமானது. நாம் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவங்கள் எல்லாம் இங்கு வருவதால் கழுவப்பட்டு விடுகின்றன. அதனால் பித்ருகளுக்கும் ஒரு பரம திருப்தி. நீங்கள் ஏதோ ஒரு விதத்தில் நிறைய புண்ணியம் செய்ததால்தான் பத்ரிநாத் வந்திருக்கிறீர்கள். பத்ரிநாதனின் தரிசனம் கிடைத்தால் முக்தி கிடைக்கும். கேதாரநாதனை ஸ்மரித்தால் முக்தி கிடைக்கும். காசியில் மரணமடைந்தால் முக்தி கிடைக்கும் என்று பெரியோர் கூறுவார்கள். நீங்கள் பாக்கியசாலிகள்" என கூறியபோது எங்கள் கண்கள் கலங்கி விட்டன. பத்ரிநாதர் ஆலயத்தின் பின் பக்கம் பனிப் படலமாக ஒரு மலை தெரிந்தது. அது தான் நீலகண்ட மலைச்சிகரமாம். பத்தாயிரம் அடி உயரத்தில் நீலகண்ட சிகரம் காட்சி தருகின்றது. பனிப்போர்வையில் வெள்ளியாக பளிச்சிடுகிறது. வாழ்க்கையில் இவற்றை எம்மால் மறக்க முடியாது. நஞ்சுண்ட நீலகண்டனை தரிசித்த உணர்வு எமக்கு ஏற்பட்டது.

பகல் 2 மணிக்கு முன்பு நாம் திரும்ப வேண்டும். இல்லா விட்டால் நாம் வரும் பாதை மூடிவிடுவார்கள் என்பதால் நாம் பத்ரிநாத்தை விட்டு திரும்ப ஜோசிமத் நோக்கிப் புறப்பட்டோம்.

சின்மயா மிஷனால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த புனித யாத்திரையில், உத்தரகாசி, கங்கோத்ரி, ரிஷிகேஷ், ஹரிதுவார், பத்ரிநாத் ஆகிய முக்கிய புனித இடங்களைத் தரிசித்த எனக்கு பத்ரிநாத் ப்யணம் நெஞ்சைத் தொட்டு நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சீடனின் பார்வையில் யோகர் சுவாமிகள்

## வைத்தீஸ்வரன் கோயிற் சந்தி

1917ம் ஆண்டு, நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மாணவனாயிருந்த காலம். அன்றொருநாள், கல்லூரி விடுதியிலிருந்து, நானும் பல மாணவர்களும் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அருகாமையிலுள்ள விளையாட்டு மைதானத்துக்கு, ஒருவர் பின் ஒருவராகச் சென்று கொண்டிருந்தோம். சண்முகநாதன் புத்தகசாலைக்கும் வைத்தீஸ்வரன் கோயிலிற்குமிடையிலுள்ள தெருச் சந்தியில், ஒரு அபூர்வமான மனிதன் நிற்கக் கண்டோம்.

அவர் வழிப்போ க்கர்களைப் பார்த்துக் கொண்டும், இடையிடையே அங்குமிங்கும் நடந்துகொண்டுமிருந்தார். கம்பீரமான தோற்றம்; மடித்துச் சண்டிக்கட்டாகக் கட்டிய சற்று மங்கல் நிறமான வேட்டி; மெல்லிய வெள்ளிக்கம்பிகள் போன்ற தலைமயிர்; ஆவேசத்தைப் பிரதிபலிக்கும் பார்வை; மிடுக்கான நடை; இப்படி நூதனமான ஒரு மனிதனைக் கண்டால் பள்ளி மாணவர்கள் இயல்பாக என்ன செய்வார்கள்? நாங்கள் சந்தியில் சற்று நேரம் நின்று அவரை உற்றுப் பார்த்தோம்.

'என்னடா பார்க்கிறீர்கள்?'

என்று உரத்துச் சத்தம் போட்டுக் கொண்டு, குனிந்து ஒரு கல்லையெடுத்தார். ஒரு நொடிக்குள் திக்குத்திசை தெரியாது, சிதறுண்டு கலைந்து ஓடி ஒழித்துக் கொண்டோம் நாங்கள். அவரை மூர்க்கமான ஒரு பைத்தியகாரன் என்று முடிவு கட்டிக்கொண்டோம்.

அடுத்தடுத்த நாட்களில் அவ்வழியாக செல்லும்போது, மிக ஜாக்கிரதையுடன் மேலே குறிப்பிட்ட சந்தி வந்ததும், துரிதமாக நடந்து செல்வது எங்கள் வழக்கமாய் விட்டது. இருந்தும் கடைக் கண்ணால் சந்திப்பக்கம் பார்க்காமல் போக முடிவதில்லை.

சில நாட்களில், அந்தப் "பைத்தியம்" அதே சந்தியில் எங்களைக் கண்டும் காணாததும் போல் நிற்கும். மறுநாட்களில், அது சண்முகநாதன் புத்தகசாலைக்குள், ஒரு நாற்காலியில், சாந்தமாக அமர்ந்திருக்கும். இப்படியான ஒரு பைத்தியத்தைப் புத்தக சாலைக்குள் வரவழைத்து ஆசனங் கொடுத்து மரியாதை செய்வது விந்தையாகவிருந்தது.


இதன் மர்மம் எங்களுக்கு அப்போது புரியவில்லை பல ஆண்டுகளுக்குப் பின்தான், அந்த வினோத மனிதன் ஒரு துறவியென்பதும், துறவை நாடும் மகான்கள் தங்கள் ஆரம்ப நிலையில் உலகம் தம்மையணுகித் தொந்தரவு செய்யாது தடுக்கக் கையாளும் உபாயங்களிலொன்றே "பைத்தியக் கோலம்" என்பதையும், நான் உணர்ந்து கொண்டேன்.

இந்த உணர்ச்சி என் மனதில் எழும்வரை சிவன் கோயிற் சந்தியில் மாணவர்களை வெருட்டிய பயங்கரத் தோற்றத்தை நினைக்குந்தோறும் என் மனதில் பயமே குடிகொண்டிருந்தது. கூடியவரை அவரைத் தூரத்திலேயே வைத்துக் கொண்டேன்.

ஆயினும், அவரை முதல் முதல் கண்ட "பைத்தியக் கோலம்" என் மனதை விட்டு ஒரு போதும் அகலவில்லை. என்றுமே விட்டுநீங்காத அடிமைத் தொண்டு பூண்ட சுந்தரமூர்த்தி நாயனாரும் தன்னைத் தடுத்தாட்கொள்ளப் பிராமணனாக வந்த முழுமுதலை ஒரு "பித்தன்" என்று தானே முதலில் மதித்தார் !

## வெள்ளவத்தை கடற்கரை

ஆயிரத்துத் தொளா யிரத்து இருபத்தெட்டாமாண்டளவில் யாழ்ப்பாணத்துச் சிவன் கோயிற் சந்தியில் நடந்த சம்பவத்திற்கு ஏறக்குறையப் பதினொரு வருடங்களின் பின், எனது அருமை நண்பர் ஒருவரும் நானும் வெள்ளவத்தைக் கடற்கரையில்



மு. வைரமுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்தோம். அந்தக் காலம் நான் பகிரங்க வேலைக் கந்தோரில் உத்தியோகம் புரிந்து வெள்ளவத்தையில் 41–ம் ஒழுங்கையில் இருந்தேன். எனது நண்பரும் நானும், நிலாக்காலங்களில், பெரும்பாலும் இரவு 7 மணியளவில், கடற்கரையில் சந்தித்து நிலவில் மணலில் உட்கார்ந்துகொண்டு, நல்ல கடற்காற்றைச் சுவாசிப்பது மன்றி தேவார திருவாசகங்களை உரத்துப் பாடிக்கொண்டுமிருந்து, உல்லாசமாகப் பொழுது போக்குவது வழக்கம்.

சனசஞ்சாரம் குறைந்த நேரம்; பால்போலும் நிலா வெளிச்சம்; கமகமவென்று வீசும் மெல்லிய குளிர்காற்று பரந்த கடலின் மெல்லிசை; குளிர்மையான வெண்மணலாசனம். இந்தத் திவ்வியமான சூழ்நிலையில், பாட்டும் பண்ணும், தாமாகவே எவருக்கும் வரும். எனது நண்பர் மிக உருக்கமாகத் திருவாசகம் பாடுவார். இறைவனால் அவருக்குக் கொடுக்கப்பட்ட வரப்பிரசாதம் அது அவருடன் சேர்ந்து நானும் ஓரளவு பாடுவேன்.

ஒருநாள் இரவு பத்தரை மணி வரை பாடிக்கொண்டிருந்து விட்டோம். ஆனந்தமான அனுபவம். அன்று இருவருடைய உள்ளங்களும் சாந்தமடைந்து கனிந்திருந்தன. சில நிமிடங்கள் மௌனமாய் இருந்தபின், என் நண்பருக்கும் எனக்குமிடையே ஒரு அபூர்வமான சம்பாஷணை தொடங்கியது. திருமுறைகளை அமைதியாக விருந்தோதினால் உள்ளம் எவ்வாறு பண்பட்டு எதை நாடும் என்பதை இந்தச் சம்பாஷணை நிரூபித்துவிட்டது. என் நண்பரே அதைத் தொடங்கினார்.

"Brother, யாழ்ப்பாணத்தில் யோகர் சுவாமிகளை எப்போதாயினும் சந்தித்திருக்கிறீரா?"

"நான் நேர்முகமாகச் சந்திக்கவில்லை, ஆனால் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். யான் யாழ். இந்துக் கல்லூரியில் படிக்கும் போது,



யோகர் சுவாமி

ஒருநாள் சிவன் கோயிற் சந்தியில் அவரைக் கண்டு பயந்தோடியது என் ஞாபகத் திலிருக்கின்றது. அவர் ஒரு பைத்தியக்காரன் என்று நான் நினைத்து விட்டேன். ஆனால், பின்னர் அவரைப் பலர் ஒரு சுவாமியாக மதித்து வழிபடுகிறார்கள் எனவும் கேள்விப்பட்டேன். சில நேரங்களில் கோபாவேசங் கொண்டு, ஆட்களைக் கண்டபடி வைது வெருட்டிக் கலைக்கிறா ரெனவும் அறிந்தேன்"

"நீர் சொல்வதெல்லாம் சரிதான். ஆனால் அது முன்னொரு காலம். இப்போது அவர் ஒப்பற்ற ஒரு யோகி எனவும், கண்கண்ட தெய்வ மெனவும், எல்லோராலும் வழிபடப் படுகின்றார். ஒரு தவ சிரேஷ்டர் நான் பலமுறை அவரைத் தரிசித்திருக்கிறேன். நீரும் கட்டாயமாக அவரைத் தரிசிக்க வேண்டுமென நான் ஆசைப்படுகிறேன்."

"Brother, எனக்கு, பொதுவாக உலகத்திலே சுவாமியெனக்கொண்டு திரிபவர்களில் நம்பிக்கையில்லை. கடவுள் ஒருவரே எங்கள் வழிபாட்டிற்குரியவர். மனிதனை மனிதன் வழிபடுவதால் என்ன பயன்?"

"அவையெல்லாம் இருக்கட்டும். நீர் இப்போது கிளப்பும் பிரச்சனைக்கு விளக்கம் கூற நான் விரும்பவில்லை. ஆனால், ஒன்று மட்டும் கேட்டுகொள்கிறேன். நீர் என் உண்மையான நண்பனென்றால், என் சொல்லைத் தட்டாது என் விருப்பத்துக்கிணங்கி ஒரு முறை யாழ்ப்பாணஞ் சென்று யோகர் சுவாமிகளைச் சந்தித்து வாரும். மறு விஷயங்களையெல்லாம் பின்னர் நாம் பேசிக் கொள்ளுவோம்."

"இவ்வாறு நீர் சொல்லும் போது நான் மறுப்பதற்கில்லை. நீர் சொல்வது போலப் பலராலும் போற்றப்படுபவரில் ஏதோ மர்மம் இருக்கத்தானே வேண்டும். நானுமொருமுறை அவரை நேர்முகமாகச் சந்திப்பதால் என்ன நஷ்டம் வந்து விடப்போகிறது. நான் நாளைக்கே புறப்பட்டு விடுகிறேன். யாழ்ப்பாணஞ் சென்று யோகர் சுவாமிகளைத் தரிசித்து வருகிறேன்."

இந்தச் சம்பாஷணைக்குப் பின் இருவரும் உல்லாசமாக முன்னொரு பொழுதும் அனுபவியாத மன மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினோம். அந்நேரம் முதல் அடுத்தடுத்த நாட்களில், யோகர் சுவாமிகளைச் சந்திக்கும்வரையும், அதே எண்ணம்தான் என் மனதில் குடிகொண்டிருந்தது.

என் வாழ்க்கையில் ஏதோ ஒரு விசேட சம்பவம் நடைபெறப் போவதுபோல் மனம் குதூகலப்பட்டுக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணப் பயணம் காசி யாத்திரை போலிருந்தது. என் நண்பர் என்னை ஒரு புதிய திசைக்குத் திருப்பி விட்டமை, திருவருள் தொழிற்படும் முறைக்கு ஒரு சிறந்த சான்றன்றோ!

## அற்புதமான முதற் தரிசனம்

யாழ்ப்பாணம் சேர்ந்த அன்று மாலையே கொழும்புத் துறைக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டேன். ஒருவருக்கும் எனது நோக்கம் தெரியாது. நான் பிரயாணம் செய்த கார்க்காரனுக்கு, கொழும்புத்துறைச் சாமியார் இருக்கும் கொட்டிலைக் காட்டும்படி சொல்லியிருந்தேன். யோகர் சுவாமிகள் காலையில் மாத்திரம் தன் கொட்டிலில் இருப்பதாகவும் மறுநேரங்களில் பெரும்பாலும் பல இடங்களுக்கும் சுற்றித் திரிவதாகவும், கேள்விப் பட்டிருந்தேன்.

எனவே, பிறரொரு வருடனுங் கூடிச்செல்லாது, தனியே சென்று சுவாமிகளைக் காண வேண்டுமென்னும் எண்ணம் என் மனத்தில் குடி கொண்டிருந்தது. முதற்கண் அவரின் ஆச்சிரமம் இருக்கும் இடத்தை அறிந்து வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பட்டதால், அன்று மாலை கொழும்புத்துறைக்குப் போய்ச் சுவாமிகளின் இருப்பிடத்தை முதலிற் பார்த்து வைத்திருந்து மறுநாள் வைகறையில் அங்குச் சென்று தவறாது அவரைத் தரிசிக்கத் திட்டமிட்டு கொண்டேன்.

மறுநாள் காலை நாலு மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்து, இயன்றளவு உள்ளும் புறமும் தூய்மையாகப் புறப்பட்டேன். முன் செய்திருந்த ஒழுங்கின்படி கார் நாலரை மணிக்கு வந்தது. நான் அப்போது வாழ்ந்த இடம் கட்டுடையில் உள்ள எனது மனைவியின் இல்லம். அவ்வளவு அதிகாலையில் எங்கே போகிறேனென்பதை என் மனைவிக்கும் சொல்லவில்லை.

இரண்டு பாக்கற் கற்பூரமும் ஒரு தீக்குச்சிப்பெட்டியும் மாத்திரம் என் சட்டைப் பையிலிருந்தது.

என்ன நடக்கப்போகிறதோ! சுவாமிகளைச் சந்திப்பேனா! "வா" என்று ஏற்றுக் கொள்வாரோ ! அல்லது வெருட்டிக் கலைத்து விடுவாரோ ! இன்னோரன்ன எண்ண அலைகள் என் மனத்தைக் குடையத் தொடங்கின. மனத்தைச் சாந்தப்படுத்திக் கொள்ள இயன்றவரை தெண்டித்தேன். மனம் முற்றாக அமைதிபெற முன், கார் கொழும்புத்துறையைச் சென்று அடைந்து விட்டது.

"மிக மெதுவாக ஒட்டி, யாதொரு சத்தமுமில்லாமல், சுவாமிகளின் கொட்டில் படலையடியில் நிறுத்து" எனச் சாரதிக்குச் சொல்லியிருந்தேன். அப்படியே சென்று கார் நின்றது. படலை சாத்தியபடியிருந்தது.

**அவருடைய படுக்கை ஒரு வெறும்பாய்; ஒரு மெல்லிய தலையணை; அறையைச் சுற்றிஅரைச் சுவரில் இரண்டொரு சிறு புத்தகங்கள்; கிடுகால் வேயப்பட்ட கூரை; சாணியால் மெழுகப்பட்ட தரை; படுக்கையின் தலைமாட்டில் ஒரு சிரட்டை. சகல உலகும் வந்து தன் தாளில் விழ்ந்து வழிபடும் பெற்றியையுடைய இப்பெரியாரின் வாழ்க்கை வசதிகள் இவ்வளவு தானா?**

கொட்டிலுக்குள்ளிருந்து ஓர் உரத்த சத்தம் "வைரமுத்து"– என்று என் பெயரைச் சொல்லி அழைத்தது.

"ஓம் சுவாமி" என்று தடதடத்த குரலில் பதிலளித்தேன்.

என்ன ஆச்சரியம்! முன்பின் தெரியாத என்னை, இந்தக்கெச இருளில், கொட்டிலினுள் மறைந்திருந்து கொண்டே, பெயர் சொல்லி அழைக்கின்றாரே !! என்ற எண்ணம் எனக்குத் திடீர் அதிர்ச்சியைத் தந்தது.

"படலை திறந்திருக்கு, வா" என்று உத்தரவு பிறந்தது. நான் மெதுவாகக் கொட்டிலை நோக்கிச் சென்றேன்.

"கதவு நிலையில் தலையை மோதிக் கொள்ளாதே; குனிந்து உள்ளே, வா." மௌனமாகவும், சாக்கிரதையாகவும், உள்ளே புகுந்தேன்.

"கற்பூரத்தை நிலத்தில் வைத்து கொளுத்தாதே; பக்கச் சுவரில் ஒரு கற்பூரத் தட்டிருக்கு, எடுத்துக் கீழே வைத்து கொளுத்து." என்றார் சுவாமிகள்.

இந்த வார்த்தை, முன் என் மனத்திலிருந்த அதிசயத்தை, மேலும் அதிகரிக்கச் செய்தது. என்னுடைய சட்டைப் பையுள் கற்பூரம் இருப்பது இவருக்கு எப்படித் தெரியும் என்று ஆச்சரியப்பட்டேன்.

நான் கற்பூரத்தைக் கொளுத்தியவுடன், "இரு, கால்முகம் கழுவிக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டு வெளியே சென்றார் சுவாமிகள்.

கற்பூர வெளிச்சத்தில் அறையைச் சுற்றிப் பார்த்தேன். அவருடைய படுக்கை ஒரு வெறும்பாய்; ஒரு மெல்லிய தலையணை; அறையைச் சுற்றியிருந்த அரைச் சுவரில் இரண்டொரு சிறு புத்தகங்கள். கிடுகால் வேயப்பட்ட கூரை; சாணியால் மெழுகப்பட்ட தரை; படுக்கையின் தலைமாட்டில் ஒரு சிரட்டை சகல உலகும் வந்து தன்தாளில் வீழ்ந்து வழிபடும் பெற்றியையுடைய இப்பெரியவரின் வாழ்க்கை வசதிகள் இவ்வளவுதானா என்ற விசார மெழுந்தது என் மனத்தில்.

சுவாமி திரும்பிவரச் சென்ற சில நிமிடங்களில், எனது மனத்தில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல எண்ணங்கள் உதயமாயின முன்னிருந்த ஐயப்பாடுகளும் விபரீதங்களும் மெல்ல மெல்ல என்னை அறியாமலே மறைந்து விட்டன. ஒருவித பயம் மாத்திரம் நீங்கவில்லை. எனக்குச் சுவாமி என்ன சொல்லப் போகிறாரோ வென்ற பயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு அமைதியாக விருந்தேன்.

## சோதனையுஞ் சாதனையும்

சுவாமிகள் அறையி னுள்ளே வந்ததும் நான் எழுந்து நின்றேன். "இரு" என்றவுடன் இருந்தேன். எனக்கு நேர்முகமாக எதிரில் உள்ள தன் படுக்கைப் பாயில் அவர் அமர்ந்தார். இருவருக்குமிடையில் கற்பூர விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதை அணையவிடாது, ஒவ்வொன்றாகக் கற்பூரத் துண்டுகளை அவ் விளக்கின் மேல் வைத்த வண்ணம் இருந்தேன். சுவாமிகள் அமர்ந்ததும், மௌனமாகக் கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் ஒடுங்கி விட்டார். காலை ஐந்து மணியிருக்கும் வெளியில் இருட்டு அகலவில்லை. எங்கும் நிசப்தமாயே இருந்தது. என் மனக்குரங்கு கால் விட்டோடத் தொடங்கியது. ஒன்றன் பின் ஒன்றாகப் பல வித எண்ணங்கள் மனத்தில் உதிப்பதும், மறைவதுமாக விருந்தன. சுவாமிகளைக் கற்பூர ஒளியில் உற்றுப் பார்த்தபடியேயிருந்தேன்.

அவருடைய அழகிய தோற்றம் அவருடைய சாந்தநிலை, அவருடைய சடாபாரத்தின் சிறப்பு, அவருடைய அசைவற்ற சரீர அமைப்பும் அமைதியும், எனக்குத் தட்ஷணாமூர்த்தத்தை நினைவூட்டியது. எவர் மனத்தையும் கொள்ளை கொள்ளக்கூடிய கவர்ச்சி வாய்ந்த வடிவம் கற்சிலைபோல என்முன் காட்சியளித்தது.

சில நிமிடங்களில், கண்ணைத் திறந்து எனக்கு ஏதேனுமொரு நல்ல வார்த்தை சொல்லுவார் என்னும் நம்பிக்கையுடன், யானும் அமைதியாகவிருந்தேன். சுவாமியையே பார்த்துத் தியானத்தில் நானும் அமர்ந்திருக்க எத்தனித் திருக்கலாம். தியான சாதனையில்லாத சிறியேனுக்கு அஃது எவ்வாறு சடுதியில் கைகூடும், ஆயினும் மனம் ஓரளவு அமைதி நிலையை அடைந்திருந்தது. பதினைந்து நிமிடங்களாயும் சுவாமியின் தியானம் குலையவில்லை. முப்பது நிமிடங்கள் சென்று விட்டன; யாதொரு மாற்றமுமில்லை.

மனதை விட்டு சற்று முன் நீங்கியிருந்த பயம் எனக்குத் திரும்ப உண்டானது; கொஞ்சம் கொஞ்சமாயதிகரித்தது சுவாமிகளின் அகக்கண்ணுக்கு, என் முற்பிறவிகளைப் பற்றிய விபரமும், இந்தப் பிறவியும், இனிவரும் பிறவியும் என்னிடத்தேயுள்ள அளவற்ற குணக்கேடுகளும் குறைபாடுகளும், யாவும் வெட்ட வெளிச்சமாகத், திரையிலே ஒன்றின் பின் ஒன்றாக விழும் படக்காட்சிகளைப் போலத் தென்படுமே! இவற்றையெல்லாம் அறிந்துகொண்டு, கண்களை விழித்தபின் என்ன சொல்வாரோ? தூஷிப்பாரோ? அன்றேல் அவற்றைப் பொருட்படுத்தாது பொறுத்துக் கொண்டு அன்பாக என்னுடன் சம்பாஷிப்பாரோ? இவ்வித எண்ணங்கள் என் மனத்தைக் கலக்கத் தொடங்கின.

மேலும் பதினைந்து நிமிடங்கள் சென்று விட்டன. சுவாமிகளில் யாதொரு அசைவும் காணப்படவில்லை. என் மனந்தத்தளித்தது. சரீரம் வியர்த்தது. என்னால் பொறுத்துக் கொள்ள முடியாத ஓர் அவத்தை நிலை ஏற்பட்டது. என்ன செய்வதென எனக்குத் தெரியவில்லை. அவர் கண்களை மூடிக் கொண்டிருக்கும் பொழுதே, மெதுவாக நான் எழுந்து வெளியேறி விடுவது நன்று போல் தோன்றியது. அது பேடித்தனமாக முடியும்; அப்படி நான் நடந்துகொண்டால் என் பெயரைச் சொல்லி உள்ளே வாவென்றழைத்து உட்கார வைத்த பெரியர் என்னைப் பற்றியென்ன நினைப்பாய்; சீ.சீ, அது தகாத செயல். இன்னும் சிறிது நேரம் இருந்தே பார்ப்போம். என் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு இருக்கத் துணிந்தேன்; ஆனால் மனக்குமுறல் ஓய்ந்த பாடில்லை. ஒவ்வொரு நிமிடமும் என்னுள்ளத்துணர்ச்சியின் வேகம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. இதுகாறும் வியர்வையினால் தோய்ந்திருந்த சரீரம் இப்போது கனன்றது போலிருந்தது $100^0$, $101^0$, $102^0$ ஆக உடம்பின் வெப்பம் ஏறுவது போன்ற உணர்ச்சி என் வாழ்வில் முன்னொருபோதும் பெறாத ஓர் அனுபவம். சுவாமிகள் தியானத்தமர்ந்து நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு மேலாய் விட்டது.

என் நிலையில் ஒரு திருப்பம் தோன்றத் தொடங்கியது. இது வரையும் என்னை வாட்டி வதக்கிய மன வேதனைகள் சிறிது சிறிதாகக் கலையத் தொடங்கின. எது வரினும் வரட்டும்; சுவாமிகள் எது சொன்னாலும் எதைச் செய்தாலும், சித்த சமாதானத்துடன் ஏற்றுக்கொள்ள நான் தயாராகி விட்டேன். அக்கினியில் குளித்தது போலிருந்த வெப்பநிலை மறைந்து விட்டது. சரீரம் காற்றினில் பறந்து விடும் போன்ற ஓர் இலோசான உணர்ச்சி உற்பத்தியானது. யானுமே தியானத்திலிருந்து விடலாம் போலத் தோன்றியது பயமோ, கவலையோ, ஐயப்பாடோ, யாதுமில்லாத ஒரு சாந்த நிலை உருவானது. நான் கொட்டிலுட் புகுந்து ஒரு மணித்தியாலம் சென்றிருக்கலாம். சுவாமி மெதுவாகக் கண்களை விழித்தார்.

"அருமையான உலகம், வைரமுத்து"

(யான் ஒன்றுமே பேசவில்லை)

"சும்மா பாத்திட்டுப் போகத்தானே வந்த நீ"

"ஓம், சுவாமி"

ஒருவருக்கும் ஒரு குறைவுமில்லை. உன்னைப் போலத் தான் நான், என்னைப் போலத்தான் நீ, நூதன மொன்றுமில்லை. எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணாயிரம் வருஷங்களுக்கு முன்னே, டெல்ஹி மாநகரிலே, செப்புத் தகட்டிலே, எழுதி வைத்திருக்கு. அதன்படி நடக்கும்; எனக்கென்ன கவலை? பிரபஞ்சம் முழுவதையும் படைத்தவனுமவன்; காப்பவனுமவன்; அழிப்பவனுமவன்; எனக்கும் உனக்கும் வேலை சும்மாவிருத்தல் தானே.

இரவில் நீ நித்திரைக்குப் போன பின் நடப்பதொன்றுமுனக்குத் தெரியாது.

உன் வீடு, வாசல், பொருள், பண்டம், காசு பணம், ஆடு, மாடு யாவுக்கும் காவல் யார்?

ஆரோ ஒருவன் இவற்றைப் பாதுகாத்து வைத்திருக்கிறான் தானே.

காலையில் எழுந்தவுடன் நீ ஏன், என் வீடு, என் மாடு என் மனைவி என் பிள்ளையென்று நினைத்துக் கூத்தாடுவான்?

இரவில் காப்பாற்றியவன் பகலில் காப்பாற் மாட்டானா?"

இப்படியே அரைமணி நேரம் சுவாமி மிக மிக அன்பாகவும், பல உண்மைகளைப் பல்வேறு விதமாக, விசித்திரமான உவமானங்கள் காட்டியும் கூறிக்கொண்டே போனார். ஒருதாய், தான் அருமையாகப் பெற்று வளர்த்த தன் பிள்ளைக்கு, எத்துணைப்பரிவோடு புத்தி புகட்டுவாளோ அதே போலவே, என் அறிவுக்கேற்றவாறு, எளிமையாகவும் இனிமையாகவும் இருந்தது சுவாமியின் திருவுபதேசம் உலகத்தை மறந்து, என்னையே மறந்து "சும்மா" இருந்தேன் நான். என் ஐம்புலன்களில் செவிப்புலன் ஒன்று தான் தொழிபட்டு கொண்டிருந்தது.

இடையிடையே, என் தாய் தந்தையர், மற்றும் பந்துக்கள், என் மனைவி வழி உற்றார், உறவினர் ஆகியவர்களைப் பற்றியும் அன்பாக விசாரித்தார். அவர்களில் அனேகரை தான் நெடுங்காலம் அறிந்தவர் போல, அவர்களின் பெயர்களைக்கூடக் குறிப்பிட்டு விசாரித்தார். சுவாமிகளின் பரிவும் அன்பும் என் உள்ளத்தை உருக்கியது. நான் கனவிலும் நினைத்திராத வண்ணம் அளவற்ற அன்பு காட்டி கருணையே வடிவமான ..வாமிகள், என்னைத் தான் கண்ட முதல் நாளே தன்வசமாக்கிக்கொண்ட அற்புதத்தையும், அன்று நான் அனுபவித்த ஆனந்தத்தையும், உயிருள்ளவரையும் மறக்கமுடியாது. இங்கே, முற்றாக விபரித்துக் காட்டவும் முடியாது.

காலைஆறரை மணியிருக்கும்:

"நீ எப்பொது கொழும்புக்குத் திரும்புகிறாய்" என்றார் சுவாமி.

"நாளைக்குத் திரும்ப எண்ணியுருக்கிறேன், சுவாமி" என்று விடையளித்தேன் நான்.

"ஒரு பொல்லாப்புமில்லை; நீ போய் வா. கொழும்பிலிருந்து அடிக்கடி இங்கு வரவேணும் என்று நினையாதே. நீ அங்கே இரு; நான் இங்கே இருக்கிறேன். இருவரும் ஒருவரையொருவர் கண்டு கொண்டிருக்கலாம்.

இரவில் நீ நித்திரைக்குப் போன பின் நடப்பதொன்றும் உனக்குத் தெரியாது.

உன் வீடு, வாசல், பொருள், பண்டம், காசு, பணம், ஆடு, மாடு இவைக்குக் காவல் யார்?

ஆரோ ஒருவன் இவற்றைப் பாதுகாத்து வைத்திருக்கிறான் தானே?

காலையில் எழுந்தவுடன் நீயேன் என்வீடு, என் மாடு, என் மனைவி, என் பிள்ளை என்று நினைத்துக் கூத்தாடுவான்.

யோகர் சுவாமிகள்

"கண்டுகொண்டிருக்கலாம்" என்ற நம்பிக்கை என் மனதிலும் உதயமாய்விட்டது. அவ்வளவுக்குச் சுவாமிகளின் வடிவம் என் மனசில் படிந்து விட்டது. அதை இலேசில் மறந்துவிடமுடியாது. இந்த எண்ணத்துடன் நான் எழுந்து நின்றேன். அந்தச் சமயம் படலையைத் திறந்து கொண்டு சுவாமிகளின்பழைய அடியார்களிலொருவர்ஒரு Thermos flask உடன் வந்து சேர்ந்தார்.

"நல்ல நேரத்தில் வந்தாய்; வைரமுத்துவுக்கு ஒரு தேத்தண்ணி குடிக்கக் கொடுத்துவிட நான் நினைக்க நீயும் வருகிறாய், கொண்டுவா" என்றார் சுவாமி. Thermos flask ஐ வாங்கித் தானே திறந்து, அதன் மூடியில் ஊற்றி, என்னிடம் நீட்டிக் கொண்டு,

"நீ எந்த நாளும் காலையில் ஒரு தேத்தண்ணி குடிக்கிற வழக்கம், இல்லையா? பார்த்தியா தேத்தண்ணி இங்கும் உன்னைத்தேடி அந்த நேரத்துக்கு வந்து விட்டது."

தேனீரைக் குடித்து விட்டுச் சுவாமிகளின் பாதாரவிந்தங்களில் விழுந்து என் ஆசை தீர, மனதாரத், தலையாரக் கும்பிட்டேன். என் வாழ்நாளில் இதுதான் முதல் முறை பூமியில் படிந்து, ஒரு மனிதவடிவத்தை நான் வணங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழாரின் பெரிய புராணம் தேசிய இலக்கியம்

ஒரு குறிக்கோளுடன் வாழ்ந்தவர்கள் பற்றி எழுதப்பட்ட நூலே பெரிய புராணம். சிவனை வணங்கி சிவகடாட்சம் பெற்றவர்கள் பற்றி மட்டும் எழுதப்பட்டதுதான் பெரிய புராணம் என்று எண்ணுவது தவறு.

அறிவில்லாதவர்க்கும் அறிவு படைத்தவர்களுக்கும் அருள் பாலிப்பவன் இறைவன். அதனை உணர்த்தும் நெறியே சைவ சமயம். பெரிய புராணமும் இதனையே சுட்டிக்காட்டுகின்றது.

ஒரு குறிக்கோளுடன் வாழ்ந்த பெருமக்கள் பற்றி கூறுவதே பெரிய புராணம்.

சிவனை வணங்கி அவன்தாள் அடைந்த அடியார்கள் பற்றிக் கூறுவதுதான் பெரிய புராணம் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது.

சிவனை வணங்கி முத்தியடைந்த அடியார்கள் 63 பேர்தானா நம் மத்தியில் வாழ்ந்தார்கள் என்ற சந்தேகம் எழும்.

பல்வேறு இலட்சியங்களுடன், குறிக்கோள்களுடன் வாழ்ந்து இறைவனைப் பற்றிக் கொண்டவர்கள் பற்றிய வரலாறுகளை மனோதத்தவ அடிப்படையில் சேக்கிழார் பெருமான் அழகாகப் பெரிய புராணத்தில் கூறியிருக்கின்றார்.

## திருநீலகண்ட நாயனார்

திருநீலகண்டத்துக் குயவனார் சரித்திரத்திலே, சேக்கிழார் பெருமான், குயவனாரின் குறிக்கோளை வலியுறுத்துகின்றார்.

பரத்தையர் வீடு சென்று வந்த குயவனாரை, அவரது மனைவி "எம்மைத் தொடாதீர்" என்று ஒருநாள் தடுத்ததும்–

"எம்மைத் தொடாதீர்" என்று மனைவி சொன்னதை, குயவனார் பெண் இனமே சொன்னதாக எடுத்துக் கொண்டதும் –

அதைத் தொடர்ந்து குயவனார் தனது மனையாளுடன் அயலவர்கள் சந்தேகிக்காத அளவு ஒற்றுமையாக வாழ்ந்து வந்தாலும், தாம் பத்திய உறவு இன்றி வாழ்ந்தார்கள் என்ற ரகசியத்தை வெளிகொணரும் விதத்தில் இறைவன் நடந்து கொண்டார் என்பதையும் –

மனோதத்துவ அடிப்படையில் திருநீல கண்டத்துக் குயவனார் சரிதம் கூறுகின்றது.

## சட்டி

குயவனாரிடம் சட்டியை இரவல் கொடுத்த ஒருவர், ஒருநாள் சென்று அச்சட்டியை திருப்பித் தரும்படி கேட்டார். குயவனாரோ வீட்டில் துருவி துருவித் தேடிப் பார்த்தார். காணக் கிடைக்கவில்லை.

இரவல் கொடுத்தவருக்கோ கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "உண்மையிலேயே காணாமற் போய் இருந்தால் உன் பிள்ளையைக் கொண்டு சத்தியம் செய் என்றார் இரவல் கொடுத்தவர்.

குயவனார் மாட்டேன் என்று மறுத்தார். அப்படியானால் உன் மனைவியின் கையைப் பிடித்தபடி குளத்திலே இறங்கிச் சத்தியம் செய் என்றார். அதற்கும் மறுத்தார் குயவனார்.

அச்சமயம்தான் திருநீல கண்டத்துக் குயவனார் எந்தக் குறிக்கோளுடன் வாழ்கின்றார் என்ற இரகசியமே வெளியானது.

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்

இன்னொரு நாயனார் வாழ்ந்தார். அவர் மிகவும் எளிமையாக இறைவனை வழிபட்டார். அவரது குறிக்கோள் எல்லாப் பொருள்களிலும் நாவுக்கரசரைக் காண்பது.



சிறுத்தொண்டர்

அவர் தனது வீட்டில் உள்ள சகல பொருள்களுக்கும் நாவுக்கரசர் என்று பெயர் சூட்டினார்.

மாட்டுக்கும் அதுதான் பெயர். பிள்ளைகளுக்கும் அதுதான் பெயர். அதில் அவரது பிடிவாதம், இலட்சிய வெறி. அந்த நாயனார்தான் அப்பூதியடிகள்.

## பரஞ்சோதி

வாதாபி யுத்தத்திலே தளபதியாக இருந்து பலரைக் கொன்று வெற்றியை ஈட்டிய பரஞ்சோதியைப் பார்த்து, உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருகோணமலை இளைஞர் அருள்நெறி மன்றம் 1980ல் நடாத்திய திருமுறை விழாவில் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் ஆற்றிய உரையின் சுருக்கத்தைத் தருகிறார் சிவநெறி ஆசிரியர் சி. குருநாதன்.**

பிள்ளையைக் கறி சமைத்து எனக்குப் படைக்க வேண்டும் என்று கேட்டார், இறைவன்.

இது பரஞ்சோதியின் அகங்காரத்தை அடக்க இறைவன் கேட்ட கேள்வி. அங்கே சிறுத் தொண்டன் சரித்திரம் பிறந்தது.

யுத்தத்திலே எத்தனையோ பேரைக் கொன்றாய்! எதற்காக?– என்று இறைவன் கேட்க.

"என் நாட்டிற்காக அவர்களைக் கொன்றேன்" – என்றார் தளபதி பரஞ்சோதி.

அப்படியானால் எனக்காக உன் பிள்ளையைக் கறி சமைத்துக் கொடு"–என்று கட்டளையிட்டான் இறைவன்.

அடியார்களுக்கு அமுது படைக்கும் சிறுத் தொண்டன், அன்று ஒருவரும் அகப்படாது தத்தளித்தான். அச் சமயம் தான் வயோதிப அடியார் தென்பட்டார்.

மனமகிழ்ந்த சிறுத் தொண்டன், அடியாரை இல்லத்திற்கு அழைத்துச் சென்றான்.

## நிபந்தனை

விருந்தாளியோ தனக்கு எப்படியான அமுதுபடைக்க வேண்டும் என்பது பற்றி நிபந்தனை போட்டார்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு பிள்ளையாக இருக்க வேண்டும். மறுவே இருக்கக் கூடாது. தாய் பிடித்து இருக்க, தந்தை அப்பிள்ளையை வெட்டிக் கறி சமைக்க வேண்டும் – இப்படியான நிபந்தனைகள் சிறுத்தொண்டனின் அகம்பாவத்தை அடக்க இறைவன் போட்ட நிபந்தனைகள்.

சிறுத்தொண்டன் ஏற்றுக் கொண்டான். அவனின் அகங்காரம் இன்னும் இருக்கின்றது என்று எண்ணிய இறைவன் இன்னொரு நிபந்தனை போட்டான்.

## பிள்ளைக்கறி

தந்தை, தாய், பிள்ளை மூவரும் மகிழ்ச்சியுடன் இதனை நிறைவேற்ற வேண்டும்.

தந்தை, அடியார் கேட்டதைக் கொடுக்க வேண்டும் என்ற அகங்காரத்துடன் மகிழ்ச்சியாக பிள்ளையை அரிய –

அடியார் கேட்டபடி அமுது படைக்கப் போகின்றேன் என்ற சந்தோஷத்துடன் தாய், பிள்ளையின் தலையைப் பிடிக்க –

பிள்ளையோ, இது என்ன! அம்மாவுடன் அப்பாவும் புது விளையாட்டு விளையாடு கின்றார்கள் – என்று மகிழ்ந்து கொண்டிருக்க, சீராளன், கறியாகுகின்றான். இறைவனின் அந்த நிபந்தனை நிறைவேறுகின்றது.

இன்னும் சிறுத் தொண்டன் அகம்பாவம் குறையவில்லையே என்று அறிந்த இறைவன்.

கூட இருந்து அமுது சாப்பிட இன்னொரு அடியார் தேவை என்று சிறுத் தொண்டனைக் கேட்கின்றார்.

"நான் இருக்கிறேனே சுவாமி" என்கிறார் சிறுத் தொன்டன். இன்னும் அவரிடம் அகங்காரத்தை இறைவன் காண்கின்றான்.

சிறுத்தொண்டனும் அமர்கின்றான். உன் பிள்ளையைக் கூப்பிடு, அவனும் சாப்பிட வரட்டும்– என்று இறைவன் சொல்கின்றார்.

பிள்ளைதானே கறியாகி விட்டது. பின்னர் எப்படி அவன் வருவான்? ஆனால் சிறுத் தொண்டனோ வெளியில் வந்து "மைந்தா வருவாயாக!" என்று அழைக்கின்றான்.

சிறுத் தொண்டனின் "மைந்தா!" என்ற சொல்லிலே மமகாரத்தை, மமதையை இறைவன் காண்கின்றான்.

பிள்ளை வரவில்லை. தாய் போய் "சீராளா ! வா" என்று கூப்பிடுகின்றாள். பாடசாலையில் இருந்து வருவது போன்று ஓடி வருகின்றான் சீராளன். சிறுத் தொண்டனின் அகங்காரம் அழிகின்றது.



சி. குருநாதன்

அங்கே யார் உயர்ந்து நிற்கின்றார் என்றால், சிறுத் தொண்டன் அல்லன். சிறுத் தொண்டனின் மனைவிதான்.

சரியோ பிழையோ தான் கொண்ட குறிக்கோளைக் கைவிடாது வாழும் அடியானாக சிறுத் தொண்டன் காட்சியளிக்கின்றான்.

குறிக்கோள், இலட்சியப் பற்றுடன் வாழ்ந்தவர்கள் பற்றிய வரலாற்று நூல்தான் பெரிய புராணம். அப்படி வாழ விரும்புபவர்கள் படிக்க வேண்டிய நூல் பெரிய புராணம். அவர்கள் எம்மதத்தினராயினும் சரி, பெரிய புராணத்தைப் படிக்க வேண்டும்.

எனவே தான் பெரிய புராணம் ஒரு தேசிய இலக்கியமாகக் கருதப்படுகின்றது.

*நன்றி தினபதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை கிருஷ்ணன் கோயில் திருக்குட முழுக்குத் திருக்காட்சி

சுமார் நூற்றைம்பது ஆண்டு காலப்பழமை வாய்ந்த திருக்கோணமலை கிருஷ்ணன் கோயில் திருக்குட முழுக்குக் கண்டோம். கரையிலா மகிழ்ச்சியில் திளைத்தோம். நாராயணா என்றால் நாக்குளிரும். திருக்குட முழுக்கு விழாவில் இப்படித் தமிழ்ப் பாக்களால் கண்ணனைப் பாடி பரவியமை எமக்கும் பெரு மகிழ்வினைத் தந்தது.

*நாராயணா என்றால் நாக்குளிரும் – இதை*
*பாராயணம் செய்தால் மனங்குளிரும்*
*தீராத பிணிதீர வழிபிறக்கும் – முன்பு*
*பாராத பொருள் பார்க்க விழிதிறக்கும்*

*கனியாகிச் சுவையாகிப் பாலாகிப் பழமாகி*
*கண்ணாகி மணியாகி கருவாகி – உயிராகி*
*எண்ணாகி எழுத்தாகி ஏகாந்தத் துணையாகி*
*விண்ணாகி மண்ணாகி வெளி நின்ற*
- பரஞ்சோதியே

*சிறையென்னும் பிறவித் தளையறுத்து நீ*
*செப்பிய கீதையின் வடிவு கண்டேன்*
*என் குறை முடிப்பாயென்று கழல் பிடித்தேன் நீ*
*புல்லாங்குழல் பிடித்தா யென்று புகழ் படைத்னே்.*

குருக்கள் அவர்கள் இப்பாடலைப் பாட பிரதிஷ்டா பிரம்மஸ்ரீ சுவாமி விஸ்வநாதக் குருக்கள் ரசித்து மெய்யுருகி இறைவனுடன் கலந்து தாளம் தவறாதிருக்க தாளம் போட்டவாறு வேணுகானம் ஓதப்பட்ட பாங்கு உண்மையில் அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்களையும் இறைவன் பால் ஈர்த்தது. அவனது திருவடிகளில் கரம் குவித்து பேரானந்த பெருவாழ்வுக்கு உறுதுணை காட்டும் தூண்டாமணி விளக்காக மிளிர்ந்தது.

அந்நியர் வருகையாலும் அவர்களின் படைத்தளம் அமைந்த இடம் திருக்கோணமலை என்ற சரித்திர வரலாற்று உண்மையாலும் இதன் இயற்கை அமைப்பு அனைத்து நாடுகளுக்கும் ஓர் வரப்பிரசாதம் என்ற நிலை. ஆனால் பலபேர் பாதிப்புக்களுக்குட்பட்ட போதும் தமது வளம் நிறைந்து இன்றுவரை சிறப்புடன் விளங்குவதற்கு இப்பூமியின் ஆத்மீக சக்தி உயர் சக்தியாக விளங்குவது முக்கிய காரணமாகும்.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இந்தியப்படையொன்று கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் திருக்கோணமலைக்கு வந்த சந்தர்ப்பத்தில் கிருஷ்ண வழிபாடுடைய இந்திய சீக்கியர்கள் தமது வழிபாட்டுக்கு ஒரு தலம் வேண்டும் என்ற நிலையில் திருக்கோணமலையில் இடம் தேடினர் தற்போதுள்ள இடத்தை கழுகு காட்டியதாக கதையுமுண்டு. இன்று மடத்தடிச் சந்தி என அழைக்கப்படும் அப்பகுதி நகர நுழைவாயிலில் அமைந்துள்ளது. இவர்களது வழிபாட்டிற்கு ஆவன செய்ய சிவவழிபாட்டு சைவர்கள் தமது வீரகத்தி பிள்ளையார் கோயில் , காணியை கிருஷ்ணர் கோயில் கட்ட வழங்கினார்கள்.

சமய சன்மார்க்க உணர்வுகள் கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பே திருக்கோணமலையில் பரவிக் காணப்பட்டது என்பதற்கு இச் சான்று போதுமானது.



இ. சோமசுந்தரம்

இக் கோயிலின் நிர்வாகம் பட்டண தெருவார் என்றழைக்கப்படும் சமூகத்திடமும், வாணிபம் செய்து வாழ்ந்த செட்டியார் வம்சத்திடமும் ஒப்படைக்கப்பட்டது என்பதும் இதன் பூஜை, வழிபாட்டு கிரியைகளை சிறந்த குருக்களாக விளங்கிய யோகேஸ்வரக் குருக்கள் பரம்பரையினரிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதும் சாசனத்தில் எழுதப்பட்டு இன்றுவரை பேணப்பட்டு வருகிறது.

இக் கோயிலின் மூல விக்கிரகம் வன் செயலின் போது 1980 ம், 1983ம் ஆண்டு காலப் பகுதியில் சேதமாக்கப்பட்டது. இன்று மீண்டும் இந்தியாவில் சிறந்த ஆச்சாரியர்களால் உருவாக்கப்பட்டு கொண்டுவரப்பட்டு மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இக் கோயில் அமைத்தபோது இக்கோயிலுக்காக இந்தியாவிலிருந்த கற்கள் கொண்டு வரப்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலஸ்தானம் தனிக் கருங்கல்லினால் செய்யப்பட்டுள்ளது. கருமை மிகுந்த சிறந்த வேலைப்பாடுகளுடன் இன்றும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

இடதுபக்கம் நாராயணம்பெருமானும் வலதுபக்கம் இராமனின் சுவடுகளும் நேரெதிரே வலதுபக்கம் அனுமானும் இடதுபக்கம் சூரியபகவானும் அமையப்பெற்றுள்ளன.

கொடிக்கம்பத்தின் முன் கணபதி இருப்பார் என்ற நினைவுடன் செல்பவர்கள் ஏன் கணபதி இல்லையென்ற கேள்வியைக் கேட்டு விளக்கம் பெறுவதைக் காணக்கூடியதாயிருந்தது. சைவக் கோயில் அமைப்புகளில் அமையப் பெற்றவாறு வேறு தெய்வங்கள் இல்லாமை பலரின் கேள்விக்கும் அதன் விளக்கத்திற்குமாக மக்கள் அக்கறையுடன் கேட்டுத் தெரிந்து கொள்கிறார்கள். நாமம் போடவேண்டிய ஆலயமது. ஆனால் அனைவரும் பொட்டாகவே அணிகின்றார்கள். பகவான் அதனை ஏற்றுக்கொண்டு அருள் செய்கின்றார். இறைவனைப் பொறுத்த வரையில் நாமம், பொட்டு, பூச்சு, சடாமுடி, மொட்டைத் தலை அனைத்தும் ஒன்றே.

சுவாமி விபுலானந்த அடிகள் கூறிய வண்ணம் ''உள்ளக் கமலம்'' இறைவனுக்கு வேண்டியது என்றும் மழித்தாலும் நீட்டாலும் அல்ல என வள்ளுவனும் கூறினார்கள் அனைத்தையும் ஒன்றுசேர கிருஷ்ணர் ஆலயத்தில் கண்டேன், மகிழ்ந்தேன். அன்பே சிவம், அன்பும் சிவமும் ஒன்று என்ற நோக்கில் இறைவனிடம் அன்பு கொண்டால் அதுவே இறையருளுக்குள்ள சிறந்த பாதை. இதனை உணர மறுக்கும் வரை உலகம் துன்பச் சுழலில் சுழன்று கொண்டே இருக்கும்.

சிவாச்சாரியார்களை, தலைமை பிரதிஷ்ட பிரதமகுரு பிரமஸ்ரீ சுவாமி விஸ்வநாதக் குருக்கள் ஆகியோரின் கிரியைகள் பக்திமயமானது. அருள் பெற்றுக்கொள்ளத் தக்கது என்பதை காண முடிந்தது, உணர முடிந்தது. 1925 ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கிருஷ்ணர் கோயில் பின்1980 ம் ஆண்டு கலவரத்தில் மீண்டும் பாதிக்கப்பட்டது. 26. 06. 98 இல் மீண்டும் குடமுழக்குக்கண்டு திருகோணமலை எங்கும் அருள் வெள்ளம் பெருகட்டும், மக்களனைவரும் இன்பமே சூழ வாழவழி கிடைக்க வேண்டும் என்று பகவான் தாளில் பணிந்து வேண்டுவதுடன், பரிபாலன சபையினரையும், தொண்டர்களையும் பாராட்டுகின்றேன். மீண்டும், அவர்களின் தொண்டுள்ளம் பணிசெய்து அருள் பெற பகவான் அருள் புரியட்டும்.

## *வேண்டுகோள்*

*பேரன்புக்குரிய வாசகர்களே,*

பல்சமயக் கருத்துக்களை ஏந்திவரும் பேழையாக ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழி இதழ்கள் உருவாக வேண்டும் என்ற நெடுநாளைய எண்ணம் இறையருளாற் கைகூடியுள்ளது. இவ்விதழ் காலாண்டிதழாக தற்போது வெளிவந்துள்ளது.

இவ்விதழ் தொடர்ச்சியாக மலர்ந்து பல்சமய ஆன்மீக நறுமணம் பரப்பி நீடித்த பயன்தரச் சந்தாசெலுத்தி ஊட்டமளிக்குமாறு கோருகின்றோம்.

காலாண்டுச் சந்தா:

இலங்கை ரூ 30/= வெளிநாடு £ 1.00 (தபாற் செலவு உட்பட)

ஆண்டுச் சந்தா

இலங்கை ரூ.120/= வெளிநாடு £ 4.00 (தபாற் செலவு உட்பட)

காசோலை, காசுக்கட்டளை **"Sivagami Ammal Publications"** என்ற பெயருக்கு எழுதப்பட வேண்டும். கீழ்வரும் படிவத்தை நிரப்பி காசோலை/காசுக்கட்டளையை இணைத்து எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இவ்வண்ணம்
வே.வரதசுந்தரம்
ஆசிரியர்

## *சந்தா விண்ணப்பம்*

**ஆசிரியர்,**
**சந்நிதி,**
**39/36, வது ஒழுங்கை, கொழும்பு 06, இலங்கை.**

நான் சந்நிதி காலாண்டிதழுக்கு காலாண்டு/ஆண்டு சந்தா செலுத்த விரும்பி இத்துடன் ரூபா.................................க்கான காசோலை/காசுக்கட்டளை அனுப்புகிறேன்.

*அனுப்பவேண்டிய முகவரி:*

..................................................

..................................................

..................................................

| காசோலை காசுக்கட்டளை இல. | வங்கி/தபால் நிலையம் | திகதி |
|---|---|---|
| | | |

..............................
*கையொப்பம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருகவதை கொடியது

உலகத்தில் பிறந்த அனைத்து ஜீவராசிகளும் வாழ்வதற்கு உரிமையுண்டு. அனைத்தும் இறைவன் படைப்புகளே இந்து தர்மம் இதனை மேலாக வலியுறுத்துகிறது. பஞ்சமா பாதகங்களுள் மிகவும் கொடியது உயிர்க் கொலையாகும். "எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய்" என்கிறார் யோகர் சுவாமிகள். "கொல்லன் புலாலை மறுத்தானை எல்லா உயிரும் கைகூப்பித் தொழும்" என்கிறது திருக்குறள். இன்று யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் இறை பெயரைக் கூறி உயிரினங்கள் பலியாக்கப்படுகின்றன. வேள்விகள், யாகங்கள் நடைபெறுகின்றன. நாளுக்கு நாள் கொல்களங்கள் புதிதாக முளைக்கின்றன. இது பற்றி சாதி சமய வேறுபாடின்றி மானிடப் பிறவிகளாகிய நாங்கள் சிறிது சிந்தித்தால் கொலை, மிருக வதையால் நாம் எத்துணை பாவத்தைச் செய்கின்றோமென உணரலாம்.

யக்ஞங்களும் யாகங்களும் மிக்க மதிப்புடையவை வேள்வித்தீயில் புனிதப் பொருட்களை அர்ப்பணம் செய்வதும் சரியான முறையில் செய்யப்படும் யாகங்கள் அதற்குரிய பலனைத் தந்தேயாகும். இது ஒரு மறுக்க முடியாத உண்மை. பழங்காலத்தில் இப்படிப்பட்ட யாகங்களைச் செய்வது வழக்கம். அந்த யாகத்தில் பிராணிகளைப் பலி தருவது வழக்கம். பிராணிகள் என்பது ஒரு சங்கேத மொழியே. வாயில்லாப் பிராணிகளைப் பலி தருவது நோக்கமல்ல. மக்கள் அவைகளின் வாழ்க்கையை தியாக குண்டலத்தில் முடிக்க வேண்டும் என்பதில்லை. பிராணிகளே தியாக வாழ்வு வாழ்கின்றன.



ஆன்மீக மொழியில் பிராணி (பசு) என்றால் "நான்" என்ற உணர்வைக் குறிக்கும். அதாவது "நான்" என்ற அகங்காரத்தைப் பலியிடுதலே பலி என்று பொருள். இறைவனை பசுபதி, கோவிந்தன் என்றும் அழைப்பார்கள். பசுபதி என்றால் (பசு - ஜீவன்) எல்லா உயிர்களுக்கும் தலைவன் என்று பொருள். கோவிந்தன் என்றால் பசுக்களை (ஜீவன்களை ) ரட்சிப்பவன் என்று பொருள். பசுக்களை மேய்த்தல் என்னும் கண்ணனின் லீலை அனைத்து உயிர்களுக்கும் அவரே ரட்சகர் என்பதையே குறிக்கின்றது.

இன்று இறை தத்துவங்கள், சாத்திர விதி முறைகள் எல்லாம் அடையாளம் காண முடியாதபடி மாற்றப்பட்டு விட்டன. தத்துவங்களுக்கும் செயல் முறைகளுக்கும் இடையில் மிகப் பெரிய இடைவெளி தோன்றி விட்டது. அகங்காரத்தை முற்றிலும் ஒழிப்பது மிகவு-மம் சிரமமான செயல். அதனாலதான் மனிதன் வாயற்ற பிராணிகளான ஆடு மாடு கோழி போன்ற பிராணிகளைப் பலியாகத் தருகிறான்.

ஒரு மனிதனிடம் தமோகுணம், ராஜோகுணம் சாத்வீக குணம் என்ற 3 குணங்கள் உள்ளன. மிகவும் கீழ்த்தரமான தமோ குணத்தின் அடையாளமே பிராணிகளைப் பலியிடுதல்: உலகப் பற்றில் அகப்பட்ட மனிதன் அகங்காரம் என்னும் மிருகத்தைப் பலி தருவதுதான் சாத்வீக பாதை அதுவே மீட்சிப் பாதை.

*தொகுப்பு: ம. சிவயோகசுந்தரம்.*

சில காலமாக நிறுத்தப்பட்டிருந்த மிருக பலி மீண்டும் சில கோயில்களில் வேள்வி என்ற பெயரில் கொல்களங்கள் அமைக்கப்படுவது மிக வேதனை தரும் விஷயமாகும். மக்களின் ஒரு சாராரின் இந்தப் பாவச் செயல்களுக்கு நமது வேதங்களில் ஆதாரம் உண்டு என இவர்கள் வாதிடுவது தான் ஆச்சரியத்திற்குரியது. உலகத்திலுள்ள எந்த ஒரு மதமும் உயிர்க் கொலையை ஆதரிக்கவில்லை. ஒவ்வொருவரும் தமக்கேற்ற முறையில் மதங்களின் கொள்கைகளை மாற்றியதன் விளைவுதான் இது. இவ்வுலகில் அவதரித்த எந்த அவதாரமும் மிருக பலியையோ அல்லது வதையையோ செய்யச் சொல்லவில்லை அவதாரங்கள் போதித்தது எல்லா உயிர்களிடமும் அன்பைச் செலுத்து என்றே.

பகவான் கிருஷ்ணன் மிருக பலியைத் தடுக்கவும், உயிர்கள் அனைத்திற்கும் இன்னா செய்யாமையையும் அகிம்சை நெறியையும் போதிப்பதற்கும் தனது தெய்வீக ஆற்றலின் ஒரு அம்சமாக புத்த பிரானை உலகத்திற்கு அனுப்பினார்.

புத்தரின் அவதாரநோக்கம் ஓரளவு வெற்றி அடைந்தபோதும் வேதங்களுக்கு உரிய மரியாதை கிடைக்கவில்லை. அடுத்ததாக ஆதிசங்கரர் அவதரித்தார். முப்பத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்த சங்கரர் வேதங்களின் தகுதியை நிறுத்தினார்.

யேசுபிரான் ஜெருசெலத்தில் கோயிலில் பறவைகளையும் புறாக்களையும் மற்றும் உயிரினங்களையும் மக்கள் பலியிடுவதைப் பார்த்து இரத்தம் சிந்தும் இச்செயலைக் கண்டித்தார். இதனால் ஆத்திரமடைந்த குருக்கள்மார் "நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கும் தெய்வத்தை சினந்தணிப்பதற்காகச் செய்கிறோம்" என்றனர். ஆனால் அவர் அவற்றை எதிர்த்து உயிர்ப்பலியை நிறுத்துவதில் வெற்றி கண்டார். மேலும் யேசுபிரான் பின்வருமாறு கூறினார்: "நீ மிருகங்களின் மாமிச சதைத்துண்டங்களை உண்பாயானால் அது உன்னுடைய சகோதரனுடைய சதைத் துண்டங்களை உண்பதற்குச் சமனாகும்" என்றார்.

புத்த பிரான் பிம்பிராச மன்னனின் யாக சாலைக்குச் சென்று அங்கு அந்தணர்கள் மந்திரங்களை ஓதி வெள்ளாடு ஒன்று பலிபீடத்தில் கிடத்தியிருப்பதைப் பார்த்துப் பதை பதைத்து தீஷிதர் ஆட்டை வெட்டக் கத்தியை ஓங்க, குறுக்கே பாய்ந்து தடுத்து நிறுத்தினார். உயிரைப் பறிப்பது எல்லோருக்கும் எளிது. ஆனால் இறந்த உடலை எழுப்ப முடியுமா ?

முஸ்லீம்களது பெருநாள் ஒன்றில் இளங்கன்று ஒன்று பூமாலைகளாலும் தோரணங்களாலும் சோடிக்கப்பட்டு கொல்லப்படுவதற்காகக் கட்டப்பட்டுள்ளது. இதை கபீர் அவர்கள் சென்று நிறுத்தி 'எங்களைப்படைத்த அல்லாதான் மிருகங்களையும் பறவைகளையும் படைத்துள்ளார் இந்தக்கன்றை ஏன் கொல்ல விரும்புகிறீர்கள் ? அது உங்களுக்கு என்ன தீங்கு செய்தது ? தயவு செய்து விட்டுவிடுங்கள்' என்று மன்றாடினார் கபீர். அனைவரும் சிறிது நேரம் அமைதியாக இருந்து யோசித்து கன்றைக் கொல்வது கூடாது என ஒரு முகமாக ஒப்புக் கொண்டனர்.

இன்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் மீண்டும் பூமிக்கு, பகவான் ஸ்ரீ சாயியாக அவதரித்துள்ளார். தெய்வீகக் குணங்களுடன் அவதரித்த அவர் இம்முறை வேத கலாச்சாரத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்ற திடசங்கற்பத்துடன் வந்துள்ளார். பகவான் சாயி பாபா தமது பிறந்ததின விழாவில் பக்தர்களிடம் ஒரு பரிசைக் கேட்டார். அது "சுவாமி சொல்கிறேன் இந்நாள் முதல் யாராகட்டும் இறைவன் பக்தன் என்று சொல்லுபவன் மாமிசம் சாப்பிடுவதை அறவே நிறுத்த வேண்டும். காரணம் என்ன? இந்த மாமிசம் மிருகக் குணத்தை வளர்க்கின்றது. உணவு எப்படியோ அப்படியே மனம். மாம்பழம் சாப்பிட்டால் ஏப்பம் மாம்பழத்தைச் சார்ந்தே இருக்கும். ஆகவே முதலில் மாமிசத்தை நிறுத்த வேண்டும். மாமிசம் சாப்பிடுவதற்காக நீ ஒரு மிருகத்தைக் கொல்வது எத்தனை பாவம் ? பஞ்ச பூதங்களால் நிறைந்த மனிதன் அதே பஞ்ச பூதங்களால் ஆன மிருகத்தை வதை செய்வது என்ன நியாயம் ?



# சிவசுப்பிரமணியம் நினைவுப் பரிசில்



மாணவ, மாணவியரே !

கோயில் அற்புதங்கள், ஒழுக்க ் சமயம் சார்ந்த உங்கள் ஆக்கங்களை உங்கள் புகைப்படத்துடன் பிரசுரிப்போம்.

பிரசுரமாகுஉங்கள் படைப்புகளுக்கு நடுவர் குழுவின் சிபார்சுக்கமைய சிவசுப்பிரமணியம் நினைவுப் பரிசில்கள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | - | ரூபா 300/- |
| இரண்டாம் பரிசு | - | ரூபா 200/- |
| மூன்றாம் பரிசு | - | ரூபா 100/- |

ஆக்கங்களுடன் பின்வரும் கூப்பனை இணையுங்கள்.

## அனுப்ப வேண்டிய முகவரி :-

ஆசிரியர்,
சந்நிதி,
39, 36வது ஒழுங்கை, கொழும்பு 6.

---

**சந்நிதி** - *சிவசுப்பிரமணியம் நினைவுப் பரிசில்*

முழுப் பெயர் ........................................................

முகவரி ........................................................

........................................................

வகுப்பு ........................................................

பாடசாலை ........................................................

இது எனது சொந்த ஆக்கம்

........................................ ........................................

பெற்றோர் அதிபர் / ஆசிரியர் மாணவர் கையொப்பம்

திகதி ..............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயமும் சமயங்களும்

விஞ்ஞான அறிவும் நாகரீகமும் விரைந்து வளரும் இவ்வுலகில் மனிதநேயம், சமூக உணர்வு என்பன இருந்த இடம் தெரியாமல் அழிந்து கொண்டிருப்பது வேதனை தருவதாக உள்ளது.

சமயங்களும் கோயில்களும் அதிகரித்துக் கொண்டு போகின்றன. சமயக் கிரிகைகளை மிகுந்த ஈடுபாட்டுடன் செய்கிறோம். ஆனால் மதங்கள் தோன்றியதன் காரணத்தைச் சிந்தித்து பார்க்கிறோமா? மனிதனை மனிதத் தன்மையுள்ள நிறைவான மனிதனாக்கவே சமயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அதன் ஆரம்ப நிலையாக கிரிகைகள் சடங்குகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஓரளவு மனமுதிர்ச்சியடைந்ததும் யோகம், ஞானம் என்னும் உயர்நிலையை மேற்கொள்ள முயல வேண்டும். இதை விடுத்து நாம் எமது வாழ்நாள் முழுவதிலுமே கிரிகை சடங்குகளில் ஈடுபடுகிறோமே தவிர சமயத்தின் முழுப்பயனையும் அடைவதில்லை.

நாம் இவ்வுலகில் எமக்கென மட்டுமே வாழ விரும்புகிறோம். என் வீடு, என் குடும்பம் என ஒரு சிறு வட்டத்துக்குள் வசதிகளுடன் வாழப் பழகி விட்டோம். செல்வத்தை எவ்வழியிலாவது தேடிக் குவித்தால் போதும் என்ற நிலைக்கு ஆளாகி விட்டோம். எவ்வளவு தான் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தாலும் உயிர் இருக்கும் வரை தான் அவன் புகழ் உலவும்.

மரணத்தின் பின் அவனை எவரும் எண்ணிப்பார்க்க மாட்டார்கள். ஆனால் பிறருக்காக வாழும் நல்லவர்கள், சமூக நன்மைக்காகப் பாடுபடும் உயர்ந்தவர்கள் ஒருபோதும் இறப்பதில்லை. உடல் அழிந்தாலும் அவர்கள் பெயர் காலங்காலமாக நினைவு கூ[illegible]ம்.

சாதாரண எளிய வாழ்வு வாழ்ந்த காந்தி, மகாத்மாவாக உயரக் காரணம் அவரது மனித நேயமும் சமூக உணர்வும் தான். சமீபத்தில் அகாலமடைந்த இளவரசி டயானா அவரது செல்வச் செழிப்பிற்காக மக்கள் மனதைக் கவரவில்லை. குறுகிய காலத்தில் அவர் மேற்கொண்ட சமூக நன்மைக்கான முயற்சிகள் தான் அவரது மறைவினால் உலக மக்கள் அனைவரது கண்களையும் குளமாக்கி நெஞ்சை நெகிழ வைத்தது.

இதற்கும் மேலாகத் தான் பிறந்த நாட்டை விட்டு வேற்று நாட்டிற்கு வந்து அளப்பரிய சேவைகள் செய்த அன்னை திரேசா இந்த நூற்றான்டின் புகழ்மிக்க கௌரவ பிரஜையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

அனைத்து சமயங்களும் வலியுறுத்துவதும் மனித நேயத்தைத்தானே. 'எல்லா உயிரும் இன்புற்றிருக்க அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே' என்றும் 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று வள்ளுவர் கூறியதும் 'உன்னுயிர் போல அயலவனையும் நேசி' என்று இயேசு கூறியதும் 'சகோதரனை நேசிப்பவன் அல்லான் நேசிப்பவனாவான்' என்று முகம்மது நபி கூறியதும் சமூகத்தையும், பிற உயிர்களையும் நேசிக்கும் பண்பை வலியுறுத்துவதற்குத்தான்.

திருமதி. கலா மகேந்திர ராஜா
*இந்து மகளிர் மன்றம்*
*மட்டக்களப்பு*

எத்தனை மதங்கள், எத்தனை ஞானிகள் இருந்தும் இன்றைய நிலை என்ன? தெருவில் ஒருவன் மயங்கி விழுந்திருந்தால் அவனது உடைமைகளை அபகரிப்பதும், பேருந்துகளில் பயணம் செய்யும் போது வலுவற்றவர்கள் நிற்க முடியாமல் கஷ்டப்பட்டாலும் தான் மட்டும் வசதியாக இருக்கையில் அமர்ந்து போக நினைப்பதும், வெயிலில் நீண்ட வரிசையில் மக்கள் நிற்கும் போது தந்திரமாக உள்வழியால் காரியத்தை முடிப்பதும் தினசரி நாம் காணும் மனித நேயமற்ற செயல்களாகும்.

உண்மையை மறைத்து பிறர் நம்பும்படி பொய்பேசும் வல்லமை படைத்தவர்கள் தம்மை அறிவாளிகள் என எண்ணிக் கொள்வது வேதனையான விடயமாகும்.

*'வைத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்'*

எனவே சமய வாழ்வு வாழ ஒழுக்கம் சமூக உணர்வு என்பன இன்றியமையாதனவாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்


காரைநகரில் அம்பலவி முருகர் தலைசிறந்த சிவபக்தர். இவர் சிவன் கோவிலை அமைத்து அங்கு சிவலிங்கத்தை ஸ்தாபிதம் செய்வதற்கு விரும்பினார். அக்காலத்தில் இலங்கையில் சிவலிங்கம் கிடையாது எல்லாம்வல்ல இறைவன் இவ்வடியாரது கனவில் தோன்றி சிதம்பரத்திலுள்ள ஒரு சிற்பியிடம் சிவலிங்கங்கள் உண்டு என்றும் அவற்றுள் தம்மால் அடையாளம் காண்பிக்கப்படும் சிவலிங்கத்தை பெற்று வரும்படியும் கூறி மறைந்தார். இச் சிவபத்தர் இறைவன் திருவருளை வியந்து அவ்வாறே சிதம்பரம் சென்று சிற்பாசிரியரின் இல்லத்தை அடைந்து இறைவன் திருவருளை கூறினார். அவர் தம்மிடமுள்ள சிவலிங்கஙகளை காண்பித்தார்.

அம்பலவி முருகர் அவற்றை பார்த்து எந்த சிவலிங்கத்தை தெரிவு செய்வது என்று சிந்தித்த போது அதில் ஓர் சிவலிங்கத்திலிருந்து காற்று உயர்ந்து எழுவதைக் கண்டு வியந்து அதுவே இறைவனின் அருட்குறிப்பென்பதை உணர்ந்து அதனையே பெற்றுக்கொண்டார்.


இதேபோல் சிதம்பரத்தில் சோமஸ்கந்த மூர்த்தியின் திருவுருவத்தை வார்ப்பித்த போது இருமுறை கருசிதைந்து விட்டது. அம்பலவிமுருகர் பெரிதும் மனம் நொந்து திருவருளை வேண்டித் தம் காதுகளில் அணிந்திருந்த பொற்கடுக்கன்களைக் கழற்றி சிற்பியிடம் கொடுத்து அவற்றையும் சேர்த்து உருக்கி வார்க்கும் படி வேண்டிக்கொண்டார். என்ன அற்புதம் இம்முறை திருவுருவம் நன்றாக அமைந்தது இதைக்கண்டு ஆனந்தம் அடைந்த அம்பலவிமுருகரின் ஆன்மா அவ்விடத்திலேயே சாந்தியடைந்தது.

அம்பலவிமுருகரின் மகன் சண்முகத்தார் தந்தையாரின் ஈமக்கடன்களை சிதம்பரத்தில் செய்து பின்னர் சோமாஸ்கந்த மூர்த்தியை சிவாலயத்தில் கொண்டு வந்து கும்பாபிஷேகம் செய்வித்தார்.

காரைநகரில் உள்ள சிவன் கோயில் ஈழத்துச் சிதம்பரம் என்று சைவமக்களால் அழைக்கப்படுகின்றது. ஈழத்துச் சிதம்பரத்தில் உள்ள நடராசப் பெருமான் திருவுருவம் சிதம்பரத்தில் அமையப் பெற்றது. போல் மிகவும் அற்புதமானது. வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும் இரு மருங்கிலும் தொழுதேத்த ஐம்பத்தியொரு சுடர்களைக் கொண்ட வட்டத்திருவாசியுடன் கூடியது. இக் கோயிலின் தனிச்சிறப்பு யாதெனில்



காரை ஹ. சத்தியசீலன்
*ஆலடி, காரைநகர்.*



சிவன்கோவிலும் ஐயனார் கோவிலும் மிக்க அண்மையில் சமாந்தரமாக கிழக்குத் திசையை நோக்கி அமைந்திருப்பதுதான். இந்த விதமான அமைப்பு இலங்கையில் வேறு எந்தக் கோயிலிலும் இல்லை. இங்கு எழுந்தருளி உள்ள சிவலிங்கப் பெருமானை சுந்தரேஸ்வரர் என்றும் அம்பிகையினை சௌந்தராம்பிகை என்றும் திருநாமமிட்ட அடியார்கள் வணங்கி வருகின்றனர்.


## காண்டம்

❖

❖❖

*முனிவர்களால் எழுதப் பெற்ற காண்டம் என்னும் நாடி வாக்கியத்தில் உங்கள் பலா பலன்களை அறிந்து வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள்.*

❖

❖❖

**ரிஷி S. மணி**
144 2/1 காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
தொலைபேசி இலக்கம் : 586218.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜன்ம நட்சத்திரம்

எதிர்காலம் என்பது எல்லோருக்குமே கேள்விக் குறியானதொன்றாகும். எண்ணிய தெல்லாம் எண்ணிய படியே நடைபெறுவதில்லை. எதிர்காலத்தில் எப்படியான திருப்பங்கள் ஏற்படும், எப்படியானவைகளை எதிர்கொண்டு முன்னேற வேண்டியிருக்கும் என்ற வினாக்கள் ஒவ்வொருவரின் மனத்திலும் சிந்தனை அலையாக மோதுவதுண்டு. இக் கேள்விகளுக்கு பதிலைக் காண்பது எப்படி !

ஒருவரது மனத்திரையில் கடந்த கால நிகழ்வுகளின் தாங்கங்களால் ஏற்படுத்தப்பட்ட நிரந்தரமான அழிக்க முடியாத கதைகள் எவையெ ன்பதை இன்னொரு மனத்தால் அறிய முடிகின்றது. காரணம் நடைபெற்ற நிகழ்வுகள் ஏற்கனவே ஒருவரின் மனத்திரையில் பதிவு செய்யப்பட்டிருப்பதே ! ஆனால் எதிர்காலத்தின் நிகழ்வுகள் ஏற்கனவே மனத்திரையில் பதியப்படாத ஒன்றே ! அப்படியே பதிந்திருப்பின் அவை ஒருவரின் கற்பனையின் விம்பப் பிரதிகளாகவே இருக்கும். எதிர்காலத்தின் நிகழ்வுகளை சரியான முறையில் அறிய உதவுவது ஜோதிட சாஸ்திரம் ஒன்றே !

ஜோதிடத்தின் உதவியுடன் எதிர்காலத்தில் கோள்கள் எந்த நட்சத்திரங்களில் எக்காலங்களில் சஞ்சரிப்பவர்கள் என்பதை கணித சுத்தியுடன் அறியக் கூடியதாக இருப்பதால், இந்த நவக்கிரக கோள்களின் வெவ்வேறு நிலைகளுக்கு சம்பந்தமான வாழ்வின் எதிர்கால நிகழ்வுகளை ஜோதிட வல்லுனர்களால் இலகுவில் அறிந்து கூறக்கூடியதாக உளது.

இருட்டிலே செல்லும் ஒருவருக்கு பாதையை அறிந்திட வெளிச்சமானது எவ்வாறு உதவுகின்றதோ, அவ்வாறே வாழ்க்கைப் பயணத்தில் எதிர்கொள்ள வேண்டிய மேடு, பள்ளங்களை முன் கூட்டியே அறிய உதவுகின்றது ஜோதிட சாஸ்திரம்.

வானத்திலே சூரியனது பாதை, 12 சமபாகங்களாக பிரிக்கப்பட்டு மேடம் முதல் மீனம் வரையாக 12 இராசிகள் அமைகின்றது. இந்த 12 இராசிகளிலும் அடங்கியவைகள் அச்சுவினி முதல் ரேவதி வரையிலான 27 நட்சத்திரங்கள். ஒவ்வொரு நட்சத்திரம் 4 சமபாகமாகப் பிரிக்கப்பட்டு மொத்தமாக 108 பாதங்களுட் 12 இராசிகளுக்குள் அடங்குகின்றது.

**விக்னேஸ்**

கிரகங்கள் எந்த நட்சத்திரங்களில் சஞ்சரிக்கின்றார்கள் என்பதை பஞ்சாங்கங்களைக் கொண்டும், நவீன நு ாநஅநசளை களைக் கொண்டும் அறிந்து கொள்ள முடிகின்றது. வான சாஸ்திரம் அறிந்தவர்கள் வானத்துக் கிரகங்களை நேரடியாக வானத்தை பார்த்து நிலைகளை தெரிந்து கொள்வார்கள். எதிர்காலத்தில் கிரகங்களின் இருக்கும் நிலைகளை அறிந்திட அவ்வாண்டுகளுக்குரிய நு ாநஅநசளைகள் இருத்தல் வேண்டும் கணனியின் மூலம் மிக இலகுவாக பல ஆண்டுகளுக்கு முன்பும் அதே வேளையில் எதிர்கால கிரக நிலைகளை அதற்குரிய ளுழகவறயசந யை பயன்படுத்தி கிரக சஞ்சார நிலைகளை அறிந்திட முடியும்.

ஒருவர் ஜனனமாகும் போது சந்திரன் வானத்தில் எந்த இராசியில் சஞ்சாரம் செய்கின்றாரோ அதுவே அவரது ஜன்ம இராசியாகும். இவ்வாறே சந்திரன் சுபவேளையில் சஞ்சரிக்கும் நட்சத்திரம் ஒருவரது ஜன்ம நட்சத்திரம் ஆகின்றது.

ஜன்ம நட்சத்திரத்தை சந்திரன் ஒவ்வொரு மாதத்திலும் கடந்து செல்லும் போது பல நிகழ்வுகளுக்கு வித்திட்டு செல்வார். இந் நாட்களை ஒருவர் அவதானித்துப் பார்த்தால் வாழ்வின் முக்கிய சம்பவங்கள் ஜன்ம நட்சத்திரம் வருகின்ற திகதிகளில் நடைபெறுவதை அவதானிக்கலாம்.

திரு. ராஜீவ் காந்தியின் திருக்கணித ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| 7 | 8 | 9 | சனி |
| 6 | இராசி | | ராகு |
| கேது | | | சூர்,சுக்,புத, வெள்,குரு |
| 4 | 3 | 2 | செவ் / இலக் |

| | | | |
|---|---|---|---|
| | 2 | சூரி | 4 |
| சனி | நவாம்சம் | | குரு ராகு |
| செவ் கேது | | | 6 |
| புதன் | 9 | 8 | சந் சுக் |

ஜன்ம நட்சத்திரம் பூரம் 2ம் பாதம் ஜனன சுக்ர திசை இருப்பு. வரு 13 மாதம் 00 நாள் 17

ஜாதகர் ஒருவர் பூரம் ஜன்ம நட்சத்திரமாக இருக்க பிறந்திருப்பின் அந்த ஜாதகருக்கு பூர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரத்தை சந்திரன் கடக்கும் போது புத்துணர்வும், இவரைப் பலர் சந்திக்கக் கூடியதாகவும், அவரின் பால் பிறரின் கவனம் ஏற்படுவதையும் குறிப்பாக இவருக்கு அந்நாள் ஒரு சுறுசுறுப்பான கூிரளல னயல ஆக இருப்பதை அவதானிக்கலாம். ஜன்ம நட்சத்திரம் வருகின்ற திகதிகளில் பௌர்ணமித் திதி வருமாயின் அன்று மனோ நிலையில் புத்தெண்புண்டாகும். ஆனால் ஜன்ம நட்சத்திரத்தை சந்திரன் கடக்கும் போது அட்டமி, நவமி, அமாவாசைத் திதிகளில் ஒன்று சம்பந்தம் ஏற்படுமாயின் மனச் சஞ்சலம் அலைச்சல் பலன்களும் சம்பவிக்க கூடியதாக அமையும்.

இவை உண்மையா என்று வியக்கத் தோன்றும் ! கீழேயுள்ள உதாரண ஜாதகத்தை அவதானித்தால் உண்மை புரியும்.

இந்தியாவின் இளைய பிரதமரான மறைந்த தலைவர் திரு.ராஜீவ் காந்தி 20ம் திகதி ஆகஸ்ட் மாதம் 1944ம் ஆண்டு காலை 9 மணி 50 நிமிடமளவில் (மூடிC கூமைந) பிறந்தவர். இவரது ஜன்ம இராசி சிங்கம் ஜன்ம நட்சத்திரம் பூரம் 2ம் பாதம். இலக்கினம் கன்னி.

இலங்கை நாட்டுடன் சம்பந்தப்பட்ட இவரது வாழ்வில் நடந்த முக்கிய சம்பவங்களை அவதானித்து பார்த்தால் இவரது ஜன்ம நட்சத்திரத்திலே எல்லா நிகழ்வுகளும் நடைபெற்றன.

யாழ்ப்பாணத்தில் மக்களுக்காக திரு. ராஜீவ் காந்தி 4ம் திகதி யூன் மாதம் 1987ம் ஆண்டு மாலை 4 மணி 40 நிமிடளவில் விமான மூலம் பரசூட்டில் உணவுப் பொதிகளைப் போடுவித்தார். அன்றைய தினம் அவரது ஜன்ம நட்சத்திரம் பூரத்திலே சந்திரன் இருப்பதை அவதானிக்கலாம்.

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணும் நோக்குடன் முன்னாள் இலங்கையின் ஜனாதிபதி திரு.ஜெ.ஆர்.ஜெயவர்த்தனாவுடன் இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு திரு.ராஜீவ் காந்தி 20ஆம் திகதி யூலாய் மாதம் 1987ஆம் ஆண்டு காலை 10 மணிக்கு இலங்கையில் காலடி வைக்கும் போதும் அவரது ஜன்ம நட்சத்திரத்திலேயே சந்திரன் இருந்தார்.

இந்தியாவின் தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் 21ம் திகதி மே மாதம் 1991ம் ஆண்டு செவ்வாய்க்கிழமை இரவு 10 மணி 08 நிமிடமளவில் குண்டு வெடித்தால் திரு.ராஜீவ் காந்தி அகால மரணமடைகின்றார். அன்றைய தினம் சந்திரன் இவரது ஜன்ம நட்சத்திரமான பூரம் 2ம் பாதத்திலே சஞ்சாரம் செய்கின்றார்.

ஜன்ம நட்சத்திரத்திலே சந்திரன் சஞ்சரிக்கும் திகதிகள் எவ்வளவு முக்கியமானவை என்று இப்போது புரிகின்றது.

உங்கள் ஜன்ம நட்சத்திரமும் அமாவாசைத் திதியும் சேர்ந்து எத்திகதியில் வருகின்றது என்று குறித்து வைத்து அவதானித்து பாருங்கள்.

சுபம்.

## சந்நிதி சோதிடம்



*அன்புக்குரிய வாசகர்களே!*

ஒன்பதாண்டு காலம் ரிஷி கேசத்தில் வாழ்ந்து யோக வாழ்க்கையில் ஈடுபட்டவரும், "விக்னேஸ்" என்ற பெயரில் பிரபல்யமடைந்துள்ள சோதிட ஆய்வாளரும், "வான்மதி" சோதிட சஞ்சிகை ஆசிரியருமான திரு.எஸ்.விக்னேஸ்வரன் அவர்கள் சந்நிதி வாசகர்களின் சோதிடம் தொடர்பான சந்தேகங்களுக்கு அல்லது பிரச்சினைகளுக்கு விளக்கம் அளிக்க முன்வந்துள்ளார்.

சந்நிதி அன்னாருக்கு தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

வாசகர்கள் தமது பிரச்சினையைச் சுருக்கமாக ஒரு தாளில் தெளிவாக எழுதி, பின்வரும் கூப்பனை நிரப்பி, சுயவிலாசமும் முத்திரையும் இடப்பட்ட கடித உறையுடன் எமக்கு அனுப்பு வைக்கவும்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*
ஆசிரியர்
"சந்நிதி"
39, 36 வது ஒழுங்கை
கொழும்பு-06

**சந்நிதி சோதிடம்**

ஆசிரியர்
"சந்நிதி"

முழுப் பெயர்:........................................

பிறந்த திகதி:.................................. நேரம்:........................

விலாசம்:........................................

........................................

இத்துடன் இணைத்துள்ள எனது பிரச்சினைக்கு சோதிட ஆய்வாளர் "விக்னேஸ்" அவர்களின் பதிலை எதிர்பார்க்கிறேன்.

திகதி : .............................. ..............................
கையொப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்தாந்த மரபு




கலாநிதி சபா ஜெயராசா
*முதுநிலை விரிவுரையாளர்,*
*யாழ் பல்கலைக்கழகம்*


சித்தாந்தக்கல்வி மூன்று நிறுவன அமைப்பு நிலைகளினூடாக வளர்ச்சி பெற்றது. ஒன்று நல்லாசிரியரிடத்துக் குருகுல வழியாகக் கல்வி பெறல். மற்றையது சித்தாந்தப் பல்கலைக்கழகங்களாக விளங்கிய மடாலயங்கள் வழியாகக் கல்வி பெறல். மூன்றாவதாக ஆலயங்கள் வாயிலாகக் கல்வியறிவு பெறல்.

தத்துவ ஆய்வு, ஒழுக்கவியல், சித்தாந்த தருக்கம், வழிபாட்டு முறைமை என்ற புலன்களை உள்ளடக்கியதாகச் சித்தாந்தக் கல்வி வளர்ந்தது. சிவம் என்பதை முழுமுதற் பொருளாகச் விளக்குதல் சைவசித்தாந்தக் கல்வியிற் சிறப்பிடம் பெற்றது.

'சித்து' என்பது ஞானம் என்னும் ஆற்றலை விளக்குகின்றது. அந்தம் என்பது 'நிறைவு' என்றும் கொள்ளத்தக்கது. நிறைவான ஞானத்தை நோக்கிய வழியே 'சித்தாந்தம்' என்று பொருள் கொள்ளுதல் பொருத்தமானது.

அதாவது, முடிவான உண்மைகளை விளக்கும் நெறியே சித்தாந்தம் என்பது பாரம்பரியமான விளக்கம். அந்தம் என்பது முடிவு என்ற அடிப்படையில் இந்த வரையறை தரப்படுகின்றது.

சித்தாந்தக் கல்வியானது தனக்கென உரிய தருக்க முறைமை கொண்டு விளக்கப்படுகின்றது. ஆனால் ஆரம்ப நிலையிலே மாணவருக்குத் தருக்கம் கற்பிக்கப்படவில்லை. அடிப்படை அறிவைக் குருகுலத்தில் அல்லது திண்ணைப் பள்ளிக்கூடங்களிற் கற்றபின்னரே தருக்கம் அறிமுகம் செய்யப்பட்டது.

தருக்கக் கல்வி கருத்து அளவைக் கல்வி என்றும் குறிப்பிடப்பட்டது. காட்சி, கருதல், உரை என்ற மூன்று கருத்து அளவைகள் பயன்படுத்தப்பட்டன. ஐந்து புலன்களும் அறியப்பட்டு உள்ளத்திலே தொகுக்கப்பட்ட படம் 'காட்சி' எனப்பட்டது. கருதுதல் என்பது ஊகங்கள் வழியாகப் பெறப்படும் முடிவு. உதாரணமாக, ஒருவன் நல்ல நெல் மணிகளைக் கொண்டு வந்தால் அவனது வயல் வளமுள்ளதென்றும், செய்கை பண்பட்டதென்றும் கொள்ளுதல் 'கருதுதல்' என்பதாகும். ஆதாரங்கள் கொண்டு, கருத்துக்களைச் சீர்தூக்கிப் பார்த்து உண்மைகளைக் கண்டறிதல் 'உரை' எனப்பட்டது. உரை என்பது ஆய்வு.

சைவசித்தாந்தக் கல்வி மாணவரின் உடல், உள விருத்திகளோடு இணைந்திருந்தது. மாணவரது விருத்திக்கேற்றவாறு படி நிலைகளாகப் பாடத்திட்டம் அமைக்கப்பட்டது. தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றை நோக்கிச் செல்லும் வண்ணம் கல்விச் செயற்பாடுகள் இணைந்திருந்தன. முப்பொருள் உண்மைகளை விளங்குதல் ஆரம்பக்கல்வியை நிறைவேற்றும் பொழுது ஒரு மாணவர் அடையப்படவேண்டிய தலையாய இலக்காக அமைந்தது.

பதி, பசு பாசம் என்பவை முப்பொருள்களாகும். இறைவனது பண்புகள் 'பதி' என்ற எண்ணக்கருவால் விளக்கப் பெற்றன. அருவம், உருவம், அருவுருவம் என்ற திருமேனிகளாற் பதியின் பண்புகள் குறித்துரைக்கப் பெற்றன ஆரம்பக்கல்வியில் இறைவனது உருவத்திருமேனிகளை மாணவர் அறிந்து கொள்வர்.

அறிவு முதிர்ச்சி பெற, அருஉருவம், அருவம் பற்றிய எண்ணக்கருக்கள் கற்பிக்கப்படும்.

சித்தாந்தக் கருத்துக்களை வலியுறுத்தும் திருமுறை ஓதுதலும் ஆலயங்களிலே இடம்பெற்றது. பிற்காலத்தில் புராணபடனம் ஓதும் நிகழ்ச்சிகளும் ஆலயத்திலே அமைக்கப்பட்டன. இவை யாவும் சைவப் பாரம்பரியத்திற் காணப்பட்ட முறைசாரரக்கல்வி நிகழ்ச்சிகளாக அமைந்தன. பண்பாட்டு வளர்ச்சி கொண்ட சமுதாயங்கள் தமக்கென உரிய முறைசாரரக்கல்வி ஒழுங்கமைப்பை விருத்தி செய்தமைக்கு இது ஒரு பொருத்தமான எடுத்துக் காட்டாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனது பேராற்றல் எண் குணங்களினாற் சைவசித்தாந்தக் கல்வியில் விளக்கப்பட்டது. இயல்பாகவே பாசங்களிலிருந்தும் நீங்குதல், தம்வயத்தராதல், முடிவிலா ஆற்றலுடைமை தூய உடம்பினராதல், பேரருளுடைமை, வரம்பிலா இன்பமுடைமை, இயற்கை உணர்வினராதல், முற்றுமுணர்தல் முதலியவை எண்குணங்களாகும்.

இத்தகைய பண்புகளைக் கொண்ட இறைவன் ஐந்தொழில்களைப் புரிவதாக சைவசித்தாந்தம் விளக்கும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவை ஐந்தொழில்களுமாகும்.

பதிக்கு அடுத்தபடியாக விளக்கப்படும் பொருள்களாக பசுவும், பாசமும் அமைகின்றன. பசு என்பது ஆன்மா எனப்படும். பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகைப்படும். ஆன்மா ஆணவத்தோடு பிணிக்கப் பட்டிருக்கும் நிலை அறிவற்ற நிலையாகும். அது 'அசத்து' என்பபடும். ஆன்மா ஆணவத்திலிருந்து முற்றாக விடுபடாத, ஆனால் விடுபட எத்தனிக்கின்ற நிலை அறிவுள்ள நிலையும் அறிவற்ற நிலையுமாகும். இந் நிலை 'சதசத்து' எனப்படும். ஆன்மா இறை அருளுலே மூழ்குதல் 'சுத்தநிலை' என்று கூறப்படும்.

ஆன்மாவைப் பற்றும் ஆணவம் 'மூலமலம்' ஆகும். ஊழ்வினை பற்றிய கருத்துக்கள் கன்மம் என்ற பிரிவிலே கற்பிக்கப்பட்டன. மாயை என்பது வெளித்தோன்றும் பண்புடையதாக சைவசித்தாந்தக் கவ்வியிற் கூறப்படுகின்றது. இவை தொடர்பான விரிவான ஆய்வுகள் சைசித்தாந்தப் பல்கலைக் கழகங்களாலே மடாலயங்களில் இடம்பெற்றன.

மடாலயங்களில் வேதங்கள், ஆகமங்கள், சைவசித்தாந்த தோத்திரங்களாகிய திருமுறைகள், சந்தான குரவர்களது நூல்கள் முதலியன ஆய்ந்தறியப் பெற்றன. விரிவுரை, வினாவிடை கண்டறி முறை முதலிய முறையியல்கள் உயர் கல்விப் பீடங்களாகிய மடாலயங்களிலே மேற்கொள்ளப்பட்டன. மெய்ப் பொருளைத்தேடும் ஆய்வுகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

சைவக்கல்வியிற் கோயில்கள் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றன. ஆகம வடிவான கல்வி கோயில்களிலே நடைபெறுவதற்குரிய ஒழுங்கமைப்புக் காணப்படுகின்றது. கோயில்கள் விக்கிரகங்கள் முதலியவற்றின் வடிவமைப்பு, வழிபாட்டு முறைமை, பூசைக்கிரமம், அபிடேகம் முதலியவை ஆகமங்களிலே விளக்கப்பெற்றுள்ளன.

சமூக வளர்ச்சியின் ஒரு பிரதான பண்புக் கூறாக அமைவது சமூக நிறுவனங்களின் தோற்றமாகும். நிலமாகிய சமூக அமைப்பில் மிகப் பலம்வாய்ந்த சமூக நிறுவனமாகக் கோயில்கள் வளர்ந்தமைக்குக் காரணங்கள் பலவுள. குறித்துரைக்கப் பெற்ற தொழில்களை யார் யார் மேற்கொள்ளல் வேண்டுமென்ற வரையறையும், கட்டுப்பாடும் நிலமானிய சமூக அமைப்பிலே காணப்பட்டது. இந்தக் கட்டுப்பாடுகளை நிலை நிறுத்தி ஒழுங்கமைப்பைப் பேணக்கூடிய ஆற்றலின் வடிவமாக ஆலயங்கள் அமைக்கப்பட்டன. சிற்பங்களின் வடிவமைப்பு, நடனங்களின் வடிவமைப்பு, இசைக்கோலங்கள் என்றவாறு ஆலயக் களத்திலே காணப்பெற்ற அழகு வடிவங்களுடனும் மேற்கூறிய பண்பு இணைந்திருந்தது வகுக்கப்பட்ட எல்லைகளோடு இணைந்து செல்கின்ற கல்வியும் கலையாக்கங்களும் இடம் பெற்றன.

*சைவசித்தாந்தக் கல்வியானது அறிவு, அனுபவம் என்ற பிரமானங்களைக் கொண்டு விளங்குவதால், வாழ்க்கையை எவ் வகையிலும் விட்டு பிரியாத தத்துவம், நடைமுறை என்பனவற்றோடு இணைந்து நிற்கின்றது நடைமுறையிலிருந்து தத்துவத்துக்கு வருதலும், தத்துவத்திலிருந்து நடைமுறைக்குச் செல்லுதலுமான இந்த நிகழ்ச்சியின் பலத்தால், அந்நியர் ஆட்சியின் பொழுது கோயில்கள் இடிக்கப்பட்டவேளை சைவசமயம் சாயாத குன்றாக நின்றது. இந்த வரலாற்று நிகழ்ச்சியை விளங்கிக் கொள்வற்கு சித்தாந்தக் கல்வி மரபு பற்றிய ஆய்வு துணை செய்கின்றது.*

பெரும் கலைச் செல்வங்களை உண்டாக்குவதற்கு சமூக முரணுரைகள் வலுவளித்தன. நடராஜர் சிலை, நாகசுரக்கலை, பரதக்கலை, கருநாடக இசை முதலியவை முரணுரைகளின் விசைகளால் கோயில் நிறுவன அமைப்புக்களிலே வளர்ச்சியடைந்த உலகம் நயக்கும் கலை வடிவங்களாகின சித்தாந்தக் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு உலகுக்கு வழங்கி கலைச்செல்வங்கள் என்று இவற்றைக் குறிப்பிடலாம். சமூக முரணுரைகளின் மறுபக்க வளர்ச்சிகளாக நாட்டார் கலைகளும், நாட்டார் தெய்வ வழிபாடுகளும் அமைந்தன.

சித்தாந்தக் கருத்துக்களை வலியுறுத்தும் திருமுறை ஓதுதலும் ஆலயங்களிலே இடம்பெற்றது. பிற்காலத்தில் புராணபடனம் ஓதும் நிகழ்ச்சிகளும் ஆலயத்திலே அமைக்கப்பட்டன. இவை யாவும் சைவப்பாரம்பரியத்தில் காணப்பட்ட முறைசாராக் கல்வி நிகழ்ச்சிகளாக அமைந்தன.

பண்பாட்டு வளர்ச்சி கொண்ட சமுதாயங்கள் தமக்கென உரிய முறைசாராக்கல்வி ஒழுங்கமைப்பை விருத்தி செய்தமைக்கு இது ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டாகும்.

ஆலயம் என்ற நிறுவனத்தோடு அனைவரையும் இணைப்பதற்கான கருத்தேற்றக் கற்பித்தல் முறையும் சித்தாந்தக்கல்வி மரபிற் காணப்பட்டது. 'கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களாற் பயன் என்' என்பது அப்பர் வேண்டுகோள்.

சைவசித்தாந்தக் கல்வியானது அறிவு, அனுபவம் என்ற பரிமாணங்களைக் கொண்டு விளங்குவதால், வாழ்க்கையை எவ்வகையிலும் விட்டுப்பிரியாத தத்துவம், நடைமுறை என்பவற்றோடு இணைந்து நிற்கின்றது நடைமுறையிலிருந்து தத்துவத்துக்கு வருதலும், தத்துவத்திலிருந்து நடைமுறைக்குச் செல்லுதலுமான இந்த நிகழ்ச்சியின் பலத்தால், அந்நியர் ஆட்சியின் பொழுது கோயில்கள் இடிக்கப்பட்டவேளை, சைவ சமயம் சாயாத குன்றாக நின்றது. இந்த வரலாற்று நிகழ்ச்சியை விளங்கிக் கொள்வதற்கு சித்தாந்தக் கல்வி மரபு பற்றிய ஆய்வு துணை செய்கின்றது.

எத்தகைய சமூகக் களத்திற் சித்தாந்தக் கல்வி தோன்றி வளர்ந்தது என்பதை ஆராய்தல், சமயக்கல்வியை . விளங்கிக் கொள்வதற்கு வழியமைக்கும் அனுபவங்களைக் கருத்துருவமாக்கும் செயற்பாடு சித்தாந்தக் கல்வியில் வெகு இயைபாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.


**UTHAYA GUEST HOUSE**
**WITH**
**THAS MULTISHOP**
**BEACH VIEW**

No: 58, Hamers Avenue, Wellawatta,
Colombo-6.
Tele : 595242 - 595243.
Fax & I.D.D : 503552.

PROVIDING CONVENIENT ROOMS AND
OTHER ENTERTAINMENT FACILITIES.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவில் கண்ட தெய்வீகக் காட்சி

1965 ஆம் ஆண்டில் ஒரு நாள். அன்று வைகாசி மாசத்துப் பூர்வ பக்க சதுர்த்தி. வேழமுகத்து விநாயகப் பெருமானுக்குரிய விசேட தினம். நடு நிசி இருக்கும் எங்கும் ஒரே மயான அமைதி. திருநெல்வேலி, கலாசாலை வீதியில் உள்ள எங்கள் வீட்டு வாசல் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டு. திடுக்கிட்டு நித்திரை கலைந்து எழுந்திருந்தேன். கதவைத் திறந்து பார்ப்போம் என்று வாசற் பக்கம் போக, எனது மனைவியார் திருமதி. அ. சிவயோகம் (ஆசிரியை) "இது அகால நேரம். அர்த்த சாமம் இருக்கும். கதவைத் தயவு செய்து திறக்க வேண்டாம் என்று ஆலோசனை கூறினார். என்ன செய்வோம் என்று சில நிமிடங்கள் சிந்தித்தேன் அடுத்தடுத்து கதவைப் பலமாகத் தட்டும் சத்தம் கேட்கவே கையில் விளக்கை எடுத்துக் கொண்டு திறந்து பார்ப்போம் என நினைத்த வண்ணம் மெதுவாகக் கதவைத் திறந்தேன். வாசலில் யானை ஒன்று தும்பிக் கையில் மாலையை ஏந்திய வண்ணம் நிற்பதைக் கண்டு முன்னே செல்வதற்கு சற்று தயங்கினேன். என்று சில நிமிடங்கள் கழிந்திருக்கும். யானை கொண்டு வந்த மாலையை வாசலில் போட்டு விட்டுத்திரும்பித் தெற்குப் பக்கமாகச் சென்றது.

யானை எங்கே போகின்றது என்று பார்ப்பதற்காக விளக்கையும் எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டேன் 'நடுச்சாமம் இந்த நேரத்தில் வெளியே போவது அவ்வளவு நல்லதல்ல' என்று எனது மனைவியாரின் குரல் உள்ளேயிருந்து கேட்டது. மனப்பயம் ஒரு புறம் மாலையைக் கொண்டு வந்த வாசற்படியில் போட்டு விட்டு யானை எங்கே போகின்றது என்பதை அறியும் ஆவல் மறுபுறம். இருந்தும். என்னையும் அறியாமல் ஏதோ ஒரு சக்தியின் உந்துதலால் வருவது வரட்டும் என்று துணிந்து யானை செல்லும் திக்கு நோக்கி அதனைப் பின் தொடர்ந்தேன். கலாசாலை வீதி வழியாக தெற்கு நோக்கிச் சென்ற யானை சிறிது தூரம் சென்றதும் கிழக்குப்பக்கமாகத் திரும்பி ஒழுங்கை வழியே சென்று பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தை அடைந்தது.

அந்தக் காலத்தில் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் ஒரு சிறிய மடாலயமாக விளங்கியது. திருநெல்வேலி, பெரிய நயினார் குடும்பத்தைச் சேர்ந்த குமார சுவாமி என்னும் சைவப் பெரியரே விநாயகப் பெருமானுக்கு மிகுந்த பயபக்தியுடன் பூசை செய்து வந்தார். நண்பகலிலும் இரவிலுமாக இருநேரப் பூசைகளே நடைபெற்று வந்தன. இரவு நேரப் பூசைக்கு தினமும் நானும் மனைவியுமாகச் சென்று வீரகத்தி விநாயகப் பெருமானை வழிபட்டு வருவோம்.

ஆலயத்தை சென்றடைந்த யானை நேராக மூலஸ்தானத்துகு சென்று தீடிரென மறைந்து விட்டது சற்று நேரத்தில் ஓர் ஒளிப்பிழம்பு சோதி வடிவாகத் தோன்றியது அந்த சோதியின் ஊடே, விநாயகப் பெருமானின் திவ்விய சொரூபம் நின்ற திருக்கோலத்தில் கண்குளிரக் காணக்கூடியதாக இருந்தது. அந்தத் தெய்வீகக் காட்சியை இன்று மனக்கண் முன் இருத்தி பார்த்தாலும் மெய்சிலிர்க்கும். அவ்வளவு தெவிட்டாத இன்பக் காட்சி. என்னையும் அறியாமலே பக்திப்பரவசத்தினால் "வெவ்வினையை வேரறுக்க வந்த வீரகத்தி விநாயகப் பெருமானே! நீயே தஞ்சம் என்று உன்னையே சரணடைந்தோம்" என்று அப் பெருமானின் பாதார விந்தங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினேன். எழுந்ததும் அந்தத் தெய்வீகக் காட்சி மறைந்து விட்டது. எனது கனவும் கலைந்தது.



சிவநெறிச் செம்மல்
வை. அநவரத விநாயகமூர்த்தி

நித்திரை விட்டெழுந்ததும், முதல் நாள் இரவு கனவில் கண்ட தெய்வீகக் காட்சியை எனது மனைவியாருக்கு விபரித்துக் கூறினேன். திருநெல்வேலி சிவன் கோயில் குருக்கள் சிவ ஸ்ரீ அ. ஆனந்த நடராஜக் குருக்கள் அவர்களையும் அணுகி, கனவில் கண்ட தெய்வீகக் காட்சியை எடுத்துக் கூறி விளக்கமும் கேட்டேன். இந்தச் சந்தர்ப்பத்தில் சிவ ஸ்ரீ அ. ஆனந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சலமிலன்'

சுமார் நாற்பத்திரண்டாண்டுகளுக்கு முன்னொரு நாள்... அமைதி நிறைந்த காலை நேரம். விழிசிட்டி, தமிழ்க் கலவன் பாடசாலையிற் சிரேட்ட வகுப்பிற் சமய பாடம் நிகழ்கிறது. பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை உபாத்தியாயர் அவர்கள் திருவருட்பயன் குறள்கள் மூன்றுக்கு விளக்கம் தந்துகொண்டிருக்கிறார்கள்.

*"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்*
*சலமிலன் பேர்சங் கரன்*

**என்பது ஒரு குறள்**

"இறைவனுக்குச் சங்கரன் என்றொரு பெயருண்டு; சுகத்தைச் செய்பவன் என்பது அப்பெயரின் பொருள். இறைவன் வணங்குபவர்களுக்கு அருள் புரிவான். தன்னை வணங்காதவர்களுக்கு அருள் செய்யமாட்டான். தன்னை வணங்கியோர்மீது விருப்போ, தன்னை வணங்காதவர் மீது வெறுப்போ கொள்ளும் இயல்பினன் அல்லன் இறைவன். அவன் விருப்பு வெறுப்பற்றவன்."

பொழிப்புரையின்பின் பதவுரையும் விளக்கங்களும் தந்தார். பின்னொரு கேள்வி கேட்டார்:

வணங்குபவர்களுக்கு அருள் செய்கின்றான். வணங்காதவர்களுக்கு அருள் செய்யவில்லை. இறைவனை விருப்பு வெறுப்பற்றவன் என்று கூற முடியுமா? _ இதுதான் கேள்வி, மாணவர்களுக்கு விடை சொல்லத் தெரியவில்லை. அவரே விளக்கினார்:

"மரம் தனக்குக் கீழே வருபவர்களுக்குத்தான் நிழலைக் கொடுக்கும். தூரத்தே நிற்பவர்களுக்கு நிழலைத் தராது. ஆனால், தனக்குக் கீழே வந்தவர்மீது விருப்போ தூர நின்றவர் மீது வெறுப்போ மரங் கொள்வதில்லை. தாகமுள்ளவர் நீர்நிலைக்கு வந்து வேண்டிய மட்டும் நீரை அள்ளிப் பருகித் தாகத்தைத் தீர்க்கலாம். நீர்நிலைக்கு வராவிடின் தாகத்தைத் தீர்க்க முடியாது. இதனால் நீர்நிலைக்கு, வந்தவன் மீது விருப்போ வராதவன்மீது வெறுப்போ ஏற்படுவதில்லை.

**விழிசிட்டி வை. சி. சிவஞானம்**

நடராஜக் குருக்கள் அவர்களைப் பற்றியும் அவர்களது தெய்வீகத் தன்மையைப் பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் எழுத வேண்டி இருக்கிறது.

சிவ ஸ்ரீ அ. ஆனந்த நடராஜக் குருக்கள், திருநெல்வேலியிலும் மற்றும் அயல் கிராமங்களிலும் வாழும் சைவப் பெரு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். நரைத்த சிறு தாடியுடனும் திருநீறு பூசிய திருமேனியுடனும். சிவன் கோயிலில் நடராஜப் பெருமான் சந்நிதியில் தன்னை நாடி வரும் நலிவுற்ற அன்பர்களின் உடற் பிணி, உள்ளப் பிணி நீக்குவதற்கு ஆயத்தமாக இருப்பார். 'பார்வை பார்த்தல்' 'நூல் கட்டுதல்', யந்திரத் தகடு பூசையில் வைத்துக் கொடுத்தல்' ஆகிய கைங்கரியங்களினால் அவர்களுக்கு ஆறுதல் அளிப்பர்.

"அந்தணன் என்போன் அறவோன் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுதலான்" என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கணமாக அமைந்தவர்.

அவரது ஆலோசனைப் படி விநாயகப் பெருமானின் எழுந்தருளி மூர்த்தி நின்ற திருக்கோலத்தில் உருவாக்கிக் கொடுப்பதற்கு முடிவு செய்தேன். யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த "இராமகிருஷ்ண ஆச்சாரி அன்சன்" சிற்பத் தொழிற்சாலை இயக்குநர் திரு.இ.கோவிந்தசாமி அவர்களைச் சந்தித்து கனவில் கண்ட தெய்வீகக் காட்சியை விபரித்ததோடு விநாயகப் பெருமானின் திருவுருவம் (நின்ற கோலத்தில்) உருவாக்கித்தர வேண்டும் என்று கூறியதோடு ஆவணி மாதத்தில் வரும் விநாயக சதுர்த்தியன்று பிரதிஷ்டை செய்ய வேண்டியிருப்பதனால் அதற்கு முன்பு தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன். ஓர் சுபதினத்தில் நானும் மனைவியுமாகச் சிற்பாசாரியாரின் இல்லத்துக்குக் காரில் சென்று அங்கு உருவாக்கி வைத்திருந்த விநாயகப் பெருமானின் திருவுவத்தைப் பக்தியோடு எடுத்து கொண்டு எம்பெருமானை சிந்தனையில் இருத்தி தோத்திரங்கள் பாடிய வண்ணம் வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்கு கொண்டு வந்து சேர்த்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியலும் அறவியலும்

இன்றைய உலகம் அறிவியல் வளர்ச்சியில் துரித முன்னேற்றம் கண்டு கொண்டிருக்கின்றது. எமது இளைய சந்ததியினர் இன்றைய அறிவியல் உலகின் சவால் கட்குமுகம் கொடுத்து வாழ வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். எனவே அவர்களை விஞ்ஞானத்தினூடாக மெய்ஞான உணர்விற்கு வழி நடத்துவதும், எதிர்காலத்தில் நம்பிக்கையுடன் வாழ்வையணுகும் தகுதிபடைத்தவர்களாக மாற்றுவதும் இன்றைய பெற்றோர், ஆசிரியர், சான்றோர்களதும் தலையாய கடமையாகும்.

இன்றைய காலகட்டத்திலே பல்வேறு விதமான போராட்டங்களிலும் மனிதன் சிக்கித தவிக்கின்றான். வறுமையுடன் போராட்டம், பட்டினியுடன் போராட்டம், நோயுடன் போராட்டம், வேலையில்லாத் திண்டாட்டம் எனத் தினம்தோறும் அவதிப்பட்டு துன்பத்தினால் துவண்டு சோர்வடையும் மனுக்குலத்திற்கு முதலாவது தேவை தெய்வ நம்பிக்கையாகும்.

தெய்வத்தை நம்புபவன் தன்னை நம்புவான். 'தன்னிடம் நம்பிக்கையற்றவனே நாஸ்திகனாவான்' என்றார் சுவாமி. விவேகானந்தர் 'சமயம் இல்லாத விஞ்ஞானம் முடவனுக்குச் சமமானது. விஞ்ஞானம் இல்லாத சமயம் குருடனுக்குச் சமமானது என்றார். 20ஆம் நூற்றாண்டின் விஞ்ஞான மேதை ஆபர்ட் ஐன்ஸ்ரீன்.

எனவே மனிதன் அறிவியல் பூர்வமாக வாழ்வைச் செப்பனிடும் அதேவேளை அறஒழுக்கவியல் முறைமைகளையும் உள்ளவாறு விளங்கிக்கொள்வது அவசியமாகும். இயற்கையிடமிருந்து பௌதிகவியல், இரசாயனவியல், கணக்கியல், புவியியல் போன்றவற்றை கற்றுக் கொள்வதில் ஆர்வமும் அக்கறையும் காட்டும் மனுக்குலமானது, அதே இயற்கையிடமிருந்து அறத்தை–கொடையினை–அன்பினை–ஒழுக்கப்பாங்கினை கற்றுக் கொள்வதில் அக்கறை காட்டுவது மிக அரிதாக வேயிருக்கின்றது. அறிவியலைக் கற்றுத் தரும் முதலாவது ஆசிரியன் இயற்கை விஞ்ஞானம் தான். அதே இயற்கையெனும் ஐம்பூதங்கள் தான் அறஒழுக்க விஞ்ஞானத்தையும் கற்றுத் தருகின்றன.

நிலம் நமக்கு உணவுப் பொருட்களைத் தருகிறது; நதிகள் நமக்கு நீரைத் தந்துதவுகின்றன, சூரியனிடமிருந்து ஒளியைப் பெறுகிறோம், மரங்களிடமிருந்து கனிகளை, பசுவிடமிருந்து பாலை, யானையிடமிருந்து தோலை, தந்தத்தை என சகலவற்றையும் தந்து மனிதனைக் காப்பாற்றுவது இயற்கை அன்னைதான். இவற்றில் ஒன்றையும் மனிதன் உருவாக்கியது மில்லை கண்டு பிடித்ததுமில்லை.

இத்தனையும் படைத்துக் காத்து நிலைபெறச் செய்து எம்மை இரட்சித்து வரும் இயற்கையன்னையை போற்றி வழிபடுவது மத விஞ்ஞானமாகும். இவ்வாறாக சகலவற்றையும் மனிதனுக்கு இயற்கை வழங்குகின்றதே தவிர – மரம் தனது பழத்தைத் தானே சுவைப்பதில்லை, பசு தனது பாலைத் தானே பருகுவதுமில்லை, நதிகள் தமது நீரைத் தனக்கென்று சேமிப்பதுமில்லை.

மனிதனோ இயற்கையிடமிருந்து சகலவற்றையும் பெற்றுக் கொண்ட பின்னர் – அவற்றினைச் சுயநலத்துடன் தனதுடைமையாகவும் சொந்தம் கொண்டாடுகின்றான். உலகிலே எல்லாம் எல்லாருக்கும் பொது உடைமை என்னும் சமத்துவதருமத்தை மனிதனுக்குக் கற்றுக் கொடுத்ததே சமய விஞ்ஞானம் தான்.

இத்தகைய இயற்கையின் தன்னலமற்ற கொடையினை அறஒழுங்கினை நாம் விளங்கிக் கொள்வோமானால், இயற்கை தனக்கென்று எதனையும் வைத்துக்

> மரம், நதி, மண், விலங்குகள் என ஒவ்வொன்றும் வழிபாட்டுக்குரியவனவாகப் பேணப்படும் போது அன்பு பகிரப்படுகின்றது. இயற்கை பாதுகாக்கப்படுகின்றதுழ சூழல் சுகாதாரமடைகிறது. நல்ல காற்று, நல்ல தண்ணீர், நல்ல விளை நிலம் ஒவ்வொன்றும் வழிபாட்டுக் கிரியைகளினால் சுத்தி செய்யப்படும் போது அவை இயல்பாகவே நன்னிலையடைகின்றன. அவற்றினைப் பயன்படுத்தும் மனிதனும் நன்மையடைகின்றான் நலம் பெறுகின்றான்.




திருமதி. கலைவாணி இராமநாதன்
*விரிவுரையாளர்,*
*இந்துநாகரிகத்துறை,*
*யாழ்பல்கலைக் கழகம்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாது எவ்வாறு பிறருக்குப் பயன்படுகின்றதோ, அவ்வாறே தனது வாழ்வும் பிறருக்குப் பயன்படுமாறு அமைய வாழ வேண்டியது அவசியம் என்பதனையும் விரைவில் மனிதன் விளங்கிக் கொண்டவனாவான்.

இவ்வாறாக இயற்கை நம்மீது செலுத்தும் அன்பிற்கு அறக்கொடைக்குப் பதிலாக நாமென்ன செய்கிறோம்? மிகச் சுலபமானவழி நாமும் அவற்றிடம் அன்பு செலுத்தப் பழக வேண்டும். அதுவே இயற்கை வழிபாடாக இந்துதர்மத்தில் ஆதியிலிருந்து பரிணமித்து வந்துள்ளது. மரம், நதி, மண், விலங்குகள் என ஒவ்வொன்றும் வழிபாட்டுக் குரியனவாகப் பேணப்படும் போது அன்பு பகிரப்படுகின்றது; இயற்கை பாதுகாக்கப்படுகின்றது; சூழல் சுகாதாரமடைகிறது. நல்ல காற்று, நல்ல தண்ணீர், நல்ல விளை நிலம் ஒவ்வொன்றும் வழிபாட்டுக் கிரியைகளினால் சுத்தி செய்யப்படும் போது அவை இயல்பாகவே நன்னிலையடைகின்றன. அவற்றினைப் பயன்படுத்தும் மனிதனும் நன்மையடைகின்றான் நலம் பெறுகின்றான். இயற்கைச் சூழல் மாசடைதல் இயல்பாகவே தவிர்க்கப்படுகின்றது.

இன்றைய உலகில் 'சூழல் மாசடைதல்' பெரும் பிரச்சினையாகவே மாறி இயற்கையே மனித வாழ்விற்கும் சவாலாக அமையும் நிலை தோன்றியுள்ளது. இக் காரணம் பற்றியே இந்து சமயத்தில் தோன்றிய புராதன சான்றோர், ரிஷிகள், ஞானிகள் என்போர் இயற்கைச் சூழலின் சுகாதாரச் சூழல் பேணலின் விளைவாக இந்து ஆகம இலக்கியங்களில் அவற்றினை வழிபாட்டுக் கிரியைகளாக உருவாக்கித் தந்தனர். இயற்கை ஒழுங்கு பேணல் என்னும் தர்மம் வேத நூல்களில் 'ரிதம்' என்னும் கோட்பாடாகக் கற்பிக்கப்பட்டுள்ளது. இயற்கை – பருவகாலங்கள் ஒழுங்காக இயங்க வேண்டுமானால் மனிதன் ஒழுங்கு தவறக்கூடாது என்பதனை வேதநூல்கள் வலியுறுத்தின. மனிதனுக்குரிய ஒழுக்கமானது, தனிமனித ஒழுக்கம், சமூக ஒழுக்கம், அறிவிலே ஒழுக்கம், தொழிலே ஒழுக்கம் என பெரிய அளவிலே சிந்தனை செய்யப்பட்டது. இறைவிஞ்ஞானமும் இவற்றின் ஒழுங்கு நியதி பேணும் அவசியத்தை வற்புறுத்தி வருகின்றது.

மனிதனை மனிதனாக வாழ வைப்பதும் – ஆத்மீகத்தைப் புனிதப்படுத்தி பரமாத்மனில் ஐக்கியப்படுத்துவதும் அதற்கான பயிற்சிக்கான யோகம், தியானம், தியாகமும் கூட சமய விஞ்ஞானம் தான். இயற்கை நிகழ்வுகளை ஏன், எதற்கு, எப்படி என ஆராய்வு செய்ய மைக்ரால் கோப்பும், ரெலஸ் கோப்பும் விஞ்ஞானத்தில் பயன்படுவதுபோல அக உலக ஆராய்வின் உண்மைகளை விளக்குவதற்கு அன்பும், அறமும், ஆன்ம நேயமும் கருவிகளாக சமயவிஞ்ஞானம் பயன்படுத்துகின்றது. நமக்குத் தேவை உண்மை. கடவுள் உண்மையா இல்லையா என்ற விவாதத்தை விட்டு உண்மை எதுவோ அதுவே கடவுள்" என ஏற்கலாம் "உண்மைதான் கடவுள்" என்பதே காந்தியடிகளின் விளக்கமாகும்.

நமது உள்ளத்தில் சூழ்ந்திருக்கும் அவா, வெகுளி, இன்னாச்சொல், மதம், காமம், குரோதம் என்னும் இருட்டினை நீக்கி விட்டால், அன்பு, சத்தியம், சாந்தி, பிரேமை, அகிம்சை, அறிவு என்கின்ற ஒளி தானாகப் பிரகாசிக்கும் என்றார் சாயிபகவான்.

மனிதனை மனிதனாக்காத மதம், மனிதனை மனிதனாக்காத மனிதனாகத் தத்துவம், மனிதனை மனிதனாக்காத கல்வி மனிதனுக்குத் தேவையற்றவை என்பது சுவாமி. விவேகானந்தரின் அறிவுரை எனவே 'அன்பு' என்னும் ஒளி விளக்கினை அகத்திலே ஏற்றி வைத்து அந்த ஞானஒளியிலே வாழ்க்கைப் பாதையைச் லெுத்தக் கற்றுக் கொண்டால் – அதுவே அமைதியான ஆன்மீகப் பயணமாக அமையும். இவை உண்மைச் சமயியின் இலட்சிய வாழ்வாக மலரும். 'அன்பே சிவம்' என்னும் திருமந்திரத்தின் உபாயமும் இதுவேயாகும்.



சுவாமி கெங்காதரர்

## சுவாமிஜி நாமம் சொல்லுங்கள்

சுவாமிஜி நாமம் சொல்லுங்கள் எங்கள்
சுவாமிஜி நாமம் சொல்லுங்கள்
வாழ்வு எனும் தோட்டமதை
வளமாய் மாற்றித் தந்திடும் எங்கள்
*(சுவாமிஜி நாமம்....)*

கெங்காதரானந்தர் சற்குரு நாமம்
சஞ்சலம் போக்கும் அருட்குரு நாமம்
முந்தை வினை தீர்க்கும் முதல்பெரு நாமம்
சிந்தனைதனை தூய்மை ஆக்கும் திருநாமம்
*(சுவாமிஜி நாமம்....)*

தரிசனம் கான விரைந்து சென்றால் அவர்
அன்புடன் அழைத்து அமரச் சொல்வார்
அருள் ஒளியாலே எம்துயர் துடைத்து
இன்முகம் காட்டி விடை தருவார்
*(சுவாமிஜி நாமம்....)*

கெங்காதரானந்தர் சந்நிதியில் மனம்
அமைதி பெற்றிடும் ஒரு நொடியில்
துன்பம் துயரம் பறந்து ஓடிட
இன்பம் அமைதி விரைந்து வரும்
*(சுவாமிஜி நாமம்....)*

கருணையின் வடிவம் அவர் உருவம் அது
தன் நிகர் இல்லா எழில் வடிவம்
கடவுளின் உருவின் மறுவடிவம் எங்கள்
சுவாமிஜி என்னும் அருள் வடிவம்
*(சுவாமிஜி நாமம்....)*



ஜெ. ஜெயமயூரகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றுத் தவளை மனப்பாங்கு

தவளை ஒன்று, ஒரு கிணற்றில், பல நாட்களாக வசித்து வந்தது. அந்தக் கிணற்றிலேயே பிறந்து, அங்கேயே வளர்ந்தது அந்தச் சின்னஞ் சிறிய தவளை. அந்தத் தவளை கண்களை இழந்து விட்டதா, இல்லையா என்று சொல்வதற்கு நல்ல வேளையாக, அங்கே பரிணாமவாதிகள் யாரும் இல்லை. ஆனால், நம் கதையைப் பொறுத்தவரையில், அதற்குக் கண்கள் இருந்தன என்றே வைத்துக் கொள்வோம். அந்தத் தவளை நாள்தோறும் நீரிலிருந்து புழு பூச்சிகளையும் கிருமிகளையும் வெகு சுறுசுறுப்பாக அகற்றிச் சுத்தப்படுத்தியது. அந்தச் சுறுசுறுப்பு, நம் தற்காலக் கிருமி ஆராய்ச்சியாளர்களுக்கு இருந்தால் அது அவர்களுக்குப் பெருமை தரும் விஷயமாகும். அவ்வாறே வாழ்ந்ததால் அத்தவளை சிறிது பருத்தும் விட்டது.



ஒரு நாள் கடலில் வாழ்ந்து வந்த தவளையொன்று அங்கு வந்து, அந்தக் கிணற்றில் விழுந்து விட்டது.

"நீ எங்கிருந்து வருகிறாய்?"

"கடலிலிருந்து"

"கடலா? அது எவ்வளவு பெரியது?" எனது கிணற்றளவு பெரிதாயிருக்குமா?" என்று கூறி, ஒரு பக்கத்திலிருந்து, எதிர்பக்கத்திற்குத் தாவிக் குதித்தது கிணற்றுத் தவளை.

'நண்பா ! இந்தச் சின்னக் கிணற்றோடு எப்படிக் கடலை ஒப்பிட முடியும் ?' என்று கேட்டது கடல் தவளை.

கிணற்றுத் தவளை மறுபடியும் ஒரு தாண்டு தாண்டி "நீ சொல்லும் கடல் இவ்வளவு பெரிதாயிருக்குமா?" என்று கேட்டது.

"சேச்சே ! என்ன முட்டாள்தனம்! கடலை உன் கிணற்றோடு ஒப்பிடுவதா?"

'சரி, சரி என் கிணற்றைவிட எதுவும் பெரிதாக இருக்க முடியாது. கண்டிப்பாக, இதைவிடப் பெரிதாக இருக்க முடியாது. இவன் சொல்வது அப்பட்டமான பொய்; இவளை வெளியே விரட்டு !' என்று கூறிவிட்டது அந்தக் கிணற்றுத் தவளை.

சிக்காக்கோ மாநாட்டில் வீரத்துறவி விவேகானந்தர்



நான் ஓர் இந்து. நான் என் சிறிய கிணற்றுக்குள் இருந்து கொண்டு, உலகம் முழுவதும் என் சிறு கிணறுதான் என்று நினைக்கிறேன். கிறிஸ்தவன் தன் சமயமாகிய சிறு கிணற்றுக்குள் உட்கார்ந்து கொண்டு, உலகம் முழுவதும் தன் கிணறுதான் என்று நினைக்கிறான். அவ்வாறே முகம்மதியனும் தன் சமயமாகிய சிறு கிணற்றில் உட்கார்ந்து கொண்டு, அது தான்முழு உலகம் என்று நினைக்கிறான். நம்முடைய இச்சிறிய உலகின் வேலிகளைத் தகர்த்தெறிய, அமெரிக்கர்களாகிய நீங்கள் எடுத்து கொண்டிருக்கும் பெரிய முயற்சிக்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். வருங்காலத்தில், உங்கள் விருப்பம் நிறைவேற இறைவன் அருள் புரிவான் என்று நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவே ! உனக்கொரு நாள் சாவு வந்து சேராதோ !



இடதுசாரிச் சிந்தனையாளரும் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி முன்னாள் ஆசிரியரும் சிறுகதை எழுத்தாளரும் மனித நேயமிக்க வருமான சுந்தரம்பிள்ளை இராசநாயகம் ஐயா அவர்கள் அண்மையில் சிவபதமடைந்து விட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நீண்ட காலமாக வெளிவரும் சமய இதழான ''இந்து சாதனம்'' பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சமயப்பணி ஆற்றியவர்.

''சந்நிதி'' யின் முதல் இதழ் வெளியாகியதும் அதன்பால் கவரப்பட்டு, அது பற்றி அவர் எழுதியஅருமையான விமர்சனம் தினக்குரல் பத்திரிகையில் வெளியானது.

''சந்நிதி'' யில் வெளியான ஆங்கிலக் கட்டுரைகளைச் சுவையாகவும், செறிவாகவும் அர்த்த புஷ்டியாகவும் அவர் மொழி பெயர்த்திருந்தமை கண்டு வியந்தோம்.

''சந்நிதி'' பற்றிய அவரது கருத்துக்கள் எமக்கு ஊட்டமளித்தன. உந்து சக்தியாக இருக்கின்றன. அவரை நேரில் சந்தித்து எமது நன்றியைக் கூற நினைத்தோம். ஆனால் அது கைகூடவில்லை. அவர் திடீரென நோயுற்று இறையடி சேர்ந்து விட்டார்.

நல்லறிஞர்கள், ஈரநெஞ்சினர்களை காலன் கவரும் போது நாம் பதறுகிறோம்.

''சாவே ! உனக்கொரு நாள் சாவு வந்து சேராதோ?'' என்று அங்கலாய்க்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

வே. வரதசுந்தரம்

# மக்கள் சேவை கடவுள் சேவை

மெக்கா மசூதியின் ஒரு மூலையில் அப்துல்லா படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தவன் திடீரென பேச்சுக் குரல் கேட்டு விழித்தான் அவனது தலைக்கு மேல் இரண்டு தேவதைகள் பேசிக் கொண்டிருந்தனர். அவை இரண்டும், இறைவனால் வாழ்த்தப் பெற்றவர் பெயர்களுக்குப் பட்டியல் தயாரித்து கொண்டிருந்தனர். அவை இரண்டும், இறைவனால் வாழ்த்தப் பெற்றவர் பெயர்களுக்குப் பட்டியல் தயாரித்து கொண்டிருந்தனர். ஒரு தேவதை மற்றொன்றினிடம் பலர் மெக்காவிற்குப் புனித யாத்திரை சென்று வந்த போதிலும் சிக்கந்தர் நகரத்திலுள்ள மஹபூப் என்பவன் தாம் இறைவனது வாழ்த்துக்களை பெற்றவர்களில் முதல்வனாக இருக்கிறான் என்று அறிவித்தது.

அதைக் கேட்டவுடன் அப்துல்லா சிக்கந்தர் நகரம் சென்று, மஹபூபைப் பார்க்க விரும்பினான் ! மஹபூப் ஊராரின் செருப்புகளைத் தைத்துத் தரும் ஒரு எளிய சக்கிலி அவன் மிக்க ஏழ்மை நிலையில் அன்றாட உணவிற்கே அல்லாடி வந்தான். அவனது வருவாய் வாய்க்கும் கைக்குமே எட்டாதிருந்தது. பல கடுமையான தியாகங்கள் புரிந்து, அவன் சில காசுகள் சேமித்து வைத்திருந்தான். ஒரு நாள், தான் அங்ஙனம் சேமித்த பொருள் அனைத்தையும் கூட்டி எடுத்துக் கொண்டு சிறந்த உணவுப் பண்டங்களாக வாங்கினான். இதை தன் இளம் மனைவி மனம் மகிழ அவள் எதிர்பாராத வெகுமதியாகத் தர திட்டமிட்டான்.

தான் வாங்கிய பண்டங்களோடு, மஹபூப் வீட்டிற்கு விரைந்து வந்து கொண்டிந்த போது, மிஞ்சிய பசியின் கொடுமையால், ஒரு பிச்சைக்காரன் கூக்குரலிடுவதைக் கேட்டான். அதற்கு மேல் அவனால் உறுதியான மனத்தோடு அதைக் கடந்து போக முடியவில்லை. எனவே, மிக விலையுயர்ந்த பண்டங்கள் இருந்த பாத்திரத்தை அப்படியே பிச்சைக்காரனிடம் தந்து விட்டான். அதோடு அங்கேயே அமர்ந்து, வறுமையின் கொடுமையினால் முகம் எல்லாம் சுருங்கி, விகாரமாக இருந்த அந்த பிச்சைக்காரன், ஆவலோடு சாப்பிடுவதைப், பூரித்து போன முகத்தோடு மகிழ்ச்சி துளும்ப பார்த்து கொண்டிருந்தான் மஹபூப்.

அவனுடைய இந்தச் சிறந்த செயலே, அவனுக்கு இறைவனது வாழ்த்து பெற்றோரின் பதிவேட்டில் முதலிடம் தந்தது மெக்கா நகருக்கு பயணம் சென்று, இலட்சக்கணக்கில் பணத்தைத் தானம் செய்து பெற முடியாத முதலிடத்தை அவன், தன்னலமற்ற சேவையால் பெற்றான்.

எனவே இறைவன், சேவைக்குப் பின்னர் தான் உணர்வுகளை மதிக்கிறார், ஆரவாரத்தையும், ஆடம்பரத்தையும் மல்ல என்பதையும் நாம் உணர்ந்து கொள்வோமாக !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல சமுதாயம்

காந்தி ஆசிரியர் பொ. கந்தையா



நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை. நல்லவர் ஒருவருக்காகப் பெய்த மழையை நாட்டிலுள்ள எல்லோரும் பயன்படுத்தித் தாமும் நல்லவராகலாம்.

நல்லவர்கள் பலபேர் சேரும் போதுதான் நல்ல சமுதாயம் உருவாகும். நல்லவர்கள் யார்? நல்லவர்கள் என்று அவர்கள் ஏன் அழைக்கப்படுகிறார்கள்? நல்லவர்களாய் வாழ்வது எப்படி? இக்கேள்விகளுக்குத் தக்க பதில் கண்டு பிடிப்பதில் தான் நல்ல சமுதாய அமைப்புத் தங்கி இருக்கிறது.

ஒரு கருமத்திலும் ஈடுபடாது தானும் தன்பாடுமாய் இருக்கும் ஒரு சிலரையும் நல்லவர்கள் என்று அழைக்கிறார்கள். இது தவறாகும். நல்ல சமுதாயத்தை அமைப்பதற்காகத் தனது உடல் பொருள் ஆவி அத்தனையும் தியாகம் செய்பவனே நல்லவன். மனிதப் பிடிறவி இதற்காகவே கிடைத்தது. தியாகச் செயலே சிறந்த தெய்வ வழிபாடாகும்.

தனி மனிதன் தனது உயர்வுக்காக உழைக்கிறான். முன்னேறுகிறான். அதே நேரத்தில் சமுதாயத்தில் பின் தங்கியவர்களுக்காகவும் சமுதாயத்தின் பொது நலனுக்காகவும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். தனி மனிதன் சுயநலத்தைக் குறைத்துப் பொது நலத்தைக் கூட்டிச் செல்வதில்தான். நல்ல சமுதாயம் அமைகிறது. பொது நலத்தில் தன்நலம் அடங்கி விடுகிறது.

தனி மனிதன் தனது அறிவு. சிந்தனை. உழைப்பு இவற்றை ஆண்டவனுடைய சொத்தாக ஏற்றுக் கொண்டு. தான் அவற்றின் தர்மகர்த்தாவாக நடந்து கொள்ள வேண்டும். அவற்றைத் தனக்காகவும். சமுதாயத்துக்காகவும் பகிர்ந்து கொள்ள வேண்டும். பல நல்லவர்கள் தமது அறிவு ஆற்றல் உழைப்பு இவற்றைப் பொது நலனுக்குத் தியாகம் பண்ணும் போது தான் நிச்சயம் நல்ல சமுதாயம் உருவாகும்.

நல்ல சமுதாயத்தில் சாதி. சமயம். பாஷை இவற்றால் சண்டைகள் ஏற்படாது ஒவ்வொருவரும் தமது பண்பாட்டைக் காத்துக் கொண்டு மற்றவர்களையும் மதித்து ஒன்று சேர்ந்து ஒள்றுமையாக வாழ வேண்டும் - பணக்காரர், வறியவர். படித்தவர் பாமரர் என்ற வித்தியாசமின்றிச் சகோதரர்களாய் வாழ வேண்டும். கெட்டவர்களைக் கழித்து விடாது நாளடைவில் அவர்களைத் திருத்தி நல்லவர்களாக்க வேண்டும். "கடையனுக்கும் கடைத்தேற்றம்" என்ற சர்வோதயக் கொள்கை சமுதாயத்தில் வேரூன்ற வேண்டும். காந்தியடிகளின் சீடரும் நல்ல சமுதாயச் சிற்பியுமான வினோபா அடிகளின் கருத்துக்களைப் படித்து சிந்தித்துச் செயலாற்றி சர்வோதய சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

சமயத்தின் பேரால் நடக்கும் சடங்குகளும். அவற்றிற்கான அதிக செலவுகளையும் மட்டுப்படுத்த வேண்டும். சடங்குகளால் மாத்திரம் சமய வாழ்வு பூர்த்தியாகாது. சமய குருமார்கள் மக்களைத் தெய்வீ கத்தில் ஈடுபடுத்த வேண்டும்.



காந்தி ஆசிரியர் பொ. கந்தையா

ஆச்சிரமங்களோடு தொடர்பு கொண்டு மக்கள் தெய்வீக வாழ்க்கையைத் தேட வேண்டும்.

சமயமில்லாத வாழ்க்கை வேர் இல்லாத மரத்துக்குச் சமம் என்றார் காந்தியடிகள். சமய வாழ்வுள்ள சமுதாயம் உயிருள்ள மரம் போல் ஓங்கி வளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு வாழ்க!

பவள விழாக் காணும் மூத்த எழுத்தாளர் 'சிவநெறிச் செம்மல்' வை. அநவரத விநாயக் மூர்த்தி அவர்கள் தமது 75 ஆவது அகவையை 31. 08. 98 அன்று நிறைவு செய்கிறார்கள்.



தமது இளம் வயதிலேயே எழுத்துப் பணியை ஆரம்பித்த இவர், இற்றை வரை ஈழத்திலும், தமிழ் நாட்டிலும் வெளிவரும் சஞ்சிகைகளுக்கும் சிறப்பு மலர்களுக்கும் சமயம், இலக்கியம், வரலாறு, ஆராய்ச்சி ஆகிய துறைகளில் பல அருமையான கட்டுரைகளை எழுதி அறிஞர் பெருமக்களுடைய பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். மேலும், 'நவராத்திரியும் கலைமகள் வழிபாடும்', 'கல்விச் செல்வி', 'நக்கீரர் தந்த நன்முருகாற்றுப்படை' யாழ்ப்பாணம் திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வரலாறு', தேவியர் மூவர் தோத்திரப் பாடல்கள்', 'சிவயோக சுவாமிகளும் அவர் அருளிய போதனைகளும் என்னும் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

சமய நிறுவனங்களிலும், பொறுப்பு வாய்ந்த பதவிகளை ஏற்று அரும் பெரும் சேவையாற்றிய சமயத் தொண்டராவர். 'உதயம்' என்னும் இலக்கிய சஞ்சிகையின் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றியவர். தமிழகத்தில் பத்தாம் வகுப்பு பாடப் புத்தகத்தில் இவரது கட்டுரை இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திரு. அநவரத விநாயக மூர்த்தி அவர்களின் சமய, சமூகப் பணிகளைப் பாராட்டி, 'யாழ்ப்பாணம் திருநெல்வேலி அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வரலாறு' நூல் வெளியீட்டு விழாவின் போது அன்னாருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன் நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன இரண்டாவது குரு மஹா சந்நிதானம் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள்'சிவநெறிச் செம்மல்' என்னும் விருதினை வழங்கினார்.

க. சர்வானந்தா

இணுவையூரைப் பிறந்தகமாகக் கொண்ட திரு. மூர்த்தி அவர்கள், பழுத்த தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்தில் வந்தவர். தணிகைப் புராண உரையாசிரியர் மஹா வித்துவான் பொ. அம்பிகை பாத உபாத்தியாயர் அவர்களின் பேரனும் இயற்றமிழ் ஆசிரியர் திரு. வ. க. வைத்தியலிங்கபிள்ளை அவர்களின் இளைய மைந்தனும் ஆவார்.

எழுத்துப் பணியில் அறுபது ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள இப் பெரியாரது சைவத்தமிழ்ப் பணி மேலும், மேலும் சிறந்தோங்க வேண்டும் என்று வேழ முகத்து விநாயகப் பெருமானைப் பிரார்த்திப்பதோடு 'சிவநெறிச் செம்மல்' பல்லாண்டு வாழ்க! வாழ்க!! என்று வாழ்த்துகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு நாதர் பார்வையில் யார் நல்ல அயலவன்



ஒரு மனிதன் ஜெருசலம் நகரத்திலிருந்து ஜெரிக்கோ நகரத்துக்குப் போய்க் கொண்டிருந்தான். அவன் ஒரு யூதன் அவன் அங்ஙனம் போய்க் கொண்டிருந்த போது திருடர்கள் திடீரென அவன் மேல் பாய்ந்தனர். அவனைக் கீழே தள்ளி விட்டு அவனது பணத்தையும், உடைகளையும் பறித்துக் கொண்டனர். அவனை அடித்த அடியில் அவனுக்குப் பாதி உயிர் போய் விட்டது எனலாம். அப்படியே அவனைச் சாலை ஓரத்தில் போட்டு விட்டு களவாடிய பொருள்களுடன் சென்று விட்டனர்.

சாலையின் மறுபுறம் ஒரு பாதிரியார் சென்றார். அவர் அவனைக் கண்டும் காணாதது போல நிற்காமல் போய் விட்டார். அவனுக்காக அவர் ஓர் உதவியும் செய்யவில்லை.

மற்றொருவர் இறையுணர்விலும் ஆன்மீகத்திலும் மிகவும் ஈடுபட்டவர், அந்த சாலை வழியே வந்தார். அவர் லெவிட் இனத்தைச் சேர்ந்தவர். ஜெருசலம் கோவிலில் பணியாற்றுபவர். அவராவது அடிப்பட்டவனுக்கு உதவ நின்றாரா? இல்லை ! பாதிரியார் செய்ததைப் போலவே அவரும் செய்து விட்டார். துன்புறுகிறவனுக்கு ஓர் உதவியும் செய்ய அவர் முன் வரவில்லை. அவர் செய்தது சரியான செயல் என்று எப்படி கூறுவது?

இறுதியாக ஒரு சமாரிட்டன் சாலை வழியே வந்தான். கடுமையாக தாக்கப் பட்டுபடுத்துக் கிடந்த யூதனை அவன் பார்த்தான். பெறும் பாலும் சமாரிட்டன்களும் யூதர்களும் ஒருவரை ஒருவர் விரும்புவதில்லை. அதனால் இப்போது வந்த சமாரிட்டனும் ஓர் உதவியும் செய்யாமல் அவனை அப்படியே விட்டு சென்று விடுவானா? தனக்குள், "நான் ஏன் ஒரு யூதனுக்கு உதவி புரிய வேண்டும்? நான் அடிபட்டுக் கிடந்திருந்தால் அவன் எனக்கு உதவுவானா?" என்று சொல்லிக் கொள்வானா?

நல்லது, இந்த சமாரிட்டன் அப்படிப்பட்டவன் அல்ல. சாலை ஓரத்தில் கிடந்தவனைச் சென்றுப் பார்த்தான். அவனுக்காக மிகவும் பரிதாபப்பட்டான். அந்த நிலையில் அப்படியே அவனை ஒதுக்கிச் சென்று அனாதை போல சாவதற்கு விடமாட்டான் அவன்.




MANO TRADERS
REFINED PURE
GINGELLY OIL
விளக்கிய சுத்தமான
நல்லெண்ணெய்
M. Selvanayagam
155-17, Messenger Street,
Colombo-12.
Tel : 449233.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் சமாரிட்டன் தன் ஒட்டகத்தின் மீதிருந்து இறங்கினான். அந்த மனிதனை அணுகினான். அவனுடைய புண்களைத் துடைத்து விட்டான். அவற்றின் மேல் எண்ணையும், திராட்சைஷ சாறும் விட்டான். அவை புண் விரைவில் நலமுற உதவுவன. அந்தப் புண்களுக்குத் துணியைக் கிழித்து கட்டுகள் போட்டான். பின்னர் அவனை மெதுவாகத் தூக்கி வந்து, ஒட்டகத்தின் மீது அமர்த்தினான். மெதுவாக இருவரும் பயணம் சென்றனர். ஒரு சிறு உணவு விடுதியின் முன் வந்து நின்றனர். அங்கு ஓர் அறை எடுத்து, அந்த யூதனை அதில் தங்க வைத்தான். தானும் உடன் தங்கி அவனை அன்போடு கவனித்துக் கொண்டான்.

ஏசு தன்னிடம் கேள்வி கேட்டு, இதுவரை நின்று தன்னிடம் பேசிக் கொண்டிருந்த மனிடம், "சாலை வழியே சென்ற மூன்று பேரில் யார் நல்ல அண்டை வீட்டுக்காரன் என்று நீ நினைக்கிறாய் என்று கேட்டார். அதற்கான விடை என்னவாக இருக்கும்? அந்தப் பாதிரியாரா? அடுத்து வந்த லெவிட்யா? இறுதியாக வந்த சமாரிட்டனா?

அந்த மனிதன் உடனே, "சமாரிட்டன் தான் நல்ல அயலவன் அடிப்பட்டவனுக்காக அங்கு நின்று உதவி,பரிவோடு கவனித்து பாதுகாத்தான்" என்று கூறினான்.



யாழ்ப்பாணத்தில் டிரிமர் பாலர் பாடசாலை கிறிஸ்மஸ் விழாவில் செல்வி. சிவகாமி வித்தியாதரன் அன்னை மரியாளாகத் தோன்றி யேசு பாலனை மடியில் வைத்திருக்கும் காட்சி.

"நீ கூறியது மிகவும் சரியே. அதனால் போய் அதோ போல நீயும் செய்துவா," என்று கூறினார் ஏசு டுருமுறு 10 : 25-27.

இது ஒரு அருமையான கதையல்லவா? நம்மை அடுத்துள்ளவர் யார் என்று தெளிவாக இந்த கதை நமக்கு உணர்த்துகிறது. நம்மை அடுத்துள்ளவர் என்பது நம்முடைய நண்பர்கள் மட்டும் அல்ல. நம் நாட்டைச் சேர்ந்தவர் மட்டுமல்ல. எல்லா வகையான உலக மக்கள் அனைவருமே நம்மைச் சார்ந்துள்ளவர்கள் தாம்.


## சோதிடக் கணிப்பீடுகள்



உங்கள் ஜாதகங்களை கணனியில் (Computer) துல்லியமான கிரகஸ்புடங்களுடன் கணித்து இராசி, நவாம்ச, பாவ, சப்தவர்க்க, அஷ்டகவர்க்க, கிரக பலம், திசா, புததி, அந்தர விபரத்துடன் பெறலாம்.

*வெளிநாட்டில் பிறந்தவர்களின் ஜாதகங்கள் அந்நாட்டு நேரத்தில் கணிக்கப்படுகின்றன.*

*உங்கள் ஜாதகங்களிற்குரிய விரிவான வருடப்பலனை எம்மிடம் அறிந்து கொள்ளடலாம். Computer Floppy Diskல் பதிவு செய்தும் ஜாதகங்களைப் பெறமுடியும். ஜாதகம் கணிக்க நீங்கள் தர வேண்டிய விபரம் : பெயர், பிறந்த திகதி, நேரம், பிறந்த இடம் மட்டுமே.*

**VIGNES**

**465/1A, Havelock Road, Colombo-6. Sri Lanka.**
**Telephone : 074-513233 Foreign Callers Dial : 00 9474 513233**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய வாழ்வு தரும் யோகாசனம்

உடலைத் தளர்த்துவதற்கான சில பயிற்சிகள்.

இவைகளைச் செய்வதினால் உடல் தசைகள் ஆரோக்கியம் பெறுகின்றன. முதுகு முள்ளெலும்பு வலுவடைகின்றது. சுவாசப் பைகள் விரிவடைகின்றன. உற்சாகம் உண்டாகின்றது. ஆசனம் செய்வதை இலகுபடுத்துகின்றது.

1. நின்ற இடத்தில் ஓடுதல்.

*முறை 1: (கால்களைப் பின் பக்கம் தூக்கி ஓடுதல்)*

கைகள் இரண்டையும் தொங்க விடாது விரல்களை மூடியவாறு மார்பில் இரண்டு கைகளையும் வைக்கவும். உடல் தளர்ந்திருக்கட்டும். மனம் அமைதியாக இருக்கட்டும். மெதுவாக ஓட்டத்தை ஆரம்பிக்கவும். பின்பு வேகமாகச் செய்யவும். குதிக்கால்கள் பிருஷ்ட பாகத்தில் தொடும் வண்ணம் கால்களை மேலே தூக்கி நின்ற இடத்திலேயே ஓடவும்.

*முறை 2: (கால்களை முன் பக்கமாகத் தூக்கி ஓடுதல்.)*

முறை ஒன்றில் குறிப்பிட்டது போன்றே கையை வைத்திருக்கவும் கால்களை முன்பக்கம் தூக்கிய வண்ணம் நின்ற இடத்தில் ஓடவும். முழங்கால்கள் மார்பைத் தொடுவது போல மேலே வரவேண்டும்.

*முறை 3: (கால்களை பக்க வாட்டில் தூக்கி ஓடுதல்.)*

அதேபோன்றே நின்றுகொண்டு கால்கள் இரண்டும் பக்க வாட்டில் வரக்கூடியதாக ஓடவும்.

குறிப்பு :

முடிந்த அளவு செய்யவும். உடம்பு களைக்கும் வரை செய்வதைத் தவிர்க்கவும் எக்காரணத்தைக் கொண்டும் சுவாசத்தை அடக்க வேண்டாம். நின்ற இடத்தில் நின்று ஓடுவதை நிறுத்தியதும் இரண்டு கைகளையும் இரண்டு தொடைகளிலும் வைத்துச் சற்றுக்குனிந்து மூக்கினால் மூச்சை உள்ளிழுத்து மிகவேகமாக வாயினால் மூச்சை வெளிவிடவும். 6–10 தடவைகள் செய்யவும். பயிற்சி முடிந்ததும் கண்களை மூடி மனதை அமைதிப்படுத்தி ஓய்வெடுக்கவும்.

கைகள் இரண்டையும் சுழற்றும் பயிற்சி :

நிமிர்ந்து நிற்கவும் கைகள் இரண்டையும் முன்பக்கம் நோக்கிச் சுழற்றவும். 6–10 தடவைகள் பின் பின்பக்கம் நோக்கிச் சுழற்றவும் 6–10 தடவைகள், குறுக்குப் பாதையாகச் சுழற்றவும் எதிர்த்திசையாகச் சுழற்றவும். படிப்படியாக வேகத்தை அதிகரித்துச் செய்யவும். அதேபோன்று படிப்படியாக வேகத்தைக் குறைக்கவும் (சுவாசம் சாதாரணமாக நடக்கட்டும்) பயிற்சி முடிந்ததும் கண்களை மூடிமனதை அமைதிப்படுத்தி ஓய்வெடுக்கவும்.

இடுப்புக்கான பயிற்சிகள்.

*பயிற்சி 1:*

நிமிர்ந்து நிற்கவும் சுவாசத்தை உள்ளிழுத்துக் கொண்டு கைகள் இரண்டையும்



கா. சந்திரலிங்கம்.
*விவேகானந்த கேந்திர யோக ஆராய்ச்சி நிறுவனத்தில் யோகாப் பயிற்சி பெற்றவர்.*

மேலே தூக்கவும். சுவாசத்தை வெளிவிட்டுக் கொண்டு முன்னால் வளையவும் கைகள் இரண்டும் தரையைத் தொடக்கூடியதாக இருக்க வேண்டும். மீண்டும் சுவாசத்தை உள்ளிழுத்துக் கொண்டு மேலே வளைந்து பின்னால் வளையவும் படிப்படியாக வேகத்தை அதிகரிக்கவும். 10 – 12 தடவைகள் செய்தால் போதுமானது. முடிந்ததும் கண்களை மூடி மனத்தை அமைதிப்படுத்தி ஓய்வெடுக்கவும்.

*பயிற்சி 2:*

நிமிர்ந்து நில் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு சற்றுக் கால்களை அகலமாக வைத்துக் கொள்ளவும். உடல் தளர்ந்திருக்கட்டும். முழங்கால்கள் மடியாமல் வைத்துக் கொண்டு இடுப்பை வலதுபக்கம் சுழற்றவும். 6–10 தடவைகள் பின்பு இடதுபக்கம் சுழற்றவும். சற்று ஓய்வெடுக்கவும்.

கைவிரல்களுக்குப் பயிற்சிகள்:

நிமிர்ந்து நிற்கவும் – கைகளை முன்னால் நீட்டவும் விரல்களை நன்கு நிமிர்த்தவும். விரல்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பகுதிகளையும் மொளியையும் மடித்துக் கொண்டே உள்ளங்கையை விரல்களின் நுனி தொடும்படி செய்யவும். உடனடியாக விரல்களை நிமிர்த்திப் பழைய நிலையை அடையவும். இவ்வாறு மீண்டும் மீண்டும் செய்க. 6–10 தடவைகள் சற்று ஓய்வெடுக்கவும்.

**மணிக்கட்டுக்கான பயிற்சி :**

நிமிர்ந்து நின்று கைகள் முன்னால் நீட்டி விரல்களை மடிக்கவும். இப்பொழுது கையின் முட்டியை வலது பக்கமாகச் சுழற்றவும். இதேபோன்று இடது பக்கமாகச் சுழற்றவும்.

**கழுத்துக்கான பயிற்சிகள் :**

நிமிர்ந்து நிற்கவும். கைகளைப் பின்னால் கொண்டு சென்று வலதுகை மணிக்கட்டை இடது கையால் பிடிக்கவும். உடல் தளர்ந்த நிலையில் இருக்கட்டும். இப்போது

1. கழுத்தை வலதுபக்கமாகவும், இடது பக்கமாகவும் மெதுவாகத் திருப்பவும். 6–10 தடவைகள்.
2. மேல்நோக்கிக் கழுத்தைக் கொண்டு செல்லவும். கீழ் நோக்கிக் கொண்டு வரவும். 6–10 தடவைகள்.
3. கழுத்தை வலது பக்கமாக மெதுவாகச்சுழற்றவும். இதேபோன்று இடதுபக்கம் சுழற்றவும் 6–10 தடவைகள்.சற்று ஓய்வு எடுக்கவும் தலை சுற்றுவதுபோல் இருந்தால் கண்களுக்கு நேராகக் கைகளை விரித்துக் காண்டு உள்ளங்கையைப் பார்க்கவும்.

**கால் மூட்டுக்களுக்கான பயிற்சிகள்.**

*பயிற்சி 1 :*

நிமிர்ந்து நிற்கவும். வலது காலை முன்னும் பின்னுமாக வீசவும். படிப்படியாக வேகத்தை அதிகரிக்கவும். இதே போன்று இடதுகாலையும் செய்யவும் சற்று ஓய்வெடுக்கவும்.

*பயிற்சி 2 :*

இரண்டு கால்களையும் நீட்டியவாறு கீழே உட்காரவும். கால்களை ஒரு மீற்றர் அகலமாக வைத்துக் கொள்ளவும். உடல் தளர்ந்திருக்கட்டும். கைகள் இடுப்பின் பின் பக்கமாகத் தரையில் ஊன்றியபடி இருக்கட்டும். இப்பொழுது கால்கள் இரண்டையும் அசைக்கவும். (10 தடவைகள்)

*பயிற்சி 3 :*

பாதங்களை நிமிர்த்தி வைத்துக் கொள்ளவும். இப்பொழுது பாதங்களை முன்பக்கமாகத் தள்ளவும். மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரவும். இவ்வாறு மீண்டும் மீண்டும் செய்யவும். (10தடவைகள்)

*பயிற்சி 4 :*

பாதங்களை வலதுபக்கமாகச் சுழற்றவும் இதேபோன்று இடதுபக்கமாகச் சுழற்றவும். 6–10 (10தடவைகள்.)

**வயிற்றுக்கான பயிற்சிகள் :**

*பயிற்சி 1.*

மல்லாந்து படுக்கவும். இரண்டு கைகளையும் கோர்த்த வண்ணம் பிடரியின் பின்பக்கம் வைக்கவும். சற்றுத் தலையை மேலே தூக்கிக் கொள்ளவும். இப்பொழுது வலது காலை மேலே தூக்கிப் பதிக்கவும். இரண்டு கால்களையும் மாறிமாறிச் செய்யவும் பயிற்சி முடியும் வரை கால்கள் பூமியைத் தொடாதவாறும் முழங்கால்கள் மடியாதவாறும் பார்த்துக் கொள்ளவும். சற்று ஓய்வெடுக்கவும்.

*பயிற்சி 2.*

இதே போன்று கழுத்தைச் சற்றுத்தூக்கி வைத்துக் கொண்டு சைக்கிள் ஓடுவது போன்று சற்று நேரம் முன்பக்கமாகவும் சற்று நேரம் பின்பக்கமாகவும் செய்யவும். சற்று ஓய்வெடுத்துக் கொள்ளவும்.

**தளர்த்தும் பயிற்சிகள் முடிந்ததும் உடலுக்கு ஓய்வு கொடுத்தல் :**

தரையில் மல்லார்ந்து படுக்கவும். கால்கள் அகட்டியவாறு வைத்துக் கொள்ளவும். கைகளைப் பக்கவாட்டில் வசதிக்கேற்ப வைத்துக்



கொள்ளவும். உடல் நன்கு தளர்ச்சியடைந்து இருக்கட்டும். கண்களை மூடியவண்ணம் மனத்தை அமைதிப்படுத்தி தன்னை மறந்த நிலையில் நன்கு ஓய்வெடுங்கள். மனம் முழுக்க முழுக்க உடலிலே நிலைத்து நிற்கட்டும். இதனைச் சாந்தி ஆசனம் அல்லது சவாசனம் என அழைப்பர். இவ்வாசனம் அதிசக்தி வாய்ந்த ஆசனம். இதன் நுட்பங்கள் தொடரும் கட்டுரைகளில் விளக்கப்படும்.

*தொடரும்..............*

**ஆரோக்கியமே நிறைந்த செல்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்குவேலி சிவஞானப்பிள்ளையார்



சைவமும் தமிழும் சிறந்தோங்கி விளங்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சங்குவேலி என்னும் அழகிய கிராமத்தில் சிவஞானப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் இறைபக்தி நிரம்பிய ஸ்ரீமான் கா. வயித்திலிங்கம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, இன்னமும் அவருடைய சந்ததியினரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. 1918 இல் திருப்பணி யாவும் முற்றுப்பெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெற்ற இக்கோயில், கருங்கல் திருப்பணியினால் அமைக்கப் பெற்றிருப்பது தனிச் சிறப்பாகும். இதற்கான கருங்கல் உட்பட்ட தளபாடங்கள் யாவும் அக் காலத்தில் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டவையாகும். மூல விக்கிரகங்கள் முதலிய விக்கிரகங்கள் யாவும் சாஸ்திர முறைப்படி பிரதிஷ்டை பண்ணப்பட்டுள்ளன. அவ்வாறு அமைந்துள்ள உமாதேவியார் சமேத நடேசர் விக்கிரகம் பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாகும். ஆவணிப் பௌர்ணமியைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு 10 நாட்கள் மகோற்சவம் ஆண்டுதோறும் சிறப்பாக நடந்தேறி வருகின்றது.

இக் கோயிலில் நவராத்திரி, சிவராத்திரி, சதுர்த்தி, கந்தசஷ்டி, விநாயகசதுர்த்தி, திருவெம்பாவை நடேசர பிஷேகம், திருக்கார்த்திகை ஆகியவைகள் விமரிசையாக கொண்டாடப்படும். இவ்வாலயத்தில் மூன்று காலம் பூசைகளும் கைங்கரியங்களும் கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாக ஆலய பிரதம சிவாசாரியார். பாலசுப்பிரமணியக் குருக்களால் செவ்வனே நடத்தப்படுகின்றன. காலத்துக்குக் காலம் கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம் ஊர்மக்கள் ஒத்துழைப்புடன் நடந்தேறியுள்ளன.

தென்னை, பனை, மா, பலா, வேம்பு ஆகிய விருட்சங்களாலும் வளமான வயல்களாலும் சூழப்பட்டு சோலையெனத் திகழும் தொன்மை மிகுந்த சங்குவேலிக் கிராமத்தில் வாழ்மக்கள் அனைவரும் சிவஞானப் பிள்ளையாரின் கிருபாகடாட்சத்தினால் யுத்தகாலத்தில் கூட அதிக பாதிப்பின்றி சீரும் சிறப்புமாக வாழ்கின்றார்கள். எனவே நாமும் சிவஞானப்பிள்ளையாரைப் போற்றி வழிபடுவோமாக.



செல்வி. தாரணி இரத்தினவேல்
*ஆண்டு 4B,*
*கொழும்பு இந்து மகளிர் கல்லூரி,*
*கொழும்பு–6.*

## திருவள்ளுவர்

திருவள்ளுவர் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருமயிலாப்பூரில் பிறந்தார். தந்தை பெயர் பகவான். தாயின் பெயர் ஆதி. இவரின் பெற்றோர்கள் தாம் பெற்ற மக்களை பெற்ற இடங்களிலேயே விட்டு விட்டு செல்லும் வழக்கம் உடையவர்கள். இவர் உறையூரில் உள்ள வள்ளுவ சேனையில் வளர்ந்தமையால் இவருக்கு வள்ளுவர் என்ற பெயர் வழங்கலாயிற்று. இவரிடம் காணப்பட்ட நற்குணங்கள் காரணமாக மக்கள் இவர் மீது அன்பும் மதிப்பும் உடையவராய் இருந்தனர். இவர் காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்த மார்க்கா சகாயர் மகள் வாசுகியை திருமணம் செய்தார். இவர் பரந்த அறிவும் நுட்ப புத்தியும் உடையவர். இவர் திருக்குறள் என்னும் நூலை இயற்றினார். அந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் பற்றி விரிவாக சித்தரிக்கிறது. திருக்குறளை மதுரை தமிழ் சங்கத்தில் அரங்கேற்றினார். இந்நூலின் பெருமை உணர்ந்த புலவர்கள் இவரை தெய்வப் புலவர் என்றனர். திருக்குறளை பொய்யாமொழி, தமிழ்மொழி, பொதுமறை எனும் காரணப் பெயர்களால் புகழ்ந்தனர். இவரின் பெருமையை அறிந்து திருமயிலாப்பூரில் இவருக்கு திருவுருவச் சிலையொன்று அமைத்து மக்கள் இன்றும் இவரை வணங்கி வருகின்றார்கள்.



வைஷ்ணவி இராமச்சந்திரன்
*ஆண்டு – 4,*
*பிஷப்ஸ் கல்லூரி,*
*கொழும்பு – 3.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இங்கிலாந்திலே இயற்கை மருத்துவத்துறையில் சாதனை படைத்து புகழீட்டிய மருத்துவ கலாநிதி நமசிவாயம் சத்தியமூர்த்தி அவர்களுக்கு "THE FREEDOM OF THE CITY, OF LONDON" என்ற புகழ் பூத்த விருது அண்மையில் வழங்கப்பட்டது. திருகோணமலை தமிழ் அறிஞர் பண்டிதர் நமசிவாயம் அவர்களின் புதல்வரான இவர் திருகோணமலை இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். இளவரசி டயானா, தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா முன்னாள் பாரதப் பிரதமர் ஜவர்கலால் நேரு ஆகியோரும் இவ் விருதினை முன்னர் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னார் விருது பெறுவதை படத்தில் காணலாம்.


# *Mediquick (Pvt) Ltd*

*Specializing in medical technology....*


***We are a service oriented organization, giving you the best of medical care 24 hours of the day, through out the year. We are a Total Health Care Unit providing :***

- **Executive Medical Checkups at your doorstep (E.C.G, X-rays & Bloos tests).**
- **Mobile Hospital to meet any medical need.**
- **24 hr Emergency Ambulance service.**
- **Valid reports recognized by Specialists Insurance companies.**
- **Free dietary advice.**
- **Home-visiting Doctors.**
- **Centrally located Modern Hospital.**
- **Channeling Consulations and Specialists available through out the day.**
- **7 Diagnostic Centers within city limits.**

*Some of the Diagnostic Centers :-*

| | | |
|---|---|---|
| Mediquick Lab | - | 535, Negombo Road, Wattala. Tel : 930913, 931084, 936104. |
| Neptune Hospital | - | 186, Park Road, Col-5, Tel : 074 - 510918, 590200-1, 587715. |
| St. Anne's | - | 10, De Krester Place, Colo-4, Tel : 074 - 510919, 581719. |
| Global Care Clinic | - | 14 57th Lane, Col-6, Tel : 074 - 510631, 074 - 514724. |
| Borupana Medical | - | 1,3rd Cross Lane, Borupana Road, Ratmalana. Tel : 074 - 204724. |
| Mediquick Diagnostic | - | 16 Galle Face Court - 2, Colo - 3, Tel : 327468. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிநாத் கோயில்



சுவாமி நித்தியானந்தா



சுவாமி சித்தானந்தாஜி

**Rs. ரூபா**
**30/-**

Edited by : V. Varathasuntharam
Published by : Sivagami Ammal Publications
39, 36th Lane, Wellawatte.
Sri Lanka. Tel : 596253.
Printed by : Unie Arts (Pvt) Ltd
No-48B. Bloemendhal Road,
Colombo-13. Tel : 330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org